விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 11 ஞாயிற்றுக்கிழமை (28.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 313

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(அ-4201)

## ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக

# நம்பிக்கையில்லா பிரேரணை!



### ஐ.தே.க தலைவர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரும் யோசனை இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது. அலரி மாளிகையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். (15-ம் பக்.)

## கிணற்றில் விழுந்த மாணவி உயிரிழப்பு

### காரைநகரில் சோகம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தவறி விழுந்த மாணவி ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் யாழ் காரைநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது. 15

## ரணிலின் பாதுகாப்பு அதிரடியாக நீக்கம்!

### ஜனாதிபதி மைத்திரி உடனடி உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விற்கு வழங்கப்பட்டிருந்த 16

## அமைச்சரவை கலைக்கப்பட்டது

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

புதிய பிரதமர் சத்தியப்பிரமாணம் செய்துள்ளதால், ஏற்கெனவே இருந்த அரமைச்சரவை தற்போது கலைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. எனவே அனைத்து 15

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

## நாட்டு மக்களுக்கு இன்று விசேட உரை

### நாளை புதிய அமைச்சரவை சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)



தற்போழுது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை தொடர்பில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு இன்று விசேட உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபே 15

## வெளிநாட்டு தூதுவர்களுடன் ரணில் நேரில் சந்தித்து பேச்சு

### அரசியல் நெருக்கடி தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை வெளிநாட்டுத் தூதுவர்கள் நேரில் சென்று சந்தித்தனர்.

அலரிமாளிகைக்கு நேற்று மாலை சென்ற வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இராஜ 15

## சரியான நேரத்தில் முடிவு எடுக்கப்படும்

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

(கொழும்பு)



பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் ஆதரவு கோரியுள்ளனர்.

குறித்த இருவரும் 15

## நடுநிலைமை வகிப்போம்!

### ஜே.வி.பி அறிவிப்பு

(கொழும்பு)

தமது ஆதரவை எந்த கட்சியினருக்கும் வழங்கப்போவதில்லை என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க கொழும்பில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் வைத்து இதனை தெரிவி 15

## அரசியலமைப்புக்கு அமைய தீர்மானம் பெறப்படும்!

### சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டிலே ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி, ஸ்திரமற்ற சூழ்நிலைக்கு அரசியலமைப்புக்கு அமைய தீர்மானமொன்றினை பெற்றுக் கொடுக்கவுள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய நாட்டு மக்களுக்கு விசேட அறிக்கையூடாக தெரிவித்துள்ளார்.

அவருடைய அறிக்கை 15

மகாராஜா பொதிகள் சேவை
Parcel.lk DHL GTV Express SRI LANKA aramex
ஏனைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்

| | |
|---|---|
| லண்டன் | 600/- |
| கனடா | 900/- |
| ஜெர்மனி | 650/- |
| சுவிஸ் | 900/- |
| அவுஸ்திரேலியா | 800/- |

11Kgக்கு மேல் 1Kgக்கான கட்டணம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 225,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி. |
| 021 2224338 021 4925024 | 021 4930099 | 024 4930200 076 6908961 | 021 4930330 |

(அ-4251)

## மகிந்த பிரதமரானதற்கு அமெ. மகிழ்ச்சியடையாது

### நியூயோர்க் டைம்ஸ் செய்தி

(நியூயோர்க்)

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் குறித்து அமெரிக்க அதிகாரிகள் கவலையடைவார்கள் என நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இந்தியாவும் சீனாவும் இலங்கையின் செல்வாக்கை பெறுவதற்கான கடும் போட்டியில் ஈடுபட்டுள்ளன, மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகள் வலுவடைந்தன என தெரிவித்துள்ள நியூயோர்க் டைம்ஸ், மகிந்த ராஜபக்ஷ 16

## ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்குக

### ஐ.தே.கவினரிடம் மகிந்த வேண்டுகோள்

(கொழும்பு)

புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கொழும்பு, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து நேற்று அதிகாலை உரையாற்றினார்.

இதன்போது, நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம் ஜனநாயக 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஐ.தே.க கொழும்பில் ஆர்ப்பாட்டம்

ஜனநாயகத்தை பாதுகாக்க மக்கள் சக்தியை கொழும்புக்கு திரட்டி, வீதியில் இறங்கி போராடவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் இரு தினங்களுக்குள் மக்கள் சக்தியை கொழும்புக்கு திரட்டவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)


## பணியாளர்கள் வேண்டுகை

- கணினி இயக்குநர்கள்-பெண்கள் (அச்சகங்களில் பணியாற்றியவர்கள் விரும்பத்தக்கது)
- வரவேற்பாளர்கள்-பெண்கள் (கணினி அறிவு விரும்பத்தக்கது)
- புத்தகம் கட்டுநர்கள்-பெண்கள் (அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை)
- அலுவலக உதவியாளர்கள்-ஆண்கள்

நேர்முகத்தேர்வு: 30-31.10.2018

சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்

**ஷாம்பவி பதிப்பகம்** 265, 267 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்புக்கான அரிய சந்தர்ப்பம்

எமது நிறுவனத்தில் புதிய கிளைகளுக்கான முகாமையாளர், உதவி முகாமையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்கள் புதிதாக இணைக்கப்படவுள்ளார்கள். A/L, O/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஏனையவர்களுக்கு அடிப்படை பயிற்சி நெறியுடன் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும்.

**புதிய கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ள இடங்கள்**

- வவுனியா மாவட்டம் (வவுனியா, செட்டிக்குளம்)
- கிளிநொச்சி மாவட்டம் (கிளிநொச்சி, பரந்தன்)
- மன்னார் மாவட்டம் (மன்னார், பேசாலை)
- முல்லைத்தீவு மாவட்டம் (முல்லைத்தீவு, மாங்குளம்)
- திருகோணமலை
- கண்டி, ஹற்றன், அவிசாவளை (இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் EPF, ETF மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வசதிகள், மருத்துவ வசதிகள் பெற்றுத்தரப்படும்.

தொடர்புகளுக்கு:0214503287, 0764144030 (6190)

## ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

(வட்டுக்கோட்டை, சங்கரத்தை சந்திக்கு அருகில்)

**திருமணத்தடை, புத்திரபாக்கியம்/ புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள். வவுனியா பண்டாரிக்குளத்திலும்...**

***(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய் - வவுனியா)***

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்: 076 328 7119 (C-4263)

## டுபாய் வேலைவாய்ப்பு

எஞ்சின் & கியர் மெக்கானிக், மோட்டார் சைக்கிள் மெக்கானிக் வாகன மின்னியலாளர்(வயறிங்), ரயர் ரெக்னீஷியன், சேர்விஸ்

ஆரம்பக் கட்டணம் இல்லை
பதிவுக் கட்டணம் ரூ 200/- மட்டுமே

077 00 38 215
021 222 00 11

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

221-1/1
மின்சார நிலைய வீதி
2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk

(சி-4261) வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு கணனி இயக்குநர், சிட்டை எழுதுநர், பொதியிடல் போன்ற வேலைக்கு பெண் பணியாளர்கள் தேவை. வயதெல்லை 18-30, யாழ். நகரில் இருந்து 5KM உட்பட்ட பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு:இல.108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:-0775164928** (சி-4258)

## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

**Dr.P.ஆறுமுகம்**

**T.P :- 0777 569 205**



28.10.2018-08.11.2018 வரை
12 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை. (சி-4252)

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

**தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துங்கள்**

இவை அனைத்துக்கும் மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

**இப்போது நாம் புதிய முகவரியில்**

**விதுனா லொச்**

ஜும்மா பள்ளிவாசல் பின் பக்கம் யாழ்ப்பாணம்.
(அருமை உணவகத்துக்கு அருகில்) தொ.பே: 021 722 3409

## தோட்டக்காணி விற்பனைக்கு

வடமராட்சி கிழக்கு,குடத்தனை சந்திக்கு அருகில் தொழிற்சாலைகள், பண்ணைகள் மற்றும் பாரிய தொழில் திட்டங்களுக்கு உகந்த 10 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு:**
**077 956 1525,077 193 0232** (சி-4259)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## வாகனம் வாடகைக்கு

**VAN FOR Hire KDH Highroof Original Passanger Carrier 12 seater Dual A/C, Line A/C**

வார/மாத வாடகைக்கு கொடுக்கப்படும்
அரச/தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு
0779184018, 0763591514 (சி-4257)

## வீடு வாடகைக்கு

வெளிநாட்டில் இருந்து அல்லது வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வருவோர் தங்குவதற்கான சகல வசதிகளையும் கொண்ட வீடு/ அறைகள் (A/C, Non A/C) யாழ்.நகரில் நாள், வார, மாத அடிப்படையில் வாடகைக்கு கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:-**
**0779184018, 0763591514** (சி-4257)

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு பயிற்சி நிலையம்

## யாழ். கலாலயா பயிற்சியகம்



இலங்கையின் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணையத்தில் பதியப்பட்டது.
விக்ரோறியா வீதி யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின்புற வீதி)

- ✓ கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட புதிய கேக் ஐஸிங், உணவு தயாரித்தல்,கூந்தல் அலங்காரம், Facial, Makeup பயிற்சிகளுக்கு சனி, ஞாயிறு பிரிவில் மட்டும் மேலதிக மகளிருக்கு அனுமதிகள் உண்டு.
- ✓ சாறி பிளவுஸ், ஷல்வார், தைக்கும் பயிற்சிகளிற்கு கிழமை நாள் பிரிவில் மட்டும் மேலதிக மகளிருக்கு அனுமதிகள் உண்டு.

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கு மேற்படி பயிற்சிகளின் கட்டணத்தில் கழிவு வழங்கப்படும். (சி-4256)

மேலும் விபரங்களை நாள்தோறும் மு.ப 9.30 - பி.ப 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

## புதிய பிரதமர் வரவேற்பு

கௌரவ மாண்புமிகு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்



ந.திரிலோக நாதன்
வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர்
வலிகாமம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வலிகாம பிரதான அமைப்பாளர்

**மீண்டும் மகிந்த யுகம்....** (சி-4255)


## மரண அறிவித்தல்

# செல்லையா தர்மலிங்கம்

(ஓய்வுபெற்ற தபால் அதிபர், Radio Officer (Ship))



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 25 |
| 02 | 10 |
| 1940 | 2018 |

யாழ்.நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தர்மலிங்கம் அவர்கள் 25.10.2018 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை-ஞானசௌந்தரி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசபத்மநாயகி அவர்களின் அன்புக் கணவரும், தசீலா, வோசிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், நவரட்ணம், மகேஸ்வரி, பொன்னம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுரேஸ், திசங்கர் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்றவர்களான இராதாகிருஷ்ணன், மகேந்திரன், வரேந்திரன் மற்றும் யோகநாதன், இந்திரன், தவேந்திரன், இராஜேந்திரன், ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மங்கையர்க்கரசி, திருச்செல்வராணி, சிவபாக்கியம், சாந்தி, கையிலாயினி, லீலா, காமினி ஆகியோரின் அன்பு உடன் பிறவாச் சகோதரரும், சுஜான், தனிஷ்ரா, சாதுர்யா, தகையா ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (28.10.2018) ஞாயிற்றுக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப 1.00 மணியளவில் நீர்வேலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி வடக்கு, நீர்வேலி.** (சி-4253) **-பிள்ளைகள்**

## பாராளுமன்றம் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைப்பு

# சபாநாயகரின் தீர்மானத்துக்கு எதிராக

# அதிரடியாக முடிவெடுத்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

பாராளுமன்றத்தை நாளை திங்கட்கிழமை கூட்ட சபாநாயகர் கருஜெயசூரிய தீர்மானித்திருந்த போதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு அதிரடியாக ஒத்திவைத்துள்ளார்.




நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலை தொடர்பில் ஆராய நாளை உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கருஜெய சூரியவுக்கு அறிவித்திருந்தார்.


இந்நிலையில் நாளை திங்கட்கிழமை பாராளுமன்றத்தை கூட்டுவதாக சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி தலையிட்டு பாராளுமன்றத்தை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ளார். (இ-7)

## ஐ.தே.க. ஆதரவாளர்கள் அலரிமாளிகைக்கு முன் ஆர்ப்பாட்டம்







(கொழும்பு)

நாட்டின் பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அலரிமாளிகைக்கு முன்பாக ஐ.தே.க. ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பின் பல பகுதிகளிலுமிருந்து அலரி மாளிகை வளாகத்திற்கு வந்த ஆதரவாளர்கள் அங்கு ரணிலுக்கு ஆதரவாகவும் மகிந்தவுக்கு எதிராகவும் கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தோடு, ஆதரவாளர்களில் ஒரு பகுதியினர் அலரி மாளிகைக்குள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை பேருந்துகளில் ஏராளமான ஐ.தே.க. ஆதரவாளர்கள் அலரிமாளிகையை நோக்கிப் படையெடுத்துள்ளனர்.

இலங்கையின் பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்துள்ள நிலையில், அது அரசியலமைப்பிற்கு முரணானதென ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அவர் அலரி மாளிகையிலிருந்து வெளியேற வேண்டுமென மகிந்த அணியினர் குறிப்பிட்டுள்ளதோடு, அவ்வாறு வெளியேறாவிட்டால் அலரிமாளிகையை சுற்றிவளைப்போம் என எச்சரித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்தே அலரிமாளிகைக்கு முன்பாக ஐ.தே.க. ஆதரவாளர்கள் கூடியுள்ளனர். (இ-7)

## இலங்கை நிலவரத்தை உன்னிப்பாக அவதானிக்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறும் விடயங்களை உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவரும் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து ருமேனியா பிரிட்டன் ஆகிய நாடுகளின் தூதுவர்களும் உயர்ஸ்தானிகர்களும் இலங்கையில் இடம்பெற்று வரும் விடயங்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.


அனைத்து தரப்பினரையும் அரசமைப்பிற்கு ஏற்ப நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம் வன்முறைகளை தவிர்க்குமாறும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஊடக சுதந்திரம் மற்றும் ஸ்தாபனங்களின் சுதந்திரத்தைப் பின்பற்றுமாறும் ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7)

### "நான் மீண்டும் பாதுகாப்புச் செயலாளராக மாட்டேன்"

## மகிந்தவுக்கு சர்வதேச சமூகம் ஆதரவை வழங்க வேண்டும்

### கோத்தபாய கோரிக்கை



(கொழும்பு)

புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு சர்வதேச சமூகம் தனது ஆதரவை வழங்கவேண்டும் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச சமூகம் வேறு ஒரு நபருக்கும் அரசாங்கத்திற்கும் ஆதரவளிக்க முயன்றது. இதன் காரணமாக என்ன நடைபெற்றது என்பதை அது பார்த்துள்ளது எனவும் கோத்தபாய தெரிவித்துள்ளார்.

சர்வதேசசமூகம்நிலைமை மோசமடைவதற்கு அனுமதிக்கக் கூடாது. மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவை வழங்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாங்கள்தற்போது நாட்டை பாதுகாப்பதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் புதிய அரசாங்கத்தை அமைப்போம். புதிய அமைச்சர்களை நியமிப்போம் என தெரிவித்துள்ள கோத்தபாய ராஜபக்ஷ மக்கள் விரும்பியதை அவர்களுக்கு வழங்குவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளமை பொதுமக்கள் மத்தியிலும் முதலீட்டாளர்கள் மத்தியிலும் நம்பிக்கையை ஏற்படுத்தும் என குறிப்பிட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷ நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு வர்த்தக சமூகத்தினரும் முதலீட்டாளர்களும் முன்வரவேண்டும். அச்சமின்றி முதலீடு செய்யவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

நான் பாதுகாப்பு செயலாளர் பதவியை மீண்டும் ஏற்கமாட்டேன். எந்தப்பொறுப்பையும் ஏற்காமலே நாட்டிற்கு சேவைசெய்வேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அரசியல் யாப்பை மதித்து செயற்படுங்கள்

### பிரித்தானியா அறிவுரை



(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகளின் முன்னகர்வுகள் தொடர்பில் கூர்ந்து அவதானித்து வருவதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் மார்க் பீல்ட் தனது டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கை அரசியல் யாப்பிற்கு மதிப்பளித்து, சகல அரசியல் கட்சிகளும் செயற்பட வேண்டும் எனவும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஆகவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கடமை உணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-7)

# ஹோலி சாதனை இந்தியா வேதனை

## வென்றது மே.தீவுகள்

மே.தீவுகளுக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 43 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அணித் தலைவர் ஹோலியின் 'ஹட்ரிக்' சதம் வீணானது.

இந்தியா சென்றுள்ள மே.தீவுகள் அணி ஐந்து போட்டிக்கள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இரு அணிகள் மோதிய மூன்றாவது போட்டி புனேயில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**பும்ரா நம்பிக்கை**

மே.தீவுகள் அணிக்கு ஆரம்பத்திலேயே தொல்லை கொடுத்தார் பும்ரா. இவரது 'வேகத்தில்' ஹேம்ராஜ் (15), கெய்ரன் பவெல் (21) ஆட்டமிழந்தனர். சாமுவேல்ஸ் (9) ஒற்றை இலக்கில் திரும்பினார். கடந்த இரண்டு போட்டிகளில் இந்திய அணிக்கு தொல்லை கொடுத்த ஹெட்மயர், இம்முறை 37 ஓட்டங்களுடன் தோனியால் 'ஸ்டம்ட்' செய்யப்பட்டார். குல்தீப் 'சுழலில்' ராவ்மன் பவெல் (4) ஆட்டமிழந்தார். பொறுப்புடன் விளையாடிய ஹோப் அரைச்சதம் கடந்தார். இவர் 95 ஓட்டங்களில் பும்ராவிடம் சிக்கினார். கடைசி கட்டத்தில் ஆஷ்லே நர்ஸ் (40) விளாசினார்.

இறுதியில், மே.தீவுகள் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்கள் எடுத்தது.

**ஹோலி சாதனை**

பின், களமிறங்கிய இந்திய அணிக்கு ரோகித் (8) ஜொலிக்கவில்லை. தவான் 35 ஓட்டங்கள் எடுத்தார். எதிரணி பந்துவீச்சை வழக்கம்போல சிதறடித்த அணித் தலைவர் ஹோலி அரைச்சதம் கடந்தார். ரிஷாப் (24), தோனி (7) நிலைக்கவில்லை. அதிரடி காட்டிய ஹோலி இத்தொடரில் தொடர்ந்து மூன்றாவது சதம் விளாசினார். இதன்மூலம், 'ஹட்ரிக்' சதம் அடித்த முதல் இந்திய வீரர் என்ற சாதனை படைத்தார். புவனேஷ்வர் 10 ஓட்டங்களில் திரும்பினார். இந்த நேரத்தில் வில்லனாக வந்தார் சாமு வேல்ஸ். இவரது 'சுழலில்' ஹோலி (107) ஆட்டமிழக்க, சிக்கல் தொடங்கியது. சகால், கலீல் அகமட் தலா 3 ஓட்டங்களில் நடையைக் கட்டினர். சாமுவேல்ஸ் பந்தில் பும்ரா டக் அவுட்டாக, இந்திய அணி 47.4 ஓவரில் 240 ஓட்டங்களுக்கு சுருண்டு வீழ்ந்தது. மே.தீவுகள் சார்பில் அதிகபட்சமாக சாமுவேல்ஸ் 3 விக்கெட் வீழ்த்தினார். இதன் மூலம், தொடர் 1- 1 என சமநிலையை எட்டியது.

## மரண அறிவித்தல்



### திருமதி சியாமளாதேவி சரவணபவசர்மா

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சியாமளாதேவி சரவணபவசர்மா நேற்று (27.10.2018) மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தி.ச.தியாகராஜ ஐயர் - ராஜாராஜேஸ்வரி தம்பதிகளின் புதல்வியும் சரவணபவசர்மாவின் மனைவியும் கிருபாகரன், கேசவ குருக்கள், ராஜசேகர குருக்கள் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஹேமமாலினி, சுபத்திராதேவி, வாகீஸ்வரி ஆகியோரின் மாமியாரும் நிஷாந்தன், ஆரணி, சுதாகரன், சுதர்ஷ்சன், வைகரி, வர்னேஸ் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2018) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொழும்புத்துறை துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொழும்புத்துறை
021 205 1010

தகவல்:
குடும்பத்தினர்

(6192)

## கண்ணீர் அஞ்சலி

### Lion கனகரத்தினம் சண்முகநாதன் (MJF. JP)

(உரிமையாளர் - Jeyasunjan Construction)



கனகரத்தினம் சண்முகநாதன் அவர்கள் கடந்த 24.10.2018 புதன் கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்:-
கஜமுகன் காட்வெயார்
இல.147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 2833

(C-4260)

## மரண அறிவித்தல்

### Lion கனகரத்தினம் சண்முகநாதன் (MJF. JP)

(உரிமையாளர் - Jeyasunjan Construction)



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சண்முகநாதன் கடந்த 24.10.2018 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - அமுதரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - தங்கலக்ஷ்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெயமலரின் (நந்தா) அன்புக் கணவரும் தஞ்சயனின் பாசமிகு தந்தையும் கங்காதேவி, சற்குணவதி குகதாசன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற வனஜமலர் சண்முகநாதன், கருணாதேவி மனோகரபூபன், ஜெயந்தி ரூபகுமார், பிரேமா ஸ்கந்தராஜா, மஞ்சுளா செல்வன், மிதுலா ரவிக்குமார் ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் (ஊரெழு) ஆரம்பமாகி பி.ப 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முகவரி:-
'நந்தவனம்'
ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

தகவல்: தஞ்சயன் (மகன் - 0777223219/0212240801)
பிரேமா - +47 516 97178, மஞ்சுளா - + 1 905 426 7231
மிதுலா - + 1 416 609 3519, Kind Regards, Thanjayan Sanjay.

(6189)

# நல்லாட்சி அரசு ஏமாற்றி விட்டது

## திகாம்பரம் புலம்பல்



(கொழும்பு)

மக்களுக்கு நல்லது நடக்கும் என்று சொல்லி இந்த நல்லாட்சி அரசாங்கத்தை மக்கள் கொண்டுவந்தார்கள். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திடீரென்று மகிந்தவைப் பிரதமராக்கியுள்ளார் என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமது ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கே என அவர் தெரிவித்தார்.

பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றபின்னர், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் அவசர கூட்டம் கூடியது. இதில் பிரசன்னமாகியிருந்த அமைச்சர், பின்னர் ஊடகங்களுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கியது பின்கதவால் செய்யப்பட்ட வேலை. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவே சட்ட ரீதியான பிரதமர். எனவே அவருக்கு ஆதரவாக சிறுபான்மையின் கட்சிகளாக நாம் இருக்கின்றோம்.

நாடாளுமன்றில் பெரும்பான்மை ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ளது. ஆகவே பெரும்பான்மை ஆதரவோடு பிரதமர் தொடர்ந்தும் ஆட்சியை நடத்துவார்" என்று தெரிவித்தார். (இ-7)

# ரணிலுக்கு றிசாத் ஆதரவு



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம்சிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சிக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கத் தயார் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் அமைச்சர்களான அமீர் அலி மற்றும் றிசாத் பதியுதீன் ஆகியோர் நேற்றுக்காலை அலரி மாளிகையில் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ள நிலையில், இலங்கை அரசியலில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஐக்கிய தேசிய கட்சிக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வேண்டிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. இந்நிலையில் ஐந்து நாடாளுமன்ற பிரிதிநிதித்துவத்தை கொண்ட றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பிரதமரை சந்தித்துஆதரவை வழங்கியுள்ளது. (இ-7)

**வைத்தியம்**

தலைமுடி உதிர்தல், உடல் பருமன் கூட்டுதல்/ குறைத்தல் (வயிறு/மார்பு/கை) முள்ளந்தண்டு பிரச்சினைகள், ஆண்மை குறைபாடுகள், குழந்தையின்மை போன்ற சகலவித நோய்களுக்கும் பக்க விளைவின்றி சிகிச்சை வழங்கப்படும். தொடர்பு:-Shan's Health Care, 255,K.K.S.Rd,Kokuvil. T.P:077 035 7307 (6073)

# தேராவில் துயிலுமில்லத்தை விடுவிக்குமாறு கோரிக்கை


(கரைச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் கீழ் அமைந்துள்ள கண்டாவளை பிரதேச செயலக கட்டுப்பாட்டுக்குட்பட்ட தேராவில் துயிலுமில்லத்தை (விசுவமடு) மீண்டும் பொது மக்களின் வழிபாட்டிற்காகவும் வணக்கத்திற்காகவும் திறந்து விடும்படி கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவராசா 2018.08.13 அன்று சபையிலே பிரேரணையாக சமர்ப்பித்தார். சபையிலே தேராவில் துயிலுமில்லத்தை விடுவிப்பதற்கான முயற்சியை சபை எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் குறித்த மாவீரர் துயிலுமில்லத்தை விடுவிக்குமாறு கோரிய கடிதம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் மாவட்ட கட்டளைத்தளபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 3 ஆயிரத்திற்கும் அதிகமான மாவீரர்களின் வித்துடல் அங்கு விதைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் நடந்த அரசியல் முரண்பாடுகள் காரணமாக ஏற்பட்ட மோதலின் போது மாவீரர்கள் தங்களது தாயகத்தை பாதுகாப்பதற்காக உயிரைத் துறந்தனர். அத்தகைய் பிள்ளைகளை நினைவு் கூரும் உரிமை அவர்களது கல்லறைக்கு விளக்கேற்றும் உரிமை ஒவ்வொரு பெற்றோருக்கும் உண்டு என்ற காரணத்தினாலேயே விடுவிக்குமாறு என்ற இந்த பிரேரணை நிறைவேற்றப் பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எமது ஆதரவு மகிந்தவுக்கே

## முத்துசிவலிங்கம்



(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவு வழங்குவோம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த காலம் முதல் நிலை இல்லாமலே இருந்தது. எனினும் தற்போது பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு கீழ் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துகொள்ள முடியும்.

குறிப்பாக தற்போது தோட்டத் தொழிலாளர்களின் முக்கிய பிரச்சினையாக உள்ள சம்பள பிரச்சினைக்கு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் தலைமையின் கீழ் தீர்வு எட்டப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)




# இராசி பலன்

**28.10.2018**

ஐப்பசி 11 ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 6.37 மணிவரை
ரோகினி முற்பகல் 9.32 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சங்கட கர சதுர்த்தி விரதம்

கிரகநிலை: சந் | செவ் | ராகு | கேது | சனி | குரு. புத | சூரி. சுக்

சந்திராஷ்டமம்
அனுசம்
இரவு 8.58 மணிக்கு
மிது-சந்

வளவன்

**மீனம்**

குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மேடம்**

எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்**

குடும்ப பொறுப்புகள் கூடும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உடல் நலம் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**மிதுனம்**

விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம், தொழில் ரீதியாக யாராவது உங்களிடம் உதவிகள் கேட்டுவரலாம், வழிபாட்டால் திருப்திகாண வேண்டிய நாள்.

**கும்பம்**

புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, பயணங்கள் கைகூடும்.

**கடகம்**

பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மகரம்**

செய்தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்**

உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்சாகமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், கௌரவமான நாள்

**தனுசு**

இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**துலாம்**

வரவும் செலவும் சமனாகும் åV^ , பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்வது, புதிய முயற்சிகளில் சிறு தடைகள் ஏற்படலாம்.

**கன்னி**

எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், தொழிலில் ஏற்பட்ட போட்டிகள் மாறும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

# ஆட்சியில் பங்கெடுத்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க நான் கடுமையாக உழைப்பேன்

## டக்ளஸ் எம்.பீ. வாக்குறுதி

(யாழ்ப்பாணம்)

நாம் ஆட்சியில் பங்கெடுத்திருந்த காலத்தில் ஓய்வின்றி உழைத்து பெரும் பணியைச் செய்திருக்கின்றோம் என்பது ஊர்பார்த்த உண்மையாக உள்ளது. மீண்டும் ஆட்சியில் பங்கெடுத்தால் முன்னரைவிடவும் கூடுதலான முயற்சிகளைச் செய்து யுத்தமில்லாத இந்தச் சூழலில் எமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க உழைப்போம் என்ற நம்பிக்கையுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. விடுத்துள்ள ஊடகச் செய்தியில் தெரிவித்துள்ளார்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சிபீடமேற்றியதாக கூறிய கடந்த ஆட்சியில் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாகக் கூறி வாக்குகளை அபகரித்தவர்களால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

தமிழ் மக்களின் பிரதான கோரிக்கைகளான அரசியல் தீர்வு மற்றும் காணாமல் போனோர் விவகாரம், காணிகள் மீட்பு, அரசியல் கைதிகள் விடுதலை, எமது இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு, வாழ்வாதாரம் உள்ளிட்ட முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு உரியவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியாளர்களுக்கு வழிகாட்டத் தவறியிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை புறந்தள்ளிவிட்டு தமது சுயலாப அரசியலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்ததால், தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்காக வீதியில் இறங்கிப் போராடுவதைத்தவிர தமிழ் மக்களுக்கு வேறு வழி இருக்கவில்லை.

பல தசாப்தங்களுக்கு மேலாக யுத்த அழிவுகளுக்கு முகம்கொடுத்து வந்துள்ள எமது மக்களுக்கு, வாழ்க்கைச் சுமையும் விலைவாசி உயர்வும் மேலும் துயரத்தை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் தற்போது ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கும்முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் என்றும், எமது அரசியல் பலத்திற்கு ஏற்ப அதற்கான முயற்சிகளையும் வழிகாட்டல்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வழங்கும் என்றும் தெரிவித்ததுடன், இதேவேளை பதவிக்காலத்தை நிறைவு செய்துள்ள மாகாணசபைகளுக்கு உரிய காலத்தில் தேர்தல்களை நடத்தி மக்கள் பிரதிநிதிகள் மாகாணசபையை பொறுப்பேற்று நடத்தும் சூழலை உருவாக்கவும் பிரதமர்



மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் நம்புகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தொண்டராசிரியர்களுக்கு அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட வடமாகாண தொண்டர் ஆசிரியர்களது அவசரமும் அவசியமுமான கலந்துரையாடலும் பதிவினை மேற்கொள்ளலும் யாழில் நாளை நடைபெறவுள்ளது.

கூந்தநியமனத்தின்போது பாதிக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை (26.10.2018) நடைபெற்ற பதிவின் போது பதிவினை மேற்கொள்ளாத தொண்டர் ஆசிரியர்களுக்கான இறுதிச்சந்தர்ப்பமாக நாளை திங்கட்கிழமை (29. 10.2018) காலை 9 மணிக்கு புதிய உயர்கல்லூரியில் சமுகமளித்துபதிவினைமேற்கொள்ளவும்.

மேலும் இருதினங்களிலும் பதிவினை மேற்கொண்ட தொண்டர் ஆசிரியர்களின் பெயர் விபரம் அவசரமாக மத்திய கல்வி அமைச்சுக்கு புதன்கிழமை சமர்ப்பிக்க உள்ளோம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

ஆகவே அனைத்து மாவட்ட தொண்டர் ஆசிரியர்களும் இறுதி இரு நேர்முகத் தேர்விலும் தோற்றிய கடித பிரதியுடன் சமுகமளித்து பதிவினை மேற்கொள்ளவும். தொடர்பு 077 437 9606, 077 037 6013, 076 185 0044 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# யுத்தமில்லை, துப்பாக்கிகளில்லை வார்த்தைகளால் சுடுபடுகின்றோம்

## அமைச்சர் மனோ கவலை

(யாழ்ப்பாணம்)

யுத்தம் இல்லை, துப்பாக்கிகள் இல்லை என்றாலும் இன்று ஒருவருக்கொருவர் வார்த்தைகளால் சுட்டுக்கொண்டிருக்கின்றோம். நாம் முரண்படும் போதும் ஒருவரோடு ஒருவர் அடித்துக் கொள்ளும் போதும் வார்த்தைகளால் சுடுபடும் போதும் எதிரிகள் எம்மைப்பார்த்து சிரிக்கிறார்கள். அதற்கு இடமளிக்கக் கூடாது.

அந்த நிலை மாற வேண்டுமென தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அவர் தெல்லிப்பழை பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீள்குடியேற்றம் என்பது பல பிரிவுகளைகொண்டது. இதில் வீடமைப்பு, கல்வி, சுகாதாரம், வீதிகள் புனரமைத்தல் என்பன அடங்கும். உட்கட்டமைப்பு என்கின்ற போது மின்சாரம், குடிநீர உள்ளடங்கும். இந்த விடயங்கள் பூரணப்படுத்தப்பட்டு மனித வளங்கள், பௌதீக வளங்கள் வழங்கப்பட்டால் அதில் மீளக்குடியேறி சுயதொழில் வாய்ப்பு அல்லது அரச வேலைவாய்ப்பு, தனியார் வேலைவாய்ப்பு உருவாக்கி கொடுத்தால் கிராமங்கள் உருவாகின்றன. இவ்வாறு கிராமங்கள் உருவாகும் போது தான் மீள்குடியேற்றம் முழுமையடையும்.

யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்கள் ஆகின்றன. ஆனால்யுத்தம்நிறைவடைந்துள்ளதை வைத்து கொண்டாடுவதா? அல்லது நினைத்து துன்புறுவதா? எனத் தெரியவில்லை. ஆனால் என்னை பொறுத்தமட்டில் கொண்டாட்டம் தேவையில்லை என்றே கூறுவேன். துன்புறுவதும் தேவையில்லை. எதிர்காலத்தை எப்படி வளப்படுத்துவது என்ற மனோதிடத்தை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்று தான்நாம்சிந்திக்க வேண்டும்.

இந்த யுத்தம் நடத்தப்பட்ட முறைமை நிச்சயம் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆனால் யுத்தம் நிறைவடைந்தது சந்தோசமான விடயம் தான். யுத்தம் இல்லை என்றால் மக்கள் கொல்லப்படுவது, அங்கவீனர் ஆக்கப்படுவது, கிராமங்கள் எரியூட்டப்படுவது, வீடுகள், கோயில்கள், சனசமூக நிலையங்கள் தரைமட்டம் ஆக்கப்படுவது, வாழ்வாதாரம், மக்கள் காணாமல் போகச் செய்யப்படுவது எல்லாம்நடைபெற்றிருக்காது.

எதிர்வரும் டிசெம்பர் 31க்கு முன்பதாக கையகப்படுத்தப்பட்டுள்ள அனைத்து தனியார் காணிகளும் முதற்கட்டமாக வடக்கு- கிழக்கு மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. அதே நேரம் பாடசாலைக்கு சொந்தமான கட்டடமோ அல்லது காணிகளோ பாதுகாப்பு துறையினரால் உடனடியாக கையளிக்கப்பட வேண்டும். அத்துடன் பாடசாலைக்கு சம்பந்தமில்லாதவர்கள் பாடசாலை வளங்களை வைத்திருந்தால் உடனடியாக கையளிக்க வேண்டும். அதற்கு நடவடிக்கை மேற்கொள்ள உள்ளேன்.



இதுவரை அரசியல் தீர்வு எமக்கு கிடைக்கவில்லை. ஆயினும் அதற்காக நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். இதனை பெற எமக்குள்ளே சண்டை பிடிக்க முயலக்கூடாது. எதிரிகள் எம்மை பார்த்து சிரிக்கும் அளவிற்கு எமது செயற்பாடுகள் அமைய இடமளிக்கக் கூடாது.

கடந்த காலங்களிலே நாங்கள் பல இயக்கங்களாக பிரிந்து ஒருவரை ஒருவர் சுட்டுக்கொண்டிருந்தோம். ஆனால் இன்று துப்பாக்கி வன்முறை ஆயுதம் இல்லை என்ற காரணத்தினால் வார்த்தைகளால் சுட்டுக்கொண்டு இருக்கின்றோம். அந்த நிலை மாற வேண்டும்.

மக்கள் நிம்மதியாக இருக்க வேண்டும். இங்கு தாய்மார்கள், இளைஞர்கள் பெரியோர்களின் முகங்களை பார்க்கின்ற போது எல்லோரது முகத்திலும் கேள்விக்குறி தென்படுவதாகவே பாரக்கின்றேன்.

அந்த கேள்விக்குறி மக்களை வதைத்து முள்ளாகதைக்கின்றது. அந்த கேள்விக்கான விடை எம்மைப் போன்றவர்களே விடையளிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



யாழ்.கோண்டாவில் சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலைக்கென அருகாமையில் 8 பரப்பு 2 குழி விஸ்தீரணமுள்ள நிலத்தினைக் கோண்டாவில் வாழ் பழைய மாணவரான ''தருமப் பிரபு'' இ.குவேந்திரநாதனும் அவரது குடும்பத்தினரும் இணைந்து பெற்றோரான இராசையா-சரஸ்வதி தம்பதியினர் ஞாபகார்த்தமாக கடந்த 25 ஆம் திகதி பாடசாலைச் சமூகத்தினரிடம் அன்பளிப்பாக வழங்கி உறுதிப்பத்திரம் கையளிப்புச் செய்தனர்.

# மூக்குக் கண்ணாடி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி மேற்கு ஜே/272 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இலவச கண்பரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தில் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 12.30 மணி வரை இடம்பெறும் என கிளை நிறைவேற்று உத்தியோகத்தர் செ.பிரகாஸ் அறிவித்துள்ளார். (இ

# பரிசளிப்பும் கலைநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் பரிசளிப்பும் கலை நிகழ்வும் இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில்நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தம்பதியினர், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மடு வலய கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன், வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் பி.பிரபாகர், கௌரவ விருந்தினராக சிவஞானம் உமாதேவி தம்பதியர்கலந்து கொள்வர். (இ

# கலாசார உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்ய திறந்த போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் கலாசார உத்தியோகத்தர் (MN-4) தரம் - III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 2018.11.10 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்து தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதிஅட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனவே 2018.11.07 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவிண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல.393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரியுடனோ 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பதையும்தெரிவித்துக் கொள்கின்றேன் என வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (இ

# சிறுவர், முதியோர்தின விழா

(யாழ்ப்பாணம்)

ஜே/77 மருதடி முதியோர் சங்க வருடாந்த சிறுவர், முதியோர் தினவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் தெற்கு சனசமூகநிலையத்தில்லயன் க.கணபதி தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் பொ.தயானந்தன், சிறப்பு விருந்தினராக யாழ்.சமூக சேவை உத்தியோகத்தர் வ.சுரேஸ்குமார், கௌரவ விருந்தினராக ஜே/77 கிராம உத்தியோகத்தர் திருமதி எம்.யூட். ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# பிரதமர் மகிந்தவுக்கு கோத்தபாய வாழ்த்து




புதிய பிரதமராக பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷவிற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

பெருமிதத்துடனும் மகிழ்ச்சியுடனும் நான் புதிய பிரதமரை வாழ்த்துகின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் தற்போது ஒன்றிணைந்து மீண்டும் ஸ்திரத்தன்மைவாய்ந்த முன்னேற்றகரமான தேசத்தை கட்டியெழுப்புவோம் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# நல்லாட்சியை ஏற்படுத்த வாக்களித்த மக்களை மைத்திரி ஏமாற்றிவிட்டார்

## ஹிருணிகா எம்.பி.கவலை

(கொழும்பு)

இலங்கையின் மாற்றத்தை கருத்திற்கொண்டு நல்லாட்சியை ஏற்படுத்த வாக்களித்த மக்களை ஜனாதிபதி ஏமாற்றியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

நாட்டின் புதிய பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றதன் பின் நடந்த ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "எனது தந்தையை கொலை செய்தவர்களுடன் இன்று ஆட்சியாளர்கள் கைகோர்த்துள்ளனர்.

தான் தோற்றிருந்தால் இன்று புதைகுழியில் இருந்திருப்பேன் என அன்று குறிப்பிட்ட ஜனாதிபதி, இன்று மகிந்தவுடன் சிரித்த முகத்துடன் கைகோர்த்துக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் உண்மையான முகம் இன்று தான் வெளிப்பட்டுள்ளது. இது நாட்டிற்கு சிறந்த விடயமல்ல" எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வடமாகாண சபைத் தேர்தலில் நானே முதலமைச்சர் வேட்பாளர்

## சீ.வீ.கே.சிவஞானம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலில் மாவை சேனாதிராசா போட்டியிடாவிடத்து நானே முதலமைச்சர் வேட்பாளர் என வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாண சபையின் ஆட்சிக் காலம் நிறைவுற்ற பின்னரான திட்டங்கள் மற்றும் எதிர்வரும் மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளர் யார் எனக் கேட்ட போதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

மாவை சேனாதிராசாவைத் தெரிவு செய்ய வேண்டுமென்று முன்மொழியப்பட்ட போது மாவை சேனாதிராசாவும் கைவிட்டதால் தற்போது அனுபவிக்கும் நிலை ஏமாற்றத்திற்குரியது. மாவட்டக் கிளையின் தற்போதைய தீர்மானத்தின் பிரகாரம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மாகாண சபை வேட்பாளர் தமிழரசுக் கட்சி சார்ந்தவராக இருக்க வேண்டுமென்றும் தமிழரசுக்கட்சியின் யாப்பின் அடிப்படையில் சேவைக் காலத்தினைக் கொண்டவராகவும் இருக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மாவை சேனாதிராசா முதலமைச்சராக வர விருப்பம் தெரிவித்த காரணத்தினால் அவரை ஆதரிப்பேன். சில சமயங்களில் மாவை சேனாதிராசா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாத நிலை ஏற்படுமேயானால் அந்த இடத்தில் அடுத்த தெரிவாக உரித்துடையவன் நான் என்பதே எனது நிலைப்பாடு. அந்த சந்தர்ப்பத்தில்



எனது கோரிக்கையை முன்வைப்பேன்.

கட்சியின் செயல்நிலை மற்றும் மாகாண அங்கீகாரங்கள், கடந்த 5 வருடங்களில் நான் செயற்பட்ட விதங்கள், அநுபவங்கள், அறிவுகள் இவற்றின் அடிப்படையில் அந்தத் தகுதி எனக்கு உள்ளது என்பதை மற்றவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகின்றேன். ஆகவே, மாவை சேனாதிராசா போட்டியிடாத சூழ்நிலையில் எனது கோரிக்கையை வலியுறுத்துவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9-101)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. அனந்தீஸ்வரி (ரதி) மதியூகநாதன் (ஆசிரியை)

பிறப்பு:- 05.08.1956

இறப்பு:- 10.11.2014

திதி: 28.10.2018

ஆண்டுகள் ஓடி மறைந்ததம்மா
உன் அன்பு முகம் எம் நெஞ்சில்
நிலையாய் வாழுதம்மா
கோடி கொடுத்தாலும் கிடைக்குமோ
உன் போன்ற உறவொன்று
மீண்டும் வந்திடம்மா
மீள் துயில் கொள்ளாமல்

ரதி மஹால்
கரணவாய் கிழக்கு

குடும்பத்தினர்.

(சி-4249)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சிவப்பிரகாசம் சிறிக்குமரன்

*மண்டைதீவு 02 ஆம் வட்டாரம் (சுவிஸ்)*



மண்டைதீவு 02 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் நாட்டை வதிவிடமாகவும் கொண்ட எமதூரின் அறநிலைப் பணிகள் , கல்வி, விவசாயம், நலிவுற்றோருக்கான வாழ்வாதார உதவிகள், விழாக்கால மகேஸ்வர பூசை, தாகசாந்தி நிகழ்வுகள், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு ஏற்படும் துன்ப நிலைக்கான நிதிப் பங்களிப்பு என பல்வகையான நற்பணிகளின் நாயகனாக திகழ்ந்து எம்மக்களின் மனங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்ட மனிதநேயம் சிவப்பிரகாசம் சிறிக்குமரனின் மறைவுச் செய்தியினை ஏற்க மனம் மறுக்கின்றது. அவரது இழப்பு எமது மக்களுக்கும் எமதூரின் ஆலயங்களின் புனருத்தாரணத்துக்கும் மற்றும் நற்பணிகளுக்கும் பேரிழப்பாகும். மேலும் அவர் எமது ஆலய புனருத்தாரண பணிகளில் பெருமளவான நிதிப் பங்களிப்பை வழங்கியுதவிய ஒரு விளம்பரம் இல்லாத வள்ளலாவார். எனவே அவரது பிரிவு எமக்கு மிகுந்த வேதனையை அளிக்கின்றது. எமது கண்ணீரை காணிக்கை ஆக்கி அவரது குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டு அவரது புனிதமான ஆத்மா பூம்புகார் கண்ணகி அம்பாளின் திருவடி நிழலில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அவரது பிரிவால் துயருறும் மண்டைதீவு பூம்புகார் கண்ணகி அம்மன்
ஆலய பரிபாலன சபை, மண்டைதீவு-01

(சி-4248)

# பிரார்த்திக்கின்றோம்



## உயர்திரு க.சண்முகநாதன்

எமது சிவபூமி கட்டட நிர்மாணப் பணிகளை கடந்த பதின்நான்கு ஆண்டுகளாக சிறந்த முறையில் நிறைவேற்றிய செயல் வீரனும் உன்னத அறப்பணியாளருமான உயர்திரு. க.சண்முகநாதன் அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த கவலையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற சிவனடியை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஆறு.திருமுருகன்
தலைவர்.

நிர்வாக சபை
சிவபூமி அறக்கட்டளை,இலங்கை.

(6180)

# அடுத்த ஆட்சியைத் தீர்மானிக்கும் கட்சியாக எமது கட்சியே இருக்கும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்றுள்ள நிலையில், அடுத்த ஆட்சியைத் தீர்மானிக்கும் கட்சியாக தமது கட்சி இருக்கும் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தப் பதவியேற்பு அதிர்ச்சியான விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான ஒரு சாத்தியப்பாடு இல்லாமல் பதவியேற்பு நிகழ்த்தப்பட்டிருக்கிறதா? என சந்தேகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா சென்றுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்கு ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் அடுத்த ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக எமது கட்சியே இருக்கும் என்றும் அது இந்த புதிய ஆட்சிதான என்பது தொடர்பில் கட்சி தீர்மானிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்குள் தங்க ஆபரணங்களை கடத்த முற்பட்டவர் நேற்றுக் கைது





(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் ஒரு தொகை தங்க ஆபரணங்களை கடத்திவர முற்பட்ட நபர் ஒருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இலங்கை விமான நிலையத்தில் பணிபுரிபவர் என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை மதுரையிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தடைந்த குறித்த நபரின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த விமான நிலைய சுங்க அதிகாரிகள் அவரின் பயணப் பொதியை சோதனையிட்ட போது மறைத்து வைத்திருந்த ஒரு தொகை தங்க ஆபரணங்களை கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 2 கோடியே 29 இலட்சத்து 94 ஆயிரத்து 365 ரூபாய் பெறுமதியான 4 கிலோ கிராம் நிறை கொண்ட ஒரு தொகை தங்க ஆபரணங்களை குறித்த நபரிடமிருந்து சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை மேலதிக விசாரணைகளுக்குட்படுத்தியுள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

# மகிந்தவின் குற்றங்களுக்கு மைத்திரி சன்மானம்-ரஞ்சன்



(கொழும்பு)

பணத்திற்கும் அற்ப சலுகைகளுக்கும் விலைபோகும் உறுப்பினர்களே மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அவசரக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் குற்றங்கள், கொலைகள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவந்த நிலையில் மகிந்தவுக்கு பிரதமர் பதவியை மைத்திரி சன்மானமாக வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அலரிமாளிகைக்குள் நுழைந்து ரணிலை வெளியேற்றுவோம்

## விமல் வீரவன்ச எச்சரிக்கை

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையிலிருந்து வெளியேற மறுத்தால் அலரிமாளிகைக்குள் நுழைந்து அவரை வெளியேற்றுவோம் என பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதியால் பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளதால் தொடர்ந்தும் பதவியில் நீடிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு எந்தவித அதிகாரமும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க வெளியேற மறுத்தால் மக்கள் ஆதரவைத்திரட்டி அலரிமாளிகைக்குள் நுழைந்து அவரை வெளியேற்றுவோம் என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (இ-7)



சம்பத் வங்கியின் சங்கானைக் கிளையின் 8 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2018.10 28

❖ 1962-கியூபா ஏவுகணை நெருக்கடி முடிவுக்கு வந்தது. சோவியத் பிரதமர் நிக்கிட்டா குருசேவ் சோவியத் ஏவுகணைகளை கியூபாவில் இருந்து அகற்ற உத்தரவிட்டார்.

❖ 1990-ஜோர்ஜியாவில் வரலாற்றில் முதற்தடவையாக பல-கட்சி நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது.

❖ 2006-தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே 8 மாதங்களாகத் தடைப்பட்டிருந்த அமைதிப் பேச்சுக்கள் ஜெனிவாவில் மீண்டும் ஆரம்பமாகின.

❖ 2014-நாசாவின் சிக்னசு ஆளில்லா விண்கலம் வேர்ஜீனியாவில் இருந்து புறப்பட்டு சில நிமிட நேரத்தில் வெடித்துச் சிதறியது.

**பிறப்புகள்**

❖ 1867-சகோதரி நிவேதிதை, அயர்லாந்து-இந்திய சமூக சேவையாளர், நூலாசிரியர் (இ. 1911)

❖ 1892-மணிலால் காந்தி, மகாத்மா காந்தியின் 2 ஆவது மகன், சமூக செயற்பாட்டாளர் (இ. 1956)

❖ 1933-கரிஞ்சா, பிரேசில் கால்பந்து வீரர் (இ. 1983)

❖ 1955-பில் கேட்ஸ், மைக்ரோசாப்ட் நிறுவுநர்

❖ 1955-இந்திரா நூயி, இந்திய-அமெரிக்கத் தொழிலதிபர்

❖ 1958-அசோக் சவான், மகாராஜ்டிராவின் 16 ஆவது முதல்வர்

❖ 1978-ஹரின் பெர்னாண்டோ, இலங்கை அரசியல்வாதி

**இறப்புகள்**

❖ 1978-ருக்மணிதேவி, இலங்கை நடிகை, பாடகி (பி. 1923)

❖ 1981-பி.ஸ்ரீ.தமிழக எழுத்தாளர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் (பி. 1886)

❖ 1982-இராபெர்ட் தெஸ்கோர்ட் அட்கின்சன், பிரித்தானிய வானியலாளர், இயற்பியலாளர் (பி. 1898)

❖ 1983-போல் சுவிங்சு, பெல்ஜிய வானியற்பியலாளர் (பி. 1906)

❖ 1997-மைசூர் வீ.துரைசுவாமி ஐயங்கார், வீணை இசைக்கலைஞர் (பி. 1920)

❖ 2013-ராஜேந்திர யாதவ், இந்திய எழுத்தாளர் (பி. 1929)

❖ 2014-மைக்கேல் சாட்டா, சாம்பியாவின் 5 ஆவது அரசுத்தலைவர் (பி. 1937)

**சிறப்பு நாள்**

❖ செக்கோ-சிலோவாக் நாடு உருவான நாள் (1918 செக் குடியரசு, சிலவாக்கியா)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 180 | 170 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 170 | 140 | 250 |
| தக்காளி | 160 | 120 | 180 | 100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 150 | 120 | 120 | 100 | 160 |
| கரட் | 140 | 200 | 150 | 140 | 240 |
| பூசணி | 80 | 50 | 50 | 40 | 80 |
| புடோல் | 160 | 150 | 100 | 100 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 40 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 120 | 100 | .120 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 90 | 120 |
| பாகற்காய் | 240 | 260 | 240 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 150 | 100 | 80 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 60 | 150 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 140 | 240 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 70 | 160 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 60 | 120 |
| கறிமிளகாய் | 200 | 180 | 200 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 240 | 140 | 140 | 80 | 120 |
| போஞ்சி | 250 | 240 | 250 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 140 | — | 130 | 160 |
| கீரை-1பிடி | 50 | 40 | 40 | 30 | 50 |
| தேசிக்காய் | 420 | 400 | 400 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 60 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 140 | — | 110 | 240 |
| வெங்காயப்பூ | 250 | 160 | — | 90 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 120 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 80 | — | — | 120 | 80 |

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரிக்கை




தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று முற்பகல் 10 மணியளவில் நெல்லியடி பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று பொது அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டது. (இ-9-60)

# உலக அரசியல் வரலாற்றில் மோசமான காட்டிக்கொடுப்பை செய்ய வேண்டாம்

## மைத்திரிக்கு ராஜித அறிவுரை

(கொழும்பு)

உலக அரசியல் வரலாற்றில் மோசமான காட்டிக் கொடுப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்ய வேண்டாம் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அவருடைய நன்மதிப்பைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம் என அவருடைய நண்பன் என்ற வகையில் தெரிவித்துக் கொள்வதாகவும் ராஜித கூறினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுபோன்ற தீர்மானத்தை எடுப்பார் என நாம் நினைக்கவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்திருந்தால் ஆறடிக் குழிக்குள் தன்னை அனுப்புவதாகக் கூறிய நபரை தற்போது மைத்திரிபால சிறிசேன பிரதமராக்கியுள்ளார்.

இதன்மூலம் அவருடைய நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது. உயிரைப்பணயம் வைத்து மைத்திரிபால சிறிசேனவை நாம் ஜனாதிபதியாக்கினோம். ஆனால் அதனை மறந்து மோசடிக்காரர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார்.

எனவே அரசியல் வரலாற்றில் மோசமான காட்டிக்கொடுப்பை ஜனாதிபதி செய்யக் கூடாது.

இதேவேளை பாராளுமன்றத்தை ஒத்திவைத்து மக்களின் ஜனநாயக உரிமையை கேள்விக் குறியாக்க வேண்டாம்.



நாம் எந்தச் சவாலுக்கும் அஞ்சியவர்கள் இல்லை. மக்களை வீதிக்கு இறக்கி எந்தச் சவாலையும் வெற்றி கொள்ளத் தயாராக இருக்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறைகள் இரத்து

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப சூழ்நிலையை கருத்திற் கொண்டு அனைத்து பொலிஸ் அதிகாரிகளினதும் விடுமுறைகள் இரத்து செய் யப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், வலயத்துக்கு பொறுப்பானவர்கள், பொலிஸ் பரிசோதகர்கள் உள்ளிட்ட அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விடுமுறைகள் மறு அறிவித்தல் வரும் வரை இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் விடுமுறையில் இருக்கும் அனைத்து பொலிஸ் அதிகாரிகளும் உடனடியாக கடமைக்கு சமுகமளிக்குமாறும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவி ஏற்ற பின்பு நாட்டில் பதற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விருது வழங்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

DMI கணனி கற்கை"நிலையத்தின் விருது வழங்கும் நிகழ்வு இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் சேர்.பொன்.இராமநாதன் வீதி ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். (இ)

# மன்னாரில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை

## கூட்டுறவு சங்கக் காணி நாளை கையளிப்பு-ஆளுநர் தகவல்

(மன்னார்)

ஜனாதிபதியின் தலைமையில் பாராளுமன்றத்தில் இறுதியாக இடம் பெற்ற கூட்டத்தில் வடக்கு- கிழக்கில் படையினர் வசம் இருக்கின்ற காணிகளை விடுவிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக மன்னார் மாவட்டத்தில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான அவசரகல ந்துரையாடல் நேற்று சனிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே வடமாகாண ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி வடமாகாண ஆளுநரான என்னிடம் வடமாகாணத்திலுள்ள மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் படையினர் வசமுள்ள நிலங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார்.

அதற்கமைவாக மன்னார் மாவட்டத்தில் படையினர் வசமுள்ள மற்றும் விடுவிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக ஆராய்வதற்காக குறித்த கலந்துரையாடல் இடம் பெற்றது.

குறிப்பாக விடுவிக்கப்பட்ட காணிகள் தவிர்ந்த விடுவிக்கப்படாத காணி கள் தொடர்பில் ஆராயப் பட்டது. குறிப்பாக மன்னார் சகர நுழைவாயிலில் இராணுவ வசம் காணப்பட்ட கூட்டுறவு சங்கத்திற்கான கட்டடம் காணப்பட்ட இடம் நாளை திங்கட்கிழமை கூட்டுறவு திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்க பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் முள்ளிக் குளம் பிரதேசத்தில் ஏற் கனவே தீர்மானிக்கப்பட்ட 100 ஏக்கர் காணியில் 23 ஏக்கர் காணியினை விடுவிக்க தீர்மானிக்கப்பட்டது.

எனினும் கடற்படையினர் தமக்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் கட்டுமானப்பணிகளை மேற்கொண்டு வருகின்றமையினால் ஒரு சில மாதங்களில் குறித்த 23 ஏக்கர் காணிகளை யும் விடுவிக்கவுள்ளனர். இதேபோன்ற மன்னார் மாவட்டத்தில் சிலாபத் துறை கடற்படை முகாம், பேசாலையில் மீன்பிடி திணைக்களத்திற்கு சொந்தமான இராணுவம் தற்போதுள்ள காணி விடுவிப்புக்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

மேலும் காணி விடுவிப்பு தொடர்பில் மேலும் ஒரு கூட்டத்திற்கு வரும் போது விடுவிக்கப்பட வேண்டிய காணிகளின் தரவுகளை கடற்படை யினர், இராணுவம், பொலிஸார் மற்றும் பிரதேசச் செயலாளர்கள் உரிய முறையில் வழங்க வேண்டும் எனப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

மேலும் வன இலாகா திணைக்களம்,வன ஜீவராசிகள் திணைக்களம் தொடர்பாகவும் மாவட்டத்தில் இருக்கின்ற குறைபாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கலந்துரை யாடலில் மன்னார் பிர தேச சபையின் தவிசாளர் எம்.முஜாகிர். மாவட்ட மேலதிக செயலாளர், பிரதேசச் செயலாளர்கள், திணைக்கள தலைவர் கள், இராணுவம், கடற் படை, வான்படை, பொலிஸ் உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நாலக

(கொழும்பு)

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகமாக ஜனாதிபதியின் பதில் மேலதிக செயலாளர் நாலக கலு வெவ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் கட்ட ளைக்கமைய, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)


## சமாதான நீதவான்

(அகில இலங்கை)



யாழ் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையில் வசிப்பவராகிய **திரு. சந்திரபோஸ் தமிழ்ச்செல்வன்** அகில இலங்கை சமாதான நீதவானாக நீதி அமைச்சரால் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் ஆவணி மாதம் 7ம் திகதி 2018 ம் ஆண்டு கொழும்பு தலைமை நீதிபதி மன்றில். மாவட்ட நீதிபதி / கூடுதல் மாவட்ட நீதிபதி தனுஜா ஜெயசிங்க முன்னிலையில் தனது சத்தியப் பிரமாணத்தைச் செய்து கொண்டார்.

யா/நாகேஸ்வரி வித்தியாலயம், கொழும்பு இந்துக்கல்லூரி பழைய மாணவரான இவர் தனது பட்டப்படிப்பினை முடித்தபின்பு APSS International (College of Engineering) ஸ்தாபனத்தின் பணிப்பாளராகவும் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) ஆகவும் கடமைபுரிகின்றார்.

இவர் தலைமையில் CITY and Guilds (UK) நிறுவனத்தால் வழங்கப்படும் Civil Engineering, Electrical and Electronic Engineering, Quantity Surveying, Telecommunication System ஆகிய பயிற்சி நெறிகளை திறம்பட நடத்தி பல மாணவர்களை பொறியியலாளராகவும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாகவும் ஆக்கியுள்ளார். அத்தோடு City & Guilds (UK) நிறுவனத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் Medal of Excellence (Gold Medal) ஐ வருடா வருடம் ஏதாவது ஒரு துறையில் வென்றெடுக்கத் தவறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது அனைத்துப் பணிகளும் மென்மேலும் வளர்ச்சியடைந்து சிறப்படைய APSS International Networks (Pvt) Limited ஸ்தாபனத்தார் வாழ்த்துகின்றனர்.

(6182)

# அரசியலமைப்புக்கு அமைய அனைவரும் செயற்பட வேண்டும்

## அமெரிக்கா அறிவுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் அனைத்துத் தரப்புக்களும் வன்முறைகளில் இருந்து விலகி, சரியான வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்றும், அரசியலமைப்புக்கு அமைய செயற்பட வேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. புதிய பிரதமராக நேற்று முன்தினம் மாலை மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரிவின், டுவிட்டர் பக்கத்திலேயே இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் நிகழ்வுகளை அமெரிக்கா அவதானித்துக் கொண்டிருக்கிறது. அனைத்து தரப்புகளும் இலங்கையின் அரசியலமைப்புக்கு அமைய செயற்படுமாறும், வன்முறைகளில் இருந்து விலகி, சரியான வழிமுறைகளை பின்பற்றுமாறும், நாம் அழைப்பு விடுகின்றோம்.

இலங்கை அரசாங்கம், ஜெனிவாவில் அளித்த மனித உரிமைகள், மறுசீரமைப்பு, பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான வாக்குறுதிகளை நிலைநாட்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்" என்றும் அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இலங்கையின் புதிய பிரதமராகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ தொடர்பாக அமெரிக்கா இதுவரை எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. அவருக்கு வாழ்த்துக் கூறவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரதமர் மகிந்தவை சந்தித்தார் பொலிஸ்மா அதிபர் பூஜித





(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

இதேவேளை,பொலிஸ்மா அதிபருடன் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகள் மற்றும்பொலிஸ் உயர் அதிகாரிகள் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, மகிந்தானந்த அளுத்கமகே, கெஹலிய ரம்புக்வெல, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டோர் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நாட்டின் ஸ்திரமற்ற தன்மைக்கு ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டும் -முஜிபுர் ரஹ்மான்



(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்ற தன்மைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்புக்கூற வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றுள்ள நிலையில், அலரி மாளிகையில் ஐ.தே.க. உறுப்பினர்கள் குழுமியுள்ளனர். இந்நிலையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த முஜிபுர் ரஹ்மான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் புதிய பிரதமர் நியமனமானது மிகவும் கீழ்த்தரமானதென்றும், ஊடகங்களுக்கு அழைப்பு விடுக்காமல் பின்கதவால் வழங்கப்பட்ட நியமனம் என்றும் அவர் சாடியுள்ளார்.

இவ்வார அமைச்சரவையில் ரணிலுடன் ஜனாதிபதி ஒன்றாக அமர்ந்து கதைத்துவிட்டு, அதன் பின்னர் மகிந்தவை அழைத்து இவ்வாறு நியமனம் வழங்கியுள்ளமை மோசமான செயலென்றும்முஜிபுர் தெரிவித்துள்ளார். (இ-7)

## மிக விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்வேன்

## சுப்பிரமணியன் சுவாமி தெரிவிப்பு



(டில்லி)

இலங்கை பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பதவியேற்றுள்ள நிலையில், அவரை டுவிட்டர் மூலம் தனது நண்பன் எனக் குறிப்பிட்டு வாழ்த்து தெரிவித்த, இந்தியாவின் ஆளும் கட்சியான பா.ஜ.கவின் மூத்த தலைவர் சுப்பிரமணியன்சுவாமி , விரைவில்தான் இலங்கைக்கு (கொழும்பு) வருகை தரவுள்ளதாக அறிவித்துள்ளார்.

சுப்பிரமணியன் சுவாமி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

"பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றுள்ளதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். தொலைபேசி மூலம் அவருக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளேன்.

என்னுடன் பேசிய அவர், இலங்கை தமிழர் விவகாரத்தில் அவர்களுடன் கலந்தாலோசித்து தகுந்த தீர்வை எடுக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

மிக விரைவில் இலங்கைக்கு செல்லும் நான், இந்தியாவின் தமிழக மீனவர்கள் எல்லைப் பிரச்சினை தொடர்பில் பேசி, அதற்காக தீர்வொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்" என சுப்பிரமணியன் சுவாமி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ரணில் பதவி விலகுவார் நாமல் நம்பிக்கை



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்திலிருந்து விலகியதன் ஊடாக, அரசியலமைப்பின் 48 ஆவது பிரிவின் முதலாவது சரத்திற்கு அமைய பிரதமர் பதவி வெற்றிடமாவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார்.

இதன்படி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு காணப்படுகின்ற அதிகாரங்களை பயன்படுத்தி, அரசியலமைப்பின் 42ஆவது பிரிவின் 4ஆவது சரத்திற்கு அமைய புதிய பிரதமரை நியமிப்பதற்கான அதிகாரம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த தீர்மானத்திற்கு மதிப்பளித்து, பிரதமராக கடமையாற்றிய ரணில் விக்கிரமசிங்க பதவியிலிருந்து விலகிக் கொள்வார் என தான் நம்புவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் திடீரென மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்றிருப்பதன் மூலம், அரசியல் சட்டக் குழப்பம்ஏற்பட்டிருப்பதாக கொழும்பில்உள்ள அரசியல்சட்ட வல்லுநர் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-7)



யாழ்.சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசில் நாள் வைபவம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் க.கந்தசாமியும்,சிறப்பு விருந்தினராக பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி சியாமளா கந்தசாமியும் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி சியாமளா வழங்கி வைப்பதை படங்களில் காணலாம். (படங்கள்:-சுபேசன்)

# மகிந்தவின் புதிய அரசியல் பிரவேசத்தால் கொதித்தெழுந்த தமிழகத் தலைவர்கள்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் திடீரென புதிய பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். இதையடுத்து இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் இந்த விடயம் பெரிதாக பேசப்பட்டது.

மேலும், இந்த விடயத்துக்கு சிலர் ஆதரவு தெரிவித்திருந்தாலும் பலரும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். அந்தவகையில்வைகோ, தொல்.திருமாவளவன், கௌதமன் ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ



"இலங்கைத் தீவில் மிகக் கொடூரமான ஈழத் தமிழ் இனப்படுகொலையைத் திட்டமிட்டு ஈவு இரக்கமின்றி நடத்திய கொடிய குற்றவாளி ஜனாதிபதி பொறுப்பிலிருந்த மகிந்த ராஜபக்ஷ என்பதை ஐ.நா.மன்றத்தின் பொதுச் செயலாளர் 2010 நியமித்த மார்சுகி தருஸ்மன் தலைமையிலான குழுவின் ஆய்வு அறிக்கை உலகத்துக்கு அம்பலப்படுத்தியது.

குழந்தைகள்முதல்வயோதிபர்கள் வரை ஒன்றரை இலட்சம் தமிழர்கள் கோரமாகக் கொல்லப்பட்டனர். ஹிட்லரின் நாஜிகள் இரண்டாம் உலகப்போரின் போது நடத்திய படுகொலைகளுக்குப் பிறகு ராஜபக்ஷ அரசு நடத்திய இனப் படுகொலையில் கர்ப்பிணித் தாய்மார்களும் கொல்லப்பட்டனர். எண்ணற்ற தமிழ் பெண்கள் கொல்லப்பட்டனர். ஏராளமான இளைஞர்கள் சித்திரவதை செய்து அழிக்கப்பட்டனர்.

இந்த இனப் படுகொலையை இலங்கை ஜனாதிபதி பொறுப்பில் இருந்த மகிந்த நடத்தியபோது, அதனைச் செயற்படுத்திய பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்தவர்தான் மைத்திரிபால சிறிசேன ஆவார். இருவருமே தமிழ் இனக்கொலையின் கூட்டுக் குற்றவாளிகள் ஆவார்கள்.

2015 தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து ஒரு நாடகம் நடத்தினார். ஈழத் தமிழ் இனத்தையே கருவறுத்துப் பூண்டோடு அழித்துவிட வேண்டும் என்ற வன்மம் கொண்டவர்தான் மகிந்த என்பதை தமிழர்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

இலங்கை அரசியலில் நடைபெறுகிற சதுரங்கப் போட்டியில், சிங்கள அரசியல்வாதிகள் அனைவருமே ஈழத் தமிழ் இனத்தின் தனித்தன்மையை அழிக்கும் குறிக்கோளைக் கொண்டவர்கள்தான்.

2015 ஆம் ஆண்டு ஐ.நாவின் மனித உரிமைக் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் படி இலங்கையில் நடைபெற்ற தமிழர் படுகொலைகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், அதில் உலக நாடுகளின் நீதிபதிகள், குறிப்பாக கொமன்வெல்த் நாடுகளின் நீதிபதிகள் இடம் பெறுவதற்கு இலங்கை முதலில் எதிர்ப்புக் காட்டியபோதும், பின்னர் ஒப்புக்கொண்டது.

ஆனால் அப்படிப்பட்ட நீதி விசாரணை எதுவும் கடந்த மூன்றாண்டு காலத்தில் நடைபெறவே இல்லை. போரின்போது காணாமல் போன தமிழர்களைக் கண்டு பிடிக்கவும், விபரங்களை அறியவும்ஆணையம்அமைப்பதாக ஒப்புக்கொண்ட இலங்கை அரசு, கண் துடைப்புக்காக ஒரு ஆணையத்தை அமைத்ததே தவிர, அது செயற்படவே இல்லை. அரசாங்கத்தால் பறிக்கப்பட்ட தமிழர்களின் நிலங்களை தமிழர்களிடம் ஒப்படைக்கவில்லை. உலகத்தை ஏமாற்றுவதற்காக இதுகுறித்துப் பொய்யான தகவலையே சிங்கள அரசு கூறியது.

ஈழத்தமிழர் தாயகத்தில், குறிப்பாக வடக்கு மாகாணத்தில் குவிக்கப்பட்டு இருக்கின்ற இராணுவத்தை திரும்பப் பெறுவதாக ஒப்புக்கொண்ட சிங்கள அரசு, அதனைச் செயற்படுத்தவே இல்லை.

ஐந்து தமிழர்களுக்கு ஒரு சிங்கள இராணுவச் சிப்பாய் என்கிற வீதத்தில் தமிழர் தாயகமே சிங்கள இராணுவ முகாம் ஆக்கப் பட்டுவிட்டது. அரசியல் சட்டத் திருத்தம், அதிகாரப் பகிர்வு என்று 2015 இல் உலக நாடுகளை ஏமாற்றிய சிங்கள அரசு, அதற்கான எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை.

2015 இல் மனித உரிமைக் சபையிலும் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்ற சிங்கள அரசின் கோரிக்கையை மனித உரிமை சபையில் ஏற்றுக்கொண்ட போதிலும், 2019 மார்ச்சில் அந்தக் கால அவகாசம் முடிவடைய இருக்கிறது.

மாலைதீவு தேர்தலில் நடைபெற்ற அதிகார மாற்றத்தால் ஆத்திரமடைந்த சீனா, இலங்கையில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொள்வதற்காக ஏற்கனவே அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பெற்றதோடு, மீண்டும் மகிந்த கைகளில் அதிகாரம் வரவேண்டும்என்று திட்டமிட்டுக் காய் நகர்த்துகிறது.

மகிந்த இந்தியாவுக்கு வந்து, பிரதமர் மோடியைச் சந்தித்ததும், மூன்று நாட்கள் டில்லியில் முகாமிட்டதும் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகிறது.

தமிழர்களின் மனக் காயங்களுக்கு மருந்திட்டதைப் போல வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை எந்த எதிர்ப்பும் இன்றி ஒருமனதாக நிறைவேற்றினார். அத்தீர்மானத்தின்படி, சிங்கள இராணுவமும், சிங்களக் குடியேற்றங்களும் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, நடைபெற்ற இனக்கொலை குறித்து பன்னாட்டு நீதி விசாரணையும், தமிழ் ஈழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதாகும்.

தாய்த் தமிழகத்தில் உள்ள தமிழர்களும், உலக நாடுகளில் வாழ்கிற புலம்பெயர் ஈழத் தமிழர்களும் இலக்காகக் கொள்ளவேண்டியது எல்லாம், நடைபெற்ற இனக்கொலைக்கு பன்னாட்டு நீதிப் பொறிமுறை அமைப்பதும், தமிழர் தாயகத்திலிருந்து இராணுவத்தையும், சிங்களக் குடியேற்றங்களை வெளியேற்றச் செய்வதும், சுதந்திரத் தமிழ் ஈழ நாடு அமைப்பதற்காக இலங்கையில் தமிழர் தாயகத்திலும், உலகெங்கும் வாழும் ஈழத் தமிழர்களிடத்திலும் பொது வாக்கெடுப்பு நடத்துவதும்தான் என்பதை உணர்ந்து, அந்தக் கடமையை மனதில் கொண்டு செயற்பட வேண்டும் என்பதுதான்.

இலங்கை அரசியல் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தத்தின் படி, மகிந்த நியமனம் செல்லாது என்றும், தானே பிரதமர் என்றும் ரணில் விக்கிரமசிங்க கூறி இருக்கிறார். எது எப்படி இருப்பினும் சிங்களர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் தமிழ் இன அழிப்பையே நோக்கமாகக் கொண்டவர்கள் என்பதும், தமிழர்களுக்கு நீதி கிடைக்காது என்பதும் உண்மையாகும்.

இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் சிங்கள அரசால் கொல்லப்பட்டதையும், அதனைத் தடுப்பதற்காக முத்துக்குமார் உள்ளிட்ட 19 தமிழர்கள் தங்கள் உயிர்களை நெருப்புக்குத் தாரைவார்த்துப் பலியாகி தியாகம் செய்து மடிந்ததையும் மனதில் கொண்டு தமிழர்கள் செயலாற்ற வேண்டும். இலங்கை அரசாங்கத்தினுடைய மோசடியையும், சதி நாடகத்தையும்உலகநாடுகள்உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்தியாவில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நரேந்திர மோடி அரசு தொடக்கத்திலிருந்தே மனித உரிமைச் சபையிலும், ஈழத்தமிழர்கள் குறித்த அனைத்துப் பிரச்சினைகளிலும் சிங்கள அரசுக்கு ஆதரவாகவே நடந்து வருகிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்." என்றார் வைகோ.

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன்



"இலங்கையில் நடைபெற்றுள்ள அரசியல் மாற்றத்திற்கு இந்திய அரசின் தலையீடே காரணம். இலங்கையின் பிரதமர் பொறுப்பை ஏற்றுள்ள மகிந்த ராஜபக்ஷவால் தமிழர்கள் மட்டுமன்றி இந்தியாவும் பாதிப்பை சந்திக்கும் என எச்சரித்தார்.

### இயக்குநர் கௌதமன்



"சுப்பிரமணிய சுவாமியின் இலங்கை பயணமும், மகிந்த ராஜபக்ஷவின் இந்திய பயணமும் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது. மகிந்த ராஜபக்ஷவால் இந்தியாவுக்கு பேராபத்து நிகழும், அவருடனான தொடர்பை இந்தியா துண்டிக்க வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# எம்.பி.பதவியையல்ல ஒப்பந்தத்திலிருந்தே வெளியேற வேண்டும்

## திகாம்பரம் தெரிவிப்பு





(கொழும்பு)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு பிரச்சினைக்கு சரியான தீர்வு காண வேண்டுமாயின் பாராளுமன்ற உறுப்பினர்பதவியை இராஜினாமா செய்வதை விட கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து ஒட்டுமொத்த தொழிற்சங்கங்களும் விலக வேண்டும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர், அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சம்பள உயர்வு விடயத்தில் தீர்வு கிடைக்காவிடின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஊடகங்களுக்கு அறிவித்துள்ள நிலையில் அதுகுறித்து கருத்து தெரிவிக்கும் வகையில் விசேட ஊடக அறிக்கை ஒன்றை அமைச்சர் விடுத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவி என்பது வாக்காளர்கள் வழங்கிய ஜனநாயக ஆணை. கூட்டு ஒப்பந்த விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தோ அமைச்சர் பதவியில் இருந்தோ விலக வேண்டும் என தொழிலாளர்கள் கோரவில்லை. கூட்டு ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும் அல்லது கூட்டு ஒப்பந்தத்திலிருந்து வெளியேற வேண்டும் என்றே கோரிக்கையையே அவர்கள் முன்வைப்பதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தனது தலைமையில் கடந்த மாதம் 23ஆம் திகதி தலவாக்கலையில் நடைபெற்ற சம்பள உயர்வைக் கோரி கம்பனிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தின் பின்னர் முழு மலையகமெங்கும்போராட்டங்கள் நடைபெறுவதுடன் வடக்கு, கிழக்கு மக்களும் ஆசிரியர் சமூகமும் ஆங்காங்கே போராட்டம் நடத்த மலையக இளைஞர்கள் கொழும்பில் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தும் அளவிற்கு அது வியாபித்துள்ளதாகவும் இவ்வாறான தொடர் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் கம்பனிகளுக்கும் அரசாங்கத்திற்கும் பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தும் எனவும் அமைச்சர் திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

கூட்டு ஒப்பந்த விடயத்தில் அரசாங்கம் தலையீடு செய்யாவிடின் இந்த அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவை மீள்பரிசீலனை செய்ய தயார் என தான் உள்ளிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர்கள் அறிவித்துள்ளதாகவும் ஒருபோதும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவிக்கவில்லை எனவும்அவ்வாறு விலகினால் அது தொழிலாளர்களையும் ஒட்டுமொத்த மலையக மக்களையும் அரசியல் ரீதியாக பாதிக்கும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலையக மக்களுக்கான உரிமைக் குரல் பாராளுமன்றில் எழுப்பப்பட வேண்டியது அவசியம் என்றும் அந்த விடயத்தில் அனைத்து மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

சம்பள அதிகரிப்பை பெற வேண்டியது கம்பனிகளிடமிருந்து என்றும் அதற்கு அரசாங்கத்தின் ஆதரவு பெறப்பட வேண்டும் எனவும் தெரிவித்த அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினால் அது கம்பனிகாரர்களுக்கே இலாபம் என்றும் தெரிவித்தார்.

எனவே நியாயமான சம்பளத்தை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டுமானால் முதலில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஆறுமுகன் தொண்டமான் மற்றும் வடிவேல் சுரேஷ் உள்ளிட்டோர் அதில் இருந்து விலக வேண்டும்எனவும்அதன்பின்னர்தொழிற்சங்க பலத்தைக் கொண்டு தொழிலாளர்களை ஒன்று திரட்டி போராட்டம் செய்து உரிய சம்பளத்தை பெறலாம் என்றும் அதற்கு தொழிலாளர் தேசிய சங்கமும் தமிழ் முற்போக்கு கூட்டணியும் பக்கபலமாக இருக்கும்என்றும்அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார். (இ-7)

# யார் பிரதமராக வந்தாலும் இராதாகிருஷ்ணன் ஆதரவு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தான் தான் பிரதமர் என்றும் ரணில் விக்கிரமசிங்க தான் தான் பிரதமர் என்றும் அறிவித்துள்ளனர்.

நாம் யாருக்கு ஆதரவு என அறிவிப்பதற்கு முன்னர் இவர்களில் யார் பிரதமர் என்ற பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பிரதமராக யார் வந்தாலும் அவருக்கு தமது ஆதரவை வழங்குவோம்எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவுக்கு ஆதரவுக்கரம் நீட்டும் ஐ.தே.க. அமைச்சர்கள்

## எஸ்.பி.திஸாநாயக்க

(கொழும்பு)

புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒரு குழுவினர் ஆதரவு வழங்கி அரசாங்கத்தை முன்னெடுக்க உதவி வழங்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களைக் கொண்ட ஒரு குழுவினரே இவ்வாறு மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# பெருந்தோட்ட தொழிலாளர் சம்பள விவகாரத்தை அரசாங்கம் தட்டிக் கழித்து விட முடியாது



## ஊடக அறிக்கையில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

கூட்டு ஒப்பந்தம் மூலமே தீர்வு காணப்பட வேண்டுமென கூறி, பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தினை அரசாங்கம் தட்டிக் கழித்து விட முடியாதென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும் வன்னி தேர்தல்கள் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

"ஆயிரம் ரூபாய் அடிப்படைச்சம்பளம்வழங்க வேண்டுமெனக்கோரி தோட்டத் தொழிலாளர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அதற்கு ஆதரவாக நாடளாவிய ரீதியில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக தலைநகரத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அணிதிரண்டு வலியுறுத்தல்களையும் செய்துள்ளார்கள். இவ்வாறான அழுத்தமளிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக அரசியல் சாயமின்றி இடம்பெற வேண்டும் என்பதோடு அதற்கான எமது பூரண ஆதரவையும் வழங்குவதற்கு தயாராகவே உள்ளோம்.

1992ஆம் ஆண்டு அரச தோட்டங்கள் 22 தனியார் கம்பனிகளுக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வாழ்க்கைப் படியும் நிறுத்தப்பட்டது.

அந்தவகையில் கூட்டு ஒப்பந்த விவகாரம் ஆண்டு தோறும் நடைபெறும் ஒரு விழா போன்றாகிவிட்டது. சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இழுபறிக்கு உள்ளாவதும் இறுதியில் குறைந்த தொகை அதிகரிப்புடன் இணக்கப்பாட்டிற்கு வருவதுமாகவே உள்ளது.

மேலும் கூட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக அரசதுறை சம்பள பட்டியலுக்குள்ளோ அல்லது தனியார் துறை சம்பளப் பட்டியலுக்குள்ளோ தோட்டத் தொழிலாளர்கள்உள்வாங்கப்படாது தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

அரசாங்கம் தம்மிடமிருந்து தோட்டங்களை தனியார் துறைக்கு வழங்கியுள்ளது. மேற்படி தனியார் துறையினால் அரசாங்கம் பல நன்மைகளைப் பெறுகின்றது என்பதற்காக நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் வளர்ச்சி கண்டு ஏற்றுமதியில் அதிகளவு வருமானத்தினை ஈட்டித்தருவதற்கு காரணமாக உள்ள பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கைகளை நிராகரித்து விட முடியாது.

ஆகவே முதலாளிமார் சம்மேளனம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களை உடனடியாக ஒரு மேசைக்கு கொண்டு வந்து தற்போதைய பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அந்தப் பாட்டாளி வர்க்கத்தின் நீண்டகால கோரிக்கையை தீர்ப்பதற்காக கொள்கை ரீதியான முடிவொன்றை எட்ட வேண்டும்" என அவ்வறிக்கையில் சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார். (7-250)




# வவுனியா பொது அமைப்புக்களின் ஒன்றியம் மனித சங்கிலி போராட்டத்திற்கு அழைப்பு

(குருமன்காடு)

வவுனியா பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் அனைவரையும் பங்கெடுக்குமாறு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

நாளாந்தச் சம்பளம் 1000 ரூபாவுக்காகப்போராடும்மலையகத் தொழிலாளர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டி வவுனியா பொதுஅமைப்பினர் மனிதச் சங்கிலிப்போராட்டம்ஒன்றினை நடத்த உள்ளனர்.

நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா பொது வைத்தியசாலைக்கு முன்பாக ஏ-9 வீதியின் நடைபாதையில் இம் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடைபெற உள்ளது.


இலங்கையின் பொருளாதாரத்தின் பெரும்பங்கை ஈட்டித்தரும் மலையகத் தொழிலாளர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இலங்கையின் விலைவாசி ஏற்றம், உலக மயமாக்கலின் தாக்கம், பொருளாதார நெருக்கடிகள் என முகம் கொடுக்க முடியாத மலையகத் தொழிலாளர்கள் தமக்கு நாளாந்தச் சம்பளமாக 1000 ரூபா வேண்டி போராட்டக் களத்தில் இறங்கிப் போராடி வருகின்றனர்.

இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து இலங்கையின் பல பாகங்களிலும் பல தரப்பட்ட போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-250)

# முகமூடி அணிந்த இளைஞர் குழு அட்டகாசம்

## வீடு,உடைமைகள் சேதம்; தாய்,மகள் வைத்தியசாலையில்





(பனிக்கன்குளம்)

வவுனியாவில் முகமூடி அணிந்த இளைஞர்குழுவினால் வீடு ஒன்றும் உடைமைகளும் சேதமாக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா வேப்பங்குளம் ஆறாம் ஒழுங்கை பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு ஐந்து பேரைக் கொண்ட கும்பல் வீட்டினுள் புகுந்து அங்கிருந்த தாயையும், மகளையும் தாக்கியதுடன் அங்கிருந்த தொலைக்காட்சி, குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், வீட்டின் யன்னல் கதவுகள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றையும் அடித்து நொருக்கிவிட்டு தப்பித்து சென்றுள்ளனர்.

மேலும் இத்தாக்குதலுக்கு இலக்காகிய தாயும் மகளும் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் முகத்தை மூடிமறைத்து கொண்டு வந்ததுடன் தலைக்கவசமும் அணிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (7-281)

# முன்னாள் அரச அதிபர் இராசநாயகத்தின் நினைவாக புதிய பஸ் தரிப்பு நிலையம் கையளிப்பு






(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் மகாதேவ ஆச்சிரம முன்னாள் தலைவருமான மறைந்த இராசநாயகத்தின் முதலாம் ஆண்டு நினைவாக அவரது குடும்பத்தினரால் பல இலட்சம் ரூபா செலவில் பூநகரியில் புதிய பஸ் தரிப்பு நிலையமொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

மகாதேவ ஆச்சிரமத்தின் ஸ்தாபகத் தலைவராக இருந்த இராசநாயகம் சுகயீனம் காரணமாக கடந்த வருடம் உயிரிழந்திருந்தார். இதனையடுத்து அந்த ஆச்சிரமத்திற்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டு ஆச்சிரமப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அவரது ஓராண்டு நினைவு தினம் அண்மையில் நடைபெற்றது.

இந் நிலையில் ஓராண்டு நினைவாக சுமார் ஐந்து இலட்சம் ரூபா செலவில் அவர் பிறந்த மண்ணான பூநகரியில் அவரது குடும்பத்தினர் புதிய பஸ் தரிப்பிடமொன்றை அமைத்தனர். பூநகரி சுனாமியடிச் சந்தியில் அமைக்கப்பட்ட இந்த பஸ் தரிப்பிடத்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவரது மனைவி நாடாவெட்டித் திறந்து வைத்து பொது மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமான பூநகரிப் பிரதேசத்தில் குறித்த இடத்தில் பஸ் தரிப்பு நிலையம் இல்லாததால் அப்பகுதி மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வந்திருந்தனர்.

இதற்கமையவே தந்தையின் நினைவாக பிள்ளைகளின் உதவியுடன் புதிய பஸ்தரிப்பிடம் அமைக்கப்பட்டு பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை தந்தையாரின் மகாதேவ ஆச்சிரமத்திற்கு அவரது குடும்பத்தினரும் பல்வேறு உதவிகளை ஏற்கனவே வழங்கியிருக்கின்ற நிலைமையிலேயே தந்தையின் நினைவாக பூநகரியில் புதிய பஸ் தரிப்பு நிலையத்தை அமைத்து கொடுத்துள்ளனர். இதே போன்று அப் பகுதியில் தங்களால் இயன்ற ஏனைய உதவிகளையும் செய்து கொடுப்பதாகவும் அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (7-9)

# பலகோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மலசலகூடத்தில் சட்டவிரோத நடவடிக்கை

## வவுனியா பிரதேச மக்கள் விசனம்

(குருமன்காடு)

வவுனியாவில் பல கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மலசலகூடத்தில் மது அருந்தும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளதுடன் விடுதியாகவும் செயற்பட்டு வருகின்றதைக் காணக்கூடியதாக உள்ளதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திலுள்ள பொது மலசலகூடத்தில் தொழில் புரிபவர்களே இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் மக்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு மக்கள் வரிப்பணத்தில் பல கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை இங்குள்ள அதிகாரிகளும் கண்டுகொள்ளாமல் உள்ளனர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்தவகையில் வவுனியா நகரத்தின் முக்கிய பகுதியிலுள்ள மலசலகூடத்தில் திருத்தங்களை மேற்கொண்டுள்ள போதிலும் அதனை மக்களிடம் கையளிப்பதற்கு சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் நடவடிக்கை மேற்கொள்ளாமல் மந்த நிலையில் உள்ளதாக மக்கள் மேலும் விசனம் தெரிவித்துள்ளனர். (7-250)

ஆப்பிழுத்த குரங்குபோல்
அகப்பட்டுக் கொண்டீரோ.

~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிரதமராக மகிந்த நியமனம் அரசியலில் என்ன நடக்கும்?

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்ததையடுத்து நாட்டில் மிகப்பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியால் நாட்டில் சட்டம் ஒழுங்கு குலையாவிடினும் பாராளுமன்றம் கலைபடலாம் அல்லது சர்வாதிகாரத்தை நோக்கிய ஒரு அரசியல் சூழமைவு ஏற்படலாம் என்ற ஊகங்கள் இருக்கவே செய்கின்றன.

பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்கி அவரின் இடத்தில் மகிந்த ராஜபக்ஷவை நியமிக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்கிறது ஒரு தரப்பு.

இல்லை பிரதமரை நீக்குகின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது என்ற வாதம் மறுதரப்பாக எழுகிறது.

இவை ஒருபுறம் இருக்க, பிரதமராகப் பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷ தனது பெரும்பான்மை பலத்தைப் பாராளுமன்றத்தில் நிரூபித்தாக வேண்டும்.

அதேநேரம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பதற்கான முயற்சியை முறியடிப்பதில் ஐக்கிய தேசியக் கட்சி அதீத தீவிரம் காட்டும்.

சிலவேளை பெரும்பான்மை பலத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நிரூபிக்கவில்லை என்றால், மீண்டும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க வருவார் என்று கற்பனையிலும் நினைக்க முடியாது.

பாராளுமன்றத்தில் மகிந்த தோற்றால் ஜனாதிபதி மைத்திரியின் அடுத்த கட்ட நடவடிக்கை பாராளுமன்றத்தைக் கலைப்பதாகவே இருக்கும்.

தவிர, மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவிக்கான பெரும்பான்மை பலத்தை நிரூபித்து விட்டால் எதிர்க்கட்சித் தலைவர் யாருக்கு என்ற கேள்வி எழும்.

இங்குதான் ரணில் விக்கிரமசிங்க, இரா. சம்பந்தருக்கு விட்டுக் கொடுத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் புறந்தள்ளி சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக இருப்பாரா? என்ற கேள்வி எழுகிறது.

இதற்கான பதில் தனது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கின்ற விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருடைய பக்கம் நின்றது என்று பார்க்கப்படும்.

ஆக, இப்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்ததன் விளைவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஏலவே ரணில் விக்கிரமசிங்கவை நம்பி எல்லாவற்றையும் போட்டுடைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன முகத்துடன் தமிழ் மக்களைச் சந்திக்கப் போகிறது என்ற விமர்சனம் தூள் பறக்கிறது.

இந்நிலையில் கூட்டமைப்பு யார் பக்கம் என்பதைத் தீர்மானிப்பது சாதாரணமான விடயமல்ல.

மகிந்தவின் பக்கம்; ரணிலின் பக்கம்; ஏன் நடுநிலை என்ற மூன்று கட்டத்தில் எந்தத் தீர்மானத்தைக் கூட்டமைப்பு எடுத்தாலும் அது தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்புக்கு அதிக விமர்சனத்தை ஏற்படவே செய்யும்.

## ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவு என அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக அக்கட்சி நேற்று சனிக்கிழமை அறிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து பெரும்பாலான கட்சிகளின் உறுப்பினர்கள் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிப்பதுடன் தங்களது வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் பாரிய நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பலத்தை ஏற்படுத்தும் நோக்கில், 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ரிஷாட் பதியுதீன், அமீர் அலி ஆகியோரும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## புதிய பிரதமர் மகிந்தவுக்கு சீன தூதுவர் நேரில் வாழ்த்து

புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சீனாவின் இலங்கைக்கான தூதுவர் சந்தித்து தனது வாழ்த்துக்களையும் சீன அரசின் தகவலையும் கூறினார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நேற்று மாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரி சீனத் தூதுவராவார்.

புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசை சீன அரசு வரவேற்பதாக அந்த நாட்டுத் தூதுவர் இதன்போது எடுத்துக் கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## மகிந்த ஆதரவாளர்கள் யாழில் வெடி கொளுத்தி நேற்றும் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ள நிலையில் யாழில் அவரது ஆதரவாளர்கள் வெடி கொளுத்தியும், ஆர்ப்பரித்தும் தமது மகிழ்ச்சியை கொண்டாடியுள்ளனர்.

யாழிலுள்ள பிரதான வீதிகள் ஊடாக, வாகனங்களில் மகிந்த ராஜபக்ஷவின் பாரிய பதாகை ஒன்று கட்டப்பட்டு வாகன தொடரணியாக சென்ற ஆதரவாளர்கள் முக்கிய சந்திகளில் வெடி கொளுத்தி ஆர்ப்பரித்து தமது மகிழ்ச்சியை கொண்டாடினார்கள்.

அத்துடன் மத்திய பேருந்து நிலையத்தில் சிலர் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்ததுடன், பொங்கல் மற்றும் இனிப்புக்கள் வழங்கி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (ம)

## தங்க ஆபரணம் கண்டெடுப்பு

(கரணவாய்)

நெலலியடி வர்த்தக நிலையமொன்றில் கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணம் நெல்லியடி வாணிபர் கழகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (இ-60)

## தீபாவளியை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களை திறக்க அனுமதி

(கரணவாய்)

எதிர்வரும் தீபாவளி தினத்தை முன்னிட்டு நெல்லியடி வணிகர்கழக எல்லைகுட்பட்ட வர்த்தக நிலையங்களுககு இன்று 28ஆம் திகதி மற்றும்எதிர்வரும்4ஆம்திகதி ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (7-60)

## சிறுவர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை வதிரி முன்பள்ளியின் சிறுவர் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபை செயலாளர் அருணகிரி வினோராஜ் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் தாங்கவேலாயுதம் ஐங்கரன் கலந்து கொள்வார். (7)

## பிரதமர் மகிந்தவின் செயலாளராக அமரசேகர நியமனம்

(கொழும்பு)

பிரதமரின் புதிய செயலாளராக எஸ். அமரசேகர நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு இருக்கின்ற அதிகாரத்தின்படி இந்த நியமன்ம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமரின் புதிய செயலாளராக நியமனம் பெற்றுள்ள எஸ். அமரசேகர நேற்று மாலை தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். (ம)

## பிரதமர் மகிந்த தொடர்பான வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கி மகிந்த ராஜபக்ஷவை புதிய பிரதமராக நியமித்துள்ளதாக அரசாங்கம் வர்த்தமானி மூலம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பிரதமராக பதவியேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சோர்வுகளைத் தவிர்க்க...

- அமைதியை நாடுங்கள். அத்துடன் தியானத்தைக் கடைப்பிடியுங்கள்.
- நிறையப் புத்தகங்களைப் படியுங்கள். அதிலும் தன்னம்பிக்கையூட்டும் புத்தகத்தை வாசியுங்கள்.
- சாதனையாளர்களின் வெற்றியை அறிந்து அதன் வழிகளைப் பின்பற்றி சோர்வுகளுக்குத் தீர்வு காணுங்கள்.
- கோயிலுக்குப் போய் வாருங்கள்.
- நல்லவற்றையே சிந்தித்துச் செயற்படுங்கள்.
- சோர்வு என்பது நிரந்தரமல்ல என்பதை உணர்ந்து கொண்டு நல்லவழி செல்லுங்கள்.
- தோல்விகளை எப்போதுமே மிகைப்படுத்தாது வெற்றியைப் பற்றியே சிந்தித்தால் சோர்வுகளைத் தவிர்த்திடலாம்.
- மனம் எதனால் குழம்புகிறது? என்பதைப் புரிந்து கொண்டு சோர்வைப் போக்கிடலாம்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- பொறுமையுள்ளவர்கள் பூமியை சுதந்தரித்து அமைதிப்பெருக்கில் பேரானந்தம் அடைவார்கள்.
- மகனே! நல்ல போதனையை மறக்காதே. என் கட்டளைளை உன் இதயம் கடைப் பிடிக்கட்டும். அவைகள் தான் உனக்கு நெடுநாள் வாழ்வையும், தீர்க்க ஆயுளையும், சாந்தியையும் அள்ளி அள்ளித் தரும்.
- திராட்சை மது சிவப்பாய் இருக்கும்போதும், மதுக் கோப்பையில் அதன் வர்ணம் பளபளப்பாய்ப் படியும் போது அது தானாகவே இயங்கும் போதும் அதைப் பாராதே! முடிவில் அது பாம்பைப்போல கடித்து, வீரியனைப் போல் கொட்டும்.
- சாந்தமான மனம் உடலுக்கு ஜீவன். ஆனால், பொறாமையோ ஒரு எலும்புருக்கி.
- அடங்காதவர்களை எச்சரியுங்கள். பலஹீன மனம் படைத்தவர்களைத் தேற்றுங்கள். எல்லா மனிதர்களிடமும் பொறுமையாய் இருங்கள்.
- பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே. நியாயக்கேடு செய்கிறவர் மீது பொறாமை கொள்ளாதே. ஏனெனில் அவர்கள் புல்லைப் போல வெகுசீக்கிரத்தில் அறுப்புண்டு, பசும்பூண்டைப் போல வாடிப் போய் விடுவார்கள்.

# பாடசாலைகளுக்கிடையிலான துடுப்பாட்டம்

# மானிப்பாய் இந்துக்கல்லூரி வெற்றி

இலங்கை பாடசாலைகள் துடுப் பாட்டச் சங்கத்தின் ஏற்பாட் டில், யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் ஒழுங்கமைத்து நடத்தும் 13 வயதுப் பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான மட்டுப் படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட துடுப்பாட்ட போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

24 ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, 22.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜெ.அஸ்வின் 13, ஆர்.ஹறிகரன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக ஜெ.அனோஜன் 5 ஓட்டங்களைக் கொடுத்து, 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, 35.1 ஓவர்களில் 26 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பந்துவீச்சில் மானிப்பாய் இந்து சார்பாக, பி.ஜதுசன் 4 விக்கெட்டுகளையும், ரி.விதுசியன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

17 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸினைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, ஆட்டம் முடிவடையும் போது, 8 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. துடுப்பாட்டத்தில் எம்.தெய்வீகன் 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்து வீச்சில் ரி.திசாந்தன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

போட்டி விதிமுறையின் படி முதல் இனிங்ஸில் முன்னிலை வகித்த அணி வெற்றிபெற்ற அணியாகக் கொள்ளப்படும் விதிமுறைக்கமைய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (க-26)

## தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் விளையாட்டுப் போட்டி முடிவுகள்



கருத்திட்ட முகாமைத்துவ இளைஞர் விவகார தெற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம் தோறும் நடத்திவரும் தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் 30 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா கடந்த 25 ஆம் திகதி அன்று மாத்தறை கொட்டவிலவில் அமைந்துள்ள மாத்தறை மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி இடம்பெற்றுவருகிறது.

யாழ்ப்பாணத்தின் சாவகச்சேரி பிரதேசத்தை சேர்ந்த நாகேந்திரன் நிதுஜன் உயரம் பாய்தல் போட்டியில் 3 ஆம் இடத்தினையும் நீளம் பாய்தல் போட்டியில் 2 ஆம் இடத்தினையும் பெற்று சாதனை படைத்துள்ளதோடு யாழ்ப்பாண மாவட்டத்துக்கும் வடமாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். (க)




இந்த நிகழ்வின் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச சம்மேளனத்திற்கு உட்பட்ட பண்டாரவன்னியன் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த செல்வி சிவசோதிநாதன் விதுஷா 5000 மீ. ஓட்டப் போட்டியில் 2ம் இடத்தையும் 1500 மீ. ஓட்டப் போட்டியில் 2ம் இடத்தையும் பெற்று ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் வடமாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். (க)

## ஹோலி, டோனி நீக்கம்; தலைவராகிறார் சர்மா





மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு எதிரான இருபது-20 தொடரில் இருந்து இந்திய அணியின் விக்கெட் கீப்பர் டோனி நீக்கப்பட்டுள்ளார்.


அதுமட்டுமின்றி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இருபது-20 தொடரில் இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 0-2 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை இழந்த நிலையில், அடுத்து 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் இந்திய அணி வெற்றியும், 2-வது போட்டி டையில் முடிந்தது.

நேற்று 3-வது ஒருநாள் போட்டி புனே எம்சிஏ ஸ்டேடியத்தில் நேற்று பிற்பகல் 1.30க்கு தொடங்கியுள்ளது.

அத்துடன் ஹோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதால் தலைவராக ரோகித் சர்மா செயற்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதில் இளம் வீரர்களிலும் அணியில் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (க)

## கார்த்திக் இனி தேவையில்லை தேர்வுக் குழு அதிரடி முடிவு




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு இனிமேல் தினேஷ் கார்த்திக் தேவையில்லை என்று தேர்வுக்குழு அதிரடியாக முடிவு எடுத்துள்ளது.

இந்திய ஏ அணி நியூசிலாந்தில் விளையாடவுள்ளது. அதற்கான இரு அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் தினேஷ் கார்த்திக் இடம்பெறவில்லை.

தினேஷ் கார்த்திக் விளையாடிய அனைத்து போட்டிகளில் கிடைத்த குறுகிய வாய்ப்புகளையும் வீணடித்ததால் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தினேஷ் கார்த்திக் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு எதிரான இருபது-20 தொடர்களில் துடுப்பாட்டக்காரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த இரு தொடர்களிலும் விக்கெட் கீப்பராக ரிஷப் பந்த் தேர்வாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து தினேஷ் கார்த்திக் இனிமேல் டெஸ்ட் கிரிக்கெட் விளையாட வாய்ப்பிருக்கிறதா என்கிற கேள்வி எழுந்துள்ளது.

மேலும் தன்னை மீண்டும் நிரூபிக்க தினேஷ் கார்த்திக்குக்கு இந்த இரு தொடர்கள் மட்டுமே உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## யாழ்.சுப்பர் லீக் - 2018 விக்டோறி அணியிலிருந்து ஐவர் தெரிவு











யாழ்.சுப்பர் லீக் தொடருக்காக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் யாழ்.நகரில் IPL வடிவில் போட்டியை நடத்த உள்ளனர். யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 26 கழகங்களிலிருந்து பதிவு செய்யப்பட்ட வீரர்களாகவும் தொடருக்கு விண்ணப்பித்தவர்களிலுமிருந்து 15 பேர் கொண்ட 8 அணிகளை ஏலத்தின் மூலம் 8 முகவர்கள் தெரிவு செய்துள்ளனர்.

அதில் மூளாய் விக்டோரி அணியிலிருந்து 5பேர் தெரிவு செய்யப்பட்டனர். கே.கதியோன், பி.பிரதீஸ் யாழ்ப்பாணம் பந்தேர்ஸ் அணிக்கும் ரி.சரத்குமார், கே.பிரணவன், பி.சசிதரன் ஆகியோர் பண்ணை டில்கோ கிளடியற்றேஸ் அணிக்கும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மூளாய் விக்டோறி அணி பிரிவு III இற்கான தொடரில் இறுதிப்போட்டிக்கும் யாழ்.கிரிக்கெட் லீக் தொடரில் PLAY OFF சுற்றுக்கும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## கிணற்றில் வீழ்ந்த...

காரைநகர் தோப்புக்காட்டை சேர்ந்த குணபாலசிங்கம் கயநியா (வயது 17) என்ற மாணவியே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவி தனது தாயுடன் குளிப்பதற்காக கிணற்றடிக்கு நேற்று காலை சென்றுள்ளார். தாய் குளிப்பதற்கு குறித்த மாணவி கிணற்றில் இருந்து தண்ணீர் அள்ளி கொடுத்துள்ளார்.

கிணற்றடியில் பாசி காணப்பட்டதால் கால் சறுக்கி குறித்த மாணவி கிணற்றுக்குள் விழுந்துள்ளார். தாயார் அயலவரின் உதவியுடன் அரை மணி நேரத்தின் பின்னர் மாணவியை கிணற்றில் இருந்து மீட்டுள்ளனர். ஆனால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மாணவி கிணற்றினுள்ளே உயிரிழந்திருந்தார்.

உடனடியாக சடலம் காரைநகர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு பின்னர் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. இந்த மரண விசாரணையை தீவக மரண விசாரணை அதிகாரி நாகராஜா தியாகராஜா மேற்கொண்டிருந்தார். (ம-9)

## நம்பிக்கையில்லா...

அவர் மேலும் தெரிவிக்கையில்.

அரசியலமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவரே பிரதமர் பதவியை வகிக்க முடியும். அந்தப் பெரும்பான்மை எனக்கு இருக்கின்றது.

அரசியல் அமைப்புக்கு அமைய தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதமரை பதவி விலக்க இரண்டு முறைகளே உள்ளன. அதாவது பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டால் அல்லது பிரதமர் சமர்ப்பித்த வரவு-செலவு திட்டம் தோல்வியடைந்தால் மாத்திரமே அவரை பதவி விலக்க முடியும்.

அப்படியும் இல்லாவிட்டால் பிரதமர் தனது பதவியில் இருந்து தாமாகவே விலக வேண்டும். தற்போது சட்டபடியான பிரதமர் பதவியை நான் வகிக்கின்றேன். நாடாளுமன்ற பெரும்பான்மை எனக்கு இருக்கின்றது. அவ்வாறு பெரும்பான்மை இல்லாவிட்டால் நான் பதவிவிலக தயார்.

இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் அவ்வாறு பதவிவிலகியுள்ளேன். தற்போதைய பிரச்சினையை நாடாளுமன்றத்தின் ஊடாகவே தீர்க்க முடியும். இந்த சூழ்நிலையில் பொது மக்கள் மத்தியில் தனக்கு நம்பிக்கை இல்லை என உணர்ந்த படியினாலேயே நாடாளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருவது தொடர்பில் யோசனை உள்ளது. முதலில் நாடாளுமன்றத்தை கூட்ட வேண்டும் என கூறினார். (ம)

## அரசியலமைப்புக்கு...

யில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

சட்டத்திற்கு அமைய பக்கச்சார்பற்ற முறையில் இந்த நெருக்கடிக்குரிய சிக்கலினை அவிழ்க்கவுள்ளேன்.

இச் சந்தர்ப்பத்தில் அனைவரும் புத்திசாதுரியத்துடன் அமைதிகாத்து செயற்படுமாறு அரசியல் கட்சிகளினுடைய தலைவர்கள் மற்றும் பொதுமக்களிடம் வேண்டு கோளினை முன்வைக்கின்றேன்.

முப்படையினரும், பொலிஸாரும் தமது கடமைகளை உரிய வகையில் நாட்டுக்கு வழங்க வேண்டும்.

அத்துடன் அரச நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் பொறுப்புடன் தமது கடமைகளை செய்ய வேண்டும்

70 ஆண்டு பழைமை வாய்ந்த பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய அதியுயர் பாராளுமன்றத்தின் கோட்பாடுகளை கருத்திற்கொண்டு இந்த விடயத்தை தீர்க்க வுள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரியவின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(ம)

## அமைச்சரவை...

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரசாங்க வங்கிகளின் பிரதானிகளும் இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நாட்டு மக்களுக்கு...

வர்தன தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாளை திங்கட்கிழமை புதிய அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய அமைச்ரவை நாளை சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளதாக சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் புதிய அமைச்சரையில் 30 பேர் அல்லது அதனைவிட குறைவடையும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (ம)

## நடு நிலைமை...

த்துள்ளார்.

இந்த முடிவு நாட்டுக்காகவோ நாட்டு மக்களுக்காகவோ மேற்கொள்ளப்பட்டதல்ல.

எனவே தாம் எவருக்கும் ஆதரவை வழங்கப்போவதில்லை என அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டமைக்கும் தமது எதிர்ப்பை தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## வெளிநாட்டு தூதுவர்...

தந்திரிகள் பலர், தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆராய்ந்தனர்.

ரணில் விக்கிரமசிங்கவை அரசியலமைப்புக்கு முரணாக பிரதமர் பதவியிலிருந்து நீக்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றையும் வரும் நவம்பர் 16ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

இந்த நிலையில் நாட்டில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் எழுதிவரும் நிலையில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சு நடத்துகின்றனர். (ம)

## ஜனநாயகத்துக்கு...

த்தைப் பாதுகாப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானம் என மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதே தமது எதிர்பார்ப்பு எனவும் மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசாங்கமொன்றை ஏற்படுத்துவதே தமது நோக்கம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனநாயகத்திற்கும் சட்டத்திற்கும் மதிப்பளித்து செயற்படுமாறு ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் தாம் வேண்டுகோள் விடுப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ம)

## சரியான நேரத்தில்...

தொலைபேசியில் தம்மைத் தொடர்பு கொண்டு ஆதரவைக் கோரியதாக சம்பந்தன தெரிவித்தார்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் பரிசீலிக்கப்படும் என அவர்களிடம் கூறியதாகவும் சம்பந்தன் தெரிவித்தார்.

இதேநேரம், தனிப்பட்ட நபர் யார் என்பது முக்கியமல்ல என்றும், கொள்கைகளே முக்கியம் என்றும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

இதற்கமைய, உரிய நேரத்தில் எடுக்க வேண்டிய நேரத்தில் எடுக்கவேண்டிய தீர்மானங்களை மேற்கொள்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறை

# வாள்வெட்டுடன் தொடர்புடையவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

தெல்லிப்பளை பிரதேசத்தினைச் சேர்ந்த நிரோஜன் (வயது 21) என்ற இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இவரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றதுடன், நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையினையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-101)

# ஜனாதிபதி மைத்திரி தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினர் கலந்துரையாடல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பங்குபற்றுதலுடன், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினை பிரதிநிதித்துவம் செய்யும் சகல கட்சிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடல் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் அந்த எதிர்கால நடவடிக்கை களை மேற்கொள்வதற்காக புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்ற பிரேரணை பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீரவினால் இதன்போது முன்வைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க அதனை ஆமோதித்ததுடன், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக அதற்கு இணக்கம் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த அழுத்கமகே, இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், ஈ.பி.டி.பி கட்சி தலைவர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட கட்சி தலைவர்கள் பலரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றியதுடன், அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு தமது ஒத்துழைப்பினை பெற்றுத் தருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ம)

# அலரிமாளிகையில் சீன தூதுவரை சந்தித்த ரணில்

(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஷியுவான், ஜனாதிபதியால் நேற்றுப் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினார். அலரிமாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

புதிய பிரதமராக நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷவை, அவரது இல்லத்தில், சீன இராஜதந்திரிகளுடன் இணைந்து சந்தித்துப் பேசிய பின்னரே, அலரிமாளிகைக்குச் சென்று ரணில் விக்கிரமசிங்கவை சீனத் தூதுவர் தனியாகச் சந்தித்துள்ளார்.

முன்னதாக, 20இற்கும் மேற்பட்ட நாடுகளின் இராஜதந்திரிகள் பங்கேற்ற கூட்டம் அலரி மாளிகையில் நடந்திருந்தது. அதில் சீனத் தூதுவர் பங்கேற்கவில்லை.

சீன அதிபர் ஷி ஜின்பிங் கொடுத்தனுப்பிய வாழ்த்துச் செய்தியை, மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று சீனத் தூதுவர் கையளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ஐ.தே.க உறுப்பினர்களிடையே போட்டி அமைச்சரவையை அலரி மாளிகையில் கூட்டுகின்றார் ரணில்

(கொழும்பு)

பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க இன்று அலரிமாளிகையில் போட்டி அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் பங்கேற்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் அமைச்சரவையில் இருக்கிறது என்று, ஐ.தே.க பேச்சாளர் ஹரீன் பெர்னான்டோ தெரிவித்தார்.

அதேவேளை, தாம் பிரதமர் செயலகத்தை இயக்கி வருவதாகவும், ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு நீக்கப்படும் போது அவர் அலரிமாளிகையில் இருந்து வெளியேறுவார் என்றும், கூட்டு எதிரணியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ம)

வேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்த உத்தரவாதம் வழங்கினால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அத்தோடு, புதிய அரசியலமைப்பு தொடர்பாக இலங்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரணையையும் செயற்படுத்த வேண்டுமென்ற நிபந்தனையையும் கூட்டமைப்பு முன்வைப்பதாக சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். (ம)

கொவிசெத
திகதி 2018.10.27
சீட்டிழுப்பு இலக்கம் 1925
M 03 44 49 59

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27-10-2018
சீட்டிழுப்பு இலக்கம் 886
L 2 0 9 4 0 1

சுபிரி வாசனா
திகதி 2018/10/27
சீட்டிழுப்பு இலக்கம் 1372
12 04 17 40 49 30 41

செவன
திகதி 2018/10/27
சீட்டிழுப்பு இலக்கம் 130
E 04 43 45 65

## மகிந்த பிரதமரான...

இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களிற்காக சீனாவிடமிருந்து பெருமளவு கடனை பெற்றார். இந்த திட்டங்களில் சில எந்தவித பொருளாதார நன்மையையும் கொண்டிராதவை என குறிப்பிட்டுள்ளது.

இம்மாத ஆரம்பத்தில் அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் சீனாவின் கடன் பொறி இராஜதந்திரத்தை கடுமையாக விமர்சித்திருந்ததுடன் அதற்கான உதாரணமாக இலங்கையை சுட்டிக்காட்டியிருந்தார் என நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

சீனாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் வேகமாக வளர்ந்து வரும் கடற்படையின் தளமாக மாறும் என அவர் குறிப்பிட்டிருந்தார் எனவும் நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.


சீனா குறிப்பிட்ட துறைமுகத்தை இராணுவ நோக்கங்களிற்காக பயன்படுத்தலாம் என மேற்குல அதிகாரிகள் அச்சம்கொண்டுள்ளதாக நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது. (ம)


அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
இன்னும் 9 நாட்கள் மட்டுமே உள்ளன
2020-ம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ளன. உங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.
திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd
321, K.K.S Road, Jaffna.
(முட்டாஸ் கடை சந்திக்கு அருகில்)
தொ.பே இல.: 077 755 4528
(6121)

தவறிவிட்டது
பழனிச்சாமி சிவனருள் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (812194674V), சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் வங்கி அட்டைகள் என்பன அடங்கிய கைப்பை (பேர்ஸ்) மானிப்பாய்க்கும் பொம்மைவெளிக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 439 6698

வீடு வாடகைக்கு தேவை
யாழ்ப்பாணத்தில் நல்லசூழலில் வீடு வாடகைக்கு தேவை.
T.P. 0779086737

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK – 550 /=Kg
கனடா – 900 /=Kg
ஜேர்மனி – 700 /=Kg
நெதர்லாந்து – 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS


அதி உயர்தரம் மிக்க செவன் ஸ்டார் ஓடுகள் விற்பனை முகவரும் ஏக விநியோகஸ்தரும்
கதிர் ஸ்டார் ஓடுகளும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
1075, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
077 651 3299

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 03.11.18 சனி 8 மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி. 0762 669 614 ஆரம்பம் :05.11.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

அலுவலக வேலை வாய்ப்பு
யாழ் நகரில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்காக
Billing Staff தேவை (பெண்)
தகைமைகள்
1) G.C.E A/L சித்தி
2) நகர எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்
3) நீண்ட காலம் தொழில் புரியக்கூடியவராக இருத்தல் வேண்டும்
4) வயது 18-30 வரை
தொடர்புக்கு 076-2534275 | 076-8961426

வேலையாட்கள் தேவை
கொழும்பில் இயங்கிவரும் டிஷ் ஆன்டெனா மற்றும் கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை மற்றும் சர்விஸ் செய்யும் நிறுவனத்துக்கு டிஷ் ஆன்டெனா பொருத்துநர் மற்றும் உதவி ஆட்கள் மற்றும் வேலை பழக விருப்பமுடைய நபர்கள் தேவை. திறமைக்கு ஏற்ப 25,000/= தொடக்கம் 50,000/= வரை சம்பளம் கிடைக்கும். உணவு, தங்குமிடம் இலவசம். குடும்ப பொறுப்புள்ள நிரந்தர வேலை தேவைப்படுவோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
Kumar - 077 771 0785
Sats tech Engineers (Pvt) Ltd
51/102, Wolfendhal Street, Colombo 13.

உங்கள் தகைமைக்குரிய ஓர் அரிய வேலைவாய்ப்பு
வட மாகாணத்தில் பெரும் ஆற்றலுடன் இயங்கிவரும் எமது EDM Company ஆனது தனது புதிய கிளைகளை யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் விஸ்தரித்துள்ளது. அக் கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள்
● உதவி முகாமையாளர் (Assistant Manager)
● மேற்பார்வையாளர் (Supervisor)
● நிர்வாகி (Administrator) (O/L, A/L கற்ற ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
● கணக்கு உதவியாளர் (Account Assistant)
● முகாமைத்துவ பயிற்றுவிப்பாளர்
● விற்பனையாளர்கள்
● Store காப்பாளர்
● அலுவலகர்கள்
பதவி வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
தொடர்பு: 077 211 3177, 076 893 1979
மேலதிக விபரங்களுக்கு: 8.00am - 6.00pm


## ரணிலின் பாதுகா...

பிரதமருக்கான பாதுகாப்பு மற்றும் வாகனங்களை அகற்றுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக மங்கள சமரவீர தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இவ்வாறு அகற்றப்படும் பாதுகாப்பு மற்றும் வாகனங்களை தற்போது நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இச்செயற்பாடு ஒரு வெட்கக்கேடான செயற்பாடு எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)


British College of Higher Studies
BCHS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Admission Starts for November batches
➤ IELTS (Academic / General)
Student Visa Migration Visa மூலம் செல்பவர்களுக்கான பாடநெறி.
➤ IELTS LIFE SKILLS (A1, B1 Exams)
Settlement Visa மூலம் செல்பவர்களுக்கான பாடநெறி.
➤ Diploma in English
A/L மாணவர்கள், தொழில் புரிவோர் மற்றும் தொழில் தேடுபவர்களுக்கான பாடநெறி.
➤ 1. Spoken English with Grammar
2. Spoken Sinhala with Grammar
மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் தேடுபவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடநெறி.
➤ SIP ABACUS
5 வயது முதல் 12 வயது வரையான மாணவர்களுக்கான கணித விருத்திக்கான பாடநெறி.
BCHS, No.15, Sirambiyady Lane, (off Stanley Road) Jaffna.
Tel: 021 222 4550, 076 138 0212
(C-4243)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kg க்கான கட்டணம்
UK - 550/=, France - 700/=, Germany - 650/=, Swiss - 750/=, Canada - 950/=
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.(முட்டாஸ் கடை சந்தி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி கிளிநொச்சி, மன்னார். (6121)
3-5 Working Days

அமெரிக்க லொத்தர் விசா
அமெரிக்காவில் நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்...இன்னும் சில நாட்களே உள்ளன..உடனடியாக பதிவினை மேற்கொண்டு அமெரிக்கா செல்லும் வாய்ப்பினை பெற்றிடுங்கள் (18 வயதிற்கு மேற்பட்ட யாவரும் விண்ணப்பிக்கலாம்)
அண்ணா பொதிகள் சேவை
976- கே கே எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்
வெளிநாடு உள்நாடுகளுக்கான விரைவுப்பொதிகள் சேவை லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் பல நாடுகளுக்கு குறைந்த செலவிலும் விரைவாக அனுப்பிட தொடர்புகொள்ளவும்
கிளிநொச்சி-முல்லை-வவுனியா-திருகோணமலை
(கொழும்பில் வீட்டிலே வந்து எடுக்கப்படும்)
070 330 5500
077 888 9388

வீடு விற்பனைக்கு
பத்தமேனி அச்சுவேலி பிள்ளையார் கோயில் வீதியில் வீடு விற்பனைக்கு உண்டு. (6146)
தொடர்பு: 0771525940

வீடு விற்பனைக்கு
மீசாலை வடக்கு, புத்தூர் சந்தியில் மூன்று அறைகள் கொண்ட 5 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு. (6187)
தொடர்பு: 0770771377

அமெரிக்க அதிஸ்ட விசா- இன்னும் 3 நாட்களே உள்ளன!
இதுவே இறுதி வருடம் கிடைத்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்துங்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
55000 இலவச விசாக்கள்
0768226243
எந்தவித எதிர்பார்ப்புக்களும் இல்லாமல் V2 Travels ல் பதிந்தோம் இன்று அமெரிக்காவில் வாழ்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தை உருவாக்கித்தந்த V2 Travels க்கு எமது நன்றிகள்.
2017 ல் எமக்கூடாக 77 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
உடனே விரையுங்கள்





சுஜாதரன்-குடும்பம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்
இறுதி சந்தர்ப்பம் அடுத்த வருடம் இல்லை
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237
மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 189

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2049 | 28.10.2018 | தொலைபேசி : 021 222 3378







# அதிர்ந்தது அரசியல்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்றைய உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் இருந்த அத்தனை பேரிடமும் ஒரு வித சலசலப்பு ஏற்பட்டிருந்தது. இலங்கையின் அரசியலில் ஏற்பட்ட திடீர் மாற்றம் தான் அந்தச் சலனத்திற்குக் காரணம்.

சலனத்தின் மத்தியில் ஆலடியில் நிலவிய மௌனத்தைக் கலைக்கும் பொருட்டு விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** பார்த்தியளோ ஒரு கணப்பொழுதில நல்லாட்சியில ஏற்பட்ட மாற்றத்தை.

**கங்காணி:**யாரும் எதிர்பாராத வகையில மகிந்த ராஜபக்ஷ பிரதமராக்கப்பட்டுள்ளார்.

**மூப்பர்:** ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாதே தவிர மற்றும் படி ஜனாதிபதி ஆட்சியில எதுவும் செய்யலாம் என்று ஸ்ரீமான் ஜெயவர்த்தன கூறினவரல்லோ.

அவர் போட்ட வலையில அவற்ற ஐக்கிய தேசியக் கட்சிதான் முதலில விழுந்து போனது.

**வாத்தியார்:** அதுசரி சாத்திரியார். ரணில் விக்கிரமசிங்கவின்ர சாதகத்தை எங்கையாவது பார்த்தனியளோ.

**சாத்திரியார்:** ஏன் வாத்தியார் கேட்கிறியள்.

**வாத்தியார்:** இல்லை பிரதமர் பதவியில் ரணில் விக்கிரமசிங்க இருந்தாலும் அந்தப் பதவிக் காலத்தை அவர் ஒருக்காலும் முழுமைப்படுத்தவில்லை. இடையில பதவி கவிழ்ந்து போன வரலாறு தானே இருக்குது.

**சாத்திரியார்:** ரணில் விக்கிரமசிங்கவின்ர சாதகத்தில் பாவக்கிரகம் உச்சம் பெற்றிருக்குது போல.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் மக்களின்ர ஆதரவோடு ஆட்சிப் பீடமேற வேணும். அப்பதான் பதவிக்காலம் முழுவதும் அசையாமல் இருக்கலாம். இதென்னடாவெண்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோட சேர்ந்து ஆட்சி அமைக்கிறது. பிறகு மைத்திரிக்கு எதிராகச் செயற்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைக்க நினைக்கிறது எண்டால் அது நேர்மையற்ற அரசியல்தானே.



## கொடுத்தவனே பறித்துக்கொண்டான்

**மூப்பர்:**என்ன இருந்தாலும் ஓர் அரசியல்வாதியெண்டால் அவர் மக்களின் செல்வாக்கைப் பெற்றவராக இருப்பதுடன் ஒரு கவர்ச்சியையும் கொண்டிருக்க வேணும்.

**கங்காணி:** மூப்பர் என்ன சொல்லுறியள் என்று விளங்காமல் இருக்குது.

**மூப்பர்:** பொதுவில சிங்கள அரசியல்வாதிகள் வெள்ளை வேட்டி அல்லது வெள்ளைச்சாரம் அணிந்து தங்கட தேசிய உடையில வலம்வாறதைத்தான் விரும்புவினம். இது பண்டாரநாயக்க முதல் ஜனாதிபதி மைத்திரி வரை கடைப்பிடிக்கின்ற கலாசாரம். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தேசிய உடை அலேர்ஜிக் மாதிரி.

அதுமட்டுமல்ல மேடையில இருக்கிற போது ஒரு காலைத்தூக்கி தன்ர மற்றக் கால் மேல் போடுவார். இது ஒருபோதும் மக்களைக் கவராது.

**விதானையார்:** இஞ்சே மூப்பர் இதுகளை விட்டிட்டு எங்கட தமிழ்மக்களின்ர எதிர்கால அரசியல் நிலைமை எப்படி இருக்கும் என்பது பற்றிக் கதையுங்கோ.

**வாத்தியார்:** நல்லாட்சி வந்தவுடன எங்கட பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டியிருந்தால் எல்லாம் சரி வந்திருக்கும். எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கும் பதவியின்ர பாதுகாப்புக்குமாக எங்கட இனத்தின்ர எதிர்காலத்தையே கூட்டமைப்பு வித்துப் போட்டுது. ஜனாதிபதித் தேர்தலில மைத்திரிபால சிறி சேனவை தமிழ் மக்கள் ஆதரித்தவியள். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் (ஒரு சிலரைத்தவிர) ரணில் விக்கிரமசிங்கவோட நிண்டு கொண்டு ஜனாதிபதி மைத்திரியைத் தூக்கி எறிந்தவியள். இப்ப பார்த்தியளோ.

**பண்டிதர்:** அரசியலமைப்புச் சீர்திருத்தம் வரும் எண்டு கூட்டமைப்பு முழுமையான நம்பிக்கை வெளியிட்டுது. இப்ப என்ன நடந்தது.

**விதானையார்:** நீங்கள் இதைச் சொல்லுறியள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஐயாவையும் முரண்பட வைத்து தங்கட கையை ஓங்க வைத்த கூட்டமைப்பு இனி என்ன செய்யப் போகுது.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனோட நான் கதைக்க மாட்டன். சம்பந்தரோட கதைத்துத்தான் எல்லா வேலையும் செய்வன் எண்டு சொன்ன ரணில் விக்கிரமசிங்கவின்ர கதியைப் பார்த்தியளோ.

தந்தவனே பறித்துக் கொண்ட மாதிரியல்லோ எல்லாம் முடிஞ்சு போய்ச்சுது.

**சாத்திரியார்:** மூப்பர் நீங்கள் இதைச் சொல்லுறியள். கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் அமைச்சர் ஒருவர் கூறினவர் நாங்கள் சம்பந்தரோடதான் கதைப்பம். முதலமைச்சர் விக்னேஸ்வரனோட எதுவும் கதைக்க மாட்டம் எண்டு.

பார்த்தியளோ நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பர் நடந்துவிடும்.

**விதானையார்:** சரி... சரி... நான் திரும்பத் திரும்பச் சொல்லுறது எங்கட அரசியல் நிலைமை என்னவெண்டு.

**வாத்தியார்:** என்னைப் பொறுத்தவரை முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளார். அதற்காவது தமிழ்ப் புத்திஜீவிகள், தமிழ் மக்கள் என அனைவரும் ஒன்று சேர்ந்து எங்களுக்கான அரசியல் வியூகத்தை அமைக்க வேணும். அரசியல் மாற்றங்களை மிகவும் நுட்பமாகக் காய் நகர்த்திவிட்டால் தமிழினம் மீள முடியாது.

**பண்டிதர்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனி என்ன முகத்தோட தமிழ்மக்களை சந்திக்கப் போகுது. எங்கட விக்னேஸ்வரன் ஐயாதான் தமிழ்மக்களுக்கான அரசியலை வழிப்படுத்திச் செல்லவேணும். இது விடயத்தில தமிழ்ப் புத்திஜீவிகள், தமிழ்ப் பற்றாளர்கள், புலம்பெயர் தமிழ் மக்கள் என அனைவரும் ஒன்று சேர்ந்து மிகச் செம்மையான செயற்றிட்டத்தைத் தீர்மானிக்க வேணும். அப்ப தான் தமிழினம் அரசியல் மாற்றத்தைக் கையாள முடியும்.

**வாத்தியார்:** மழை இருட்டு. நேரகாலத்தோட வெளிக்கிடுவம். அதற்கு முன்னதாக நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயா ஆரம்பித்த தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சிக்கு இறைவனின் அருளாசி கிடைக்கவேண்டுவோம். தெய்வீகத் தன்மையோட, நேர்மையான வழியில் தமிழினத்தின் விடியலுக்காக, ஏழைமக்களின் வாழ்வுக்காக தூய்மையான கட்சியாக தமிழ் மக்கள் கூட்டணி இயங்கட்டும் என்று வாத்தியார் வைத்திலிங்கம் வாழ்த்த அந்நேரம் ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் தன் நாதத்தை ஒலித்து ஆசிகூற, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

# ரணிலை நம்பிய சம்பந்தரின் தலைமை எப்படியாயிற்று



இலங்கையின் அரசியலில் ஏற்பட்ட அதிரடி மாற்றம் எவரும் எதிர்பார்க்காததொன்று எனக் கூறப்பட்டாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அடிக்கடி இரகசிய சந்திப்பை நடத்தியதான செய்திகள் வெளிவந்து கொண்டேயிருந்தன.

இச்சந்திப்புகள் தொடர்பிலான தகவல்கள் வெளிவந்தபோதிலும் அவற்றை மறுப்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மகிந்த ராஜபக்ஷவும் முனைப்புக் காட்டினர்.

இப்போது நிலைமை வேறு விதமாயிற்று. 26 ஆம் திகதி ஒக்டோபர் மாதம் 2018 ஆம் ஆண்டின் இரவுப் பொழுது இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒருபெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆம், இதுகாறும் மௌனமாக, அமைதியாக இருந்து ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கையை அவதானித்துக் கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதே மௌனத்துடன் ஒருபெரும் தாக்குதலை நடத்துகின்றார்.

அந்தத் தாக்குதல்தான் பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்தி அந்தப் பதவியை மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கியதாகும்.

மிகப் பௌவ்யமாக இருந்து காரியம் பார்ப்பதில் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஜனாதிபதி மைத்திரிக்கு ஈடு இணை யாரும் இல்லை எனலாம்.

ஏலவே ஜனாதிபதித் தேர்தலின் போது என்னுடன் எதிர்த்துப் போட்டியிடப் போகின்ற அந்த வீரன் யார் என்று மகிந்த ராஜபக்ஷ கர்ச்சிக்கின்றார்.

இதன்போது மகிந்த ராஜபக்ஷவின் அருகில் மிகப் பௌவ்யமாக நின்



றவர்தான் மைத்திரி பால சிறிசேன.

அதுமட்டுமல்ல ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி தோற்று மகிந்த வெற்றி பெற்றிருந்தால் தன் நிலைமை என்னவாகும் என்பது தெரிந்தும் எந்தத் தயக்கமும் இன்றி ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டார் எனில் அவரின் தீர்மானம் மாற்ற முடியாததென்பது புலனாகும்.

இப்போதுகூட மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கியுள்ளார் என்றால், அதன் பின்னணியில் அவர் எதிர்கொள்ளக் கூடிய வெளிநாட்டு அழுத்தங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி அக்கறை கொள்ளவில்லை என்பது புரியக்கூடியதே.

எது எவ்வாறாயினும் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கடுமையாக விமர்சித்தனர்.

ஒருமுறை அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதி மைத்திரி கடும் கோபமுற்றபடி அங்கிருந்து வெளியேறினார். அந்த வெளியேற்றத்தின் போது தோற்றவன் நான் என்று நினைத்துவிடாதீர்கள் எனக் கூறியிருந்தார்.

இச்சந்தர்ப்பத்தின் பின்னர் ஜனாதிபதியை விமர்சிக்கக்கூடாது எனக் கடுமையான உத்தரவைப் பிரதமர் ரணில் பிறப்பித்திருந்தார்.

என்னதான் இருந்தாலும் அண்மையில் இந்திய உளவுத்துறை ஜனாதிபதி மைத்திரியைக் கொல்லச் சதி என்ற தகவல் வேகமாகப் பரவிய போதுதான் இலங்கையின் அரசியலில் அதிரடியான மாற்றமொன்று நடக்கப் போகிறது என அரசியல் அவதானிகள் ஊகித்துக் கொண்டனர்.

எனினும் அந்த ஊகம் மகிந்த ராஜபக்ஷ பிரதமராவார் என்பதாக இருக்கவில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

எனினும் ஜனாதிபதி மைத்திரி தலைமையிலும் பாகாப்பு மட்டத்திலும் அந்த விடயம் பேசபடு பொருளாகிற்று.

இதன் காரணமாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை ஜனாதிபதி மைத்திரி தரப்பு விலக்கிக் கொண்டபோது, அதிரடியாகவே பிரதமர் பதவியில் இருந்து ரணில்



விக்கிரமசிங்க தூக்கப்பட்டார்.

ஜனாதிபதிக்கு இருக்கின்ற விசேட அதிகாரத்தின் கீழ் இந்தக் காரியம் நடப்பதாக மட்டும் ஒரு மின்னஞ்சல் செய்தியை ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பிய அதேகணம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்கின்றார்.

பிரதமராகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ தனது பெரும்பான்மை பலத்தை பாராளுமன்றத்தில் நிரூபிக்க வேண்டும் என்பதற்கு அப்பால், அதனைச் செய்வது மகிந்தவுக்குக் கடினமாக இருக்குமென்று எழுந்தமானமாகக் கூறி விடவும் முடியாது.

ஆக, மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நீடிக்கக்கூடிய வாய்ப்புள்ளது என்பது மட்டும் உண்மை.

இதில் அரசியல் நுட்பம் என்னவென்றால், ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ ஒரு பாராளுமன்ற உறுப்பினராகத் தன்னைக் குறைத்துக்கொண்டு பாராளுமன்றத்தில் அங்கம் பெறுவதுதான்.

இந்த நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்த மகிந்த ஒரு சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றாரே என்ற விமர்சனங்களையும் பொருட்படுத்தாமல் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக நுழைவதன் மூலம் தனக்கு ஒரு சாதகமான சூழ்நிலை ஏற்படும் என்ற நம்பிக்கையோடு மகிந்த ராஜபக்ஷ இருந்தமை இங்கு கவனிக்கத்தக்கது.

தவிர, உண்மையில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கவேண்டிய மகிந்த அதனை அலட்டிக் கொள்ளாமல் இரா.சம்பந்தரிடம் அந்தப் பதவி இருப்பதே தமக்குப் பாதுகாப்பு எனக் கருதினார். அந்த மிக உச்சமான இராஜதந்திரம் இன்று பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது.

இந்த மாற்றம் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பாதகம் என்பதைவிட, ரணில் விக்கிரமசிங்கவை மலையாக நம்பி அவரின் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் போல் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் கூட்டமைப்பை நம்பியிருந்த தமிழ் மக்களுக்குமே நிலைமை வீழ்ச்சியாயிற்று.

என்ன செய்வது, தமிழ் அரசியல்கைதிகளை விடுதலை செய்யாவிட்டால் என் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தூக்கியெறிவேன் என்று கூறுகின்ற வக்கில்லாதவரின் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி பறிபோகப் போவது தான் கண்டமிச்சம்.

**திருநீலகண்டன்**

நடிகர் விஷாலுக்கு சினிமா பயணத்தில் மறக்கவே முடியாத ஒரு படம் சண்டக்கோழி. படு வெற்றிபெற்ற இப்படத்தை அதே கூட்டணியில் லிங்கு


# சண்டக்கோழி 2

## திரை விமர்சனம்



சாமி இரண்டாம் பாகத்தை இயக்கியுள்ளார். வெளியாகியுள்ள இந்த 2ஆம் சண்டக்கோழி எப்படி இருக்கிறது என்பதை பார்ப்போம்.

படத்தின் ஆரம்பத்திலேயே பிரமாண்டமாக ஊர் திருவிழா நடக்கின்றது. இதில் சாப்பாடு பரிமாறுவதில் பிரச்சினை நடந்து வரலட்சுமியின் கணவர் ஒருவரை வெட்டி சாய்க்கின்றார்.



அந்த இரத்த ஈரம் காய்வதற்குள் வரலட்சுமி கணவரையும் வெட்டுகின்றனர். அப்போதே வரலட்சுமி தன் கணவரை கொன்றவர்கள் குடும்பத்தில் இருப்பவர் அனைவரையும் வெட்டிச் சாய்க்க ஒருவர் மட்டும் மீதம் இருக்கின்றார்.

பிறகு 7 வருடங்களுக்கு பிறகு திருவிழா மீண்டும் நடக்க, அந்த மீதம் ஒருவரை வரலட்சுமி கொல்ல காத்திருக்க, இதை விஷால் எப்படி முறியடித்தார் என்பதே மீதிக் கதை.

விஷால் அக்ஷன் படத்திற்கு அளவெடுத்து செஞ்சது போல் உள்ளார். ஆறடிக்கு நின்று 50 பேரை அடித்தால் கூட நம்பலாம் போல, இவர் ஒரு பக்கம் என்றால் ராஜ்கிரண் மறுபக்கம், அவரின் பேவரெட்டான எலும்பு கடியில் ஆரம்பித்து ஏரிலேயே நிற்க வைத்து அடியாட்கள் எலும்பை உடைப்பதும் சரி செம்ம மாஸ்.

கீர்த்தி சுரேஷ் அப்படியே மீரா ஜாஸ்மின் ஜெராக்ஸ் தான், கலகலப்பான பெண் கதாபாத்திரத்தில் கலக்குகின்றார். ஆனால் ஜயாவின் மகன் விஷால் என்று தெரியாமல் ட்ரைவர் நினைத்துக் கொண்டு அவர் சீண்டுவது எல்லாம் பல படத்தில் பார்த்த காட்சி போல் உள்ளது.

வரலட்சுமி வரும் காட்சிகள் எல்லாம் செம்ம சவுண்ட் விடுகின்றார், கதாபாத்திரத்தில் கச்சிதமாக பொருந்தினாலும் திமிரு படத்தில் பார்த்தது போலவே தான் உள்ளது.

ஆனால், லிங்குசாமி தேவர் மகன் படத்தின் மூலம் செம்ம இன்ஸ்பிரேஷன் ஆகியிருப்பது தெரிகின்றது, பல காட்சி அமைப்புகள், பில்டப் காட்சிகள் விஷால் எண்ட் ரீ கூட அப்படியே உள்ளது. பார்த்து பழகிப் போன மாஸ் காட்சிகள். அதிலும் பேருக்கு தான் சண்டக்கோழி இரண்டாம் பாகம், மற்றபடி அதற்கும் இதற்குமான கனெக்ஷன் காட்சிகள் பெரிதாக ஏதும் இல்லை. வேறு டைட்டில் வைத்து ரிலீஸ் செய்திருந்தாலும் பெரிதும் பாதித்திருக்காது.

இரண்டாம் பாதியில் ராஜ்கிரண் இல்லாமல் விஷால் திருவிழா நடத்தும் காட்சி எல்லாம் ரசிக்க வைத்தாலும் அநியாயத்திற்கு லொஜிக் மீறல். அதிலும் இரண்டாம் பாதியில் லாலின் எண்ட்ரீ ஏதோ மிகப்பெரிய திருப்பம் என்றால் அதையும் காமெடியாக்கியது. சண்டக்கோழி முதல் பாக ரசிகர்களுக்கு வருத்தம் தான்.

படத்தின் மாஸ் காட்சிகளை எல்லாம் இன்னும் பல மடங்கு மாஸ் ஏற்றுவது யுவனின் பின்னணி இசை. ஆனால் கம்பத்து பெண் தவிர மற்ற அனைத்து பாடல்களிலும் யுவன் பெயில்ஸ் தான். ஒளிப்பதிவு கலர்புல் தான்.

திருவிழா திரையில் மட்டுமல்லாமல் ஏதோ மக்களே கொண்டாடுவது போல் பல நடிகர், நடிகைகள் வைத்து எடுத்த விதம்.

படத்தின் ஸ்டண்ட் காட்சிகள், மாஸ் பட ரசிகர்களுக்கு செம்ம ட்ரீட்.

யுவனின் பின்னணி இசை, அதிலும் குறிப்பாக வரலட்சுமிக்கு வரும் பிஜிஎம்.

விஷால் ராஜ்கிரண் அப்பா மகன் எமோஷ்னல் காட்சிகள்.

முதல் பாகத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ஏதோ விளம்பரத்திற்காக வைத்த டைட்டில் போல் உள்ளது.

லொஜிக் மீறல்கள் கொஞ்சம் கவனித்திருக்கலாம்.

மொத்தத்தில் மாஸ் மசாலா ரசிகர்களுக்கு ட்ரீட் தான், இருந்தாலும் முதல் பாக விறுவிறுப்பு எங்கே என கேட்க வைக்கின்றது. எது எப்படியோ லிங்குசாமி இஸ் பாக்.






தமிழ் சினிமாவில் எப்போதும் ஒரு சில நடிகர்களுக்காகவே படம் பார்க்கும் ரசிகர்கள் கூட்டம் இருக்கிறது. அதில் நடிகர் ஜெய்யும் ஒருவர். இவரின் படங்கள் என்றாலே நல்ல காதல் கதை இருக்கும் என்ற நம்பிக்கையுண்டு. ஜருகண்டி படத்தில் அவர் அதை நிறைவு செய்கிறாரா என பார்க்கலாம்.

ஜெய் ஒரு லோயர் மிடில் கிளாஸ் ஃபேமிலியை சேர்ந்தவர். அவருக்கு அம்மா, தங்கை என சின்ன குடும்பம். அவரின் உற்ற நண்பராக பிக்போஸ் பானியல். சொந்தமாக தொழில் தொடங்குவதற்கான முயற்சியில் இறங்குகிறார்கள். ஆனால் எதிர்பாராத சிக்கல் வந்து முழிக்கும் நேரத்தில் ஹீரோயினை ஜெய் சந்திக்க அவருக்கும் ஒரு பிரச்சினை. அதன் பின்னால் பெரிய ஒரு சதி நடக்கிறது.

ஜெய் தனக்கான சிக்கலில் இருந்த மீண்டாரா இல்லை ஹீரோயினை பிரச்சினையில் இருந்து காப்பாற்றினாரா? சதிகாரர்கள் யார் என்ன ஆனார்கள் என்பதே கதை.

ஹீரோ ஜெய்க்கு எப்போதும் லவ் ஷ்ட்டோரி நன்றாக ஒர்க்கவுட் ஆகும். ரசிகர்களிடத்தில் நல்ல வரவேற்பும் இருக்கிறது. ஆனால் இப்படத்தில் அவருக்கு பெரிதளவில் லவ் ஃபிளாஸ் பாக் எல்லாம் இல்லை. சொல்லப்போனால் அவருக்கான கதையா இது என கேள்வி எழுகிறது.

படத்தில் ஹீரோயின் மலையாளத்தில் 2 படத்தில் நடித்து தற்போது தமிழில் அறிமுகமாகியிருக்கிறார். படத்தில் அவர் சிம்பிளாக இருந்தாலும் அவரின் பின்னணியில் பிரச்சினை மிகவும் சீரியஸான ஒன்று.

பிக்போஸ் டானி இதில் ஜெய்யுடன் கதை முழுக்க பயணம் செய்கிறார். அவருக்கென வழக்கம் போல இருக்கும் லோக்கல் ஸ்லாங் ஓகே. ஆனால் இங்கே அவரின் பெர்ஃபார்மன்ஸ் குறைகிற மாதிரியான ஒரு ஃபீல்.

ரோபோ சங்கர் தான் காமெடியின் முக்கிய புள்ளி. அவர் அவருடைய ஸ்டைலில் இங்கே விளையாடுகிறார். படத்தின் சுவாரசியம் குறையும் நேரத்தில் ரோபோவின் காமெடி தான் கொஞ்சம் இண்ட்ரஸ்டிங்.

இதுபோக படத்தில் பிரபல நடிகர் போஸ் வெங்கட்க்கு பொலிஸ் ரோல். கிரிமினல் பொலிஸ் போல இருக்கும் அவரையே ஒரு கட்டத்தில் வேற மாதிரி மாற்றி விடுகிறார்கள்.

இயக்குநர் பிச்சுமணியின் கதையில் இரண்டாம் பாதியின் சில நிமிடங்களே பார்ப்போரை ஈர்க்கும் என தோன்றுகிறது. ஆனால் பெண்கள் கடத்தல் பற்றி சமூக நலம் சார்ந்த விடயத்தை எடுத்து வைத்துள்ளார். இன்னும் கதையை ஷார்ப் ஆக்கியிருக்கலாம்.

படத்தில் பின்னணி இசை ஓகே. பாடல்கள் ஓரிரு பாடல்கள் தான். ஆனால் மனதில் நிற்குமா என்றால் கொஞ்சம் டவுட்.


காமெடி ரோல் ரோபோ சங்கர் கடைசி வரை சிரிக்க வைக்கிறார். இசையமைப்பாளரின் பின்னணி இசை அக்ஷன் ரகம்.

ஜெய் இன்னும் நல்ல கதைகளை தேர்ந்தெடுக்கலாம். கதைக்குள் கதை என ஒரே வலை பின்னல். மொத்தத்தில் ஜருகண்டி சிம்பிள் ஸ்டோரி வண்டி.









ஆளப்போறான் தமிழன் உலகம் எல்லாமே என்பது உண்மையா?

உயிருக்கு இல்லாத மதிப்பு பணத்திற்கு ஏன் இருக்கிறது?

விக்னேஸ்வரன் ஐயாவின் புதியகட்சி செயற்பாடுகள் எப்படி இருக்கும்?

**தரன் — யாழ்ப்பாணம்**

**புரிந்து கொள்ளாதவர்களிடம் எங்களைப் புரிய வைக்க முயற்சிப்பது சரியா?**

அதைப்போல ஒரு மடமைத்தனம் வேறெதுவும் இல்லை. புரிந்து கொள்ளாதவரிடம் எம்மைப் புரிய வைப்பதற்கு முயற்சிப்பது வடிவேலு அவர்களின் தலையை கம்பியில் அடிப்பதாக நினைத்துக்கொண்டு தன் தலையை முட்டி யதைப்போல. இரத்தம் நமக்குத்தான் வரும்.

**நிலா — சுழிபுரம்**

**இல்லறம் என்றால் என்ன? நல்லறம் என்றால் என்ன?**

இல்லறம் நல்லாட்சிக்கு ஆதரவு கொடுத்ததும் நல்லாட்சி இல்லறத்துக்கு வாழைப்பழத்தை உரித்து வாய்க்குள் வைத்ததும்.

**ராஜ் — ஆனைக்கோட்டை**

**விக்னேஸ்வரன் ஐயாவின் புதியகட்சி செயற்பாடுகள் எப்படி இருக்கும்?**

தமிழர்களுக்காக தமிழரின் உரிமையைப் பெற்று அவர்கள் பெற வேண்டிய அத்தனையும் பெற்று இந்த நாட்டில் நிம்மதியாக வாழ விலைபோகாமல் உண்மையாய் உழைக்கும் என்பது திண்ணம்.

**சிவநேசன் — யாழ்ப்பாணம்**

**வாழ்க்கையில் ஒரே தோல்வியா இருக்கே என்ன பண்ண?**

மயிர் கொட்டியின் தோல்விதான் வண்ணத்துப் பூச்சிகள் என்றால் உங்களை நம்ப முடியுமா? தோல்வி என்பது ஒருவருக்காக எழுதப்பட்டதல்ல. இன்னொருத்தருடைய தோல்வி எமக்கு வெற்றியைத் தருகிறது எனின் இன்னொருவருடைய வெற்றிக்காக நாம் தோல்வியடைவது தவறில்லையே.

**மதுசூதனன் — வல்லிபுரம்**

**ஆளப்போறான் தமிழன் உலகம் எல்லாமே என்பது உண்மையா?**

யோ...! மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவி ஏற்றிட்டாப்பா. நான் விளையாட்டாச் சொன்னதை எல்லாம் சீரியசா எடுத்திட்டு ஐயோ ஐயோ.

**ஜக்சன் — அரசடி**

**இலங்கை சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்கு அடிமை. இலங்கை உலகத்துக்கு அடிமை. உலகமே விஞ்ஞானத்துக்கும் கடவுளுக்கும் அடிமை.**

ஆடி அடங்கி ஆறடியில் முடங்கும் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாத மனிதன் தன்னையே அழிக்கும் அணுகுண்டைத் தயார் செய்து கொண்டிருக்கிறான். இதுதான் வேடிக்கையின் உச்சம்.

**அபிலாஸ் — இருபாலை**

**காதல் என்றால் என்ன வியாசரே?**

வலி, வேதனை, அவமானம், ஏமாற்றம் இப்படி இவை அனைத்தும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய பக்கேஜ்.

**மேனன் — முரசுமோட்டை**

**தமிழ் தலைவர்கள் ஒற்றுமைப்படாத முட்டாள்தனத்தை என்னவென்று சொல்ல?**

ராஜதந்திரம் ராஜதந்திரம் என்று பஞ்சதந்திரச் சிரிப்புக்கதை ஆகிவிட்டது எம் தமிழ்த் தலைமையின் நிலை.

சகல அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதியுடன் நிற்காமல் பிரதமருடன் நின்று செஞ்சோற்றுக்கடன் தீர்த்தவர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவோ? அதுசரி பொங்கல் வருகிறது தானே அதற்குள் தீர்வென்று அறிவிப்பு விடுவார்கள்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை**
**வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532,**
**076 636 3378 என்ற**
**Viber இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**திகா — கோண்டாவில்**

**மகிந்த பிரதமராகிட்டாரே?**

உங்களுக்கு இருந்த அதே ஆச்சரியம் எனக்கும் இருந்தது. என்ன செய்ய சகல அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியால் எதுவும் செய்து விட முடியும் என்பதற்கு இது நல்ல உதாரணம்.

ரணில் ரணில் என்று அவரின் பின் நின்று துதிபாடிய எம் தமிழ் தலைமை இனி என்ன செய்யப் போகிறதோ. சிவ சிவா உனக்குத்தான் வெளிச்சம்.

**சதீஸ் — இணுவில்**

**வியாசரே என்னை ஒரு பெண் ஏமாற்றி விட்டாள் என்ன செய்ய?**

வீதியில் செல்லும் போது கால் ஒரு அசிங்கத்தை மிதித்துவிட்டது. ஐயோ அசிங்கத்தில் மிதித்து விட்டேன் என்று அதை காட்டிக் கொண்டு திரிவீர்களா?

துடைத்தெறிந்து விட்டுச் செல்லமாட்டீர்களா. அது போல் தான் இதுவும். சில விடயங்கள் நல்லதே.

**கலை — மிருசுவில்**

**நம் பலம் எது, பலவீனம் எது என்பதை எப்படி அறிய முடியும்?**

ஒரு ஊரில் ஒரு ஆலமரம் இருந்ததாம். அந்த ஆலமரத்தில் ஒரு காகம் கூடுகட்டி வாழ்ந்து வந்ததாம். ஆலமரத்தின் அடிப்பகுதியில் ஒரு பாம்பு புற்றில் விசப் பாம்பு ஒன்று இருந்ததாம்.

ஒவ்வொரு முறையும் காகம் கூட்டில் முட்டையிடும் போதெல்லாம் முட்டையைப் பாம்பு குடித்துக் கொண்டே இருந்தது.

பாம்பிடம் எதிர்த்து நிற்க முடியாத காகம் ஒருநாள் அந்த நாட்டின் அரசியின் வைர மாலையைத் தூக்கிக் கொண்டுவந்து பாம்பு புற்றுக்குள் போட்டது.

காகத்தைத் துரத்தி வந்த சேவகர்கள் பாம்பு புற்றை உடைக்கும் போது வெளிவந்த பாம்பை அடித்தார்கள். மாலையை எடுத்தார்கள். இப்போது புரிகிறதா பலம், பலவீனம் என்பது.

**மயூரதன் — இணுவில்**

**நல்லவர்களுக்கு காலம் இல்லை என்பதன் பொருள்?**

நாம் ஒருவர் மீது அதீத அன்பு வைத்து உண்மையாயப் பழகுவோம். ஆனால் அவர்கள் நம்மிடம் போலி வேடம் போட்டு எம்மைத் தம் அடிமையாக்கி குருவிச்சையாய் ஒட்டி இருந்து உறிஞ்சிவிட்டு உதாசீனம் செய்வர்.

இதயங்களைக் காயப்படுத்திப் பார்க்க எப்படித்தான் இந்த ஜென்மங்களுக்கு மனது வருகிறதோ.

தமது தேவைகளுக்காக அன்பை ஆயுதமாக பயன்படுத்தும் ஜந்துக்கள் இப்போதும் இந்தப் பூமியில் செழிப்பாய் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

**கௌசிதாஸ் — குப்பிளான்**

**தாயின் அன்பா, தந்தையின் அன்பா பெறுமதியானது?**

கண்களில் வலக்கண், இடக்கன் என்கின்ற வித்தியாசத்தைப்பார்க்க முடியுமா?

அப்படிப் பார்த்து விட்டாலும் வலக்கண்ணால் ஒன்றையும் இடக்கண்ணால் இன்னொன்றையும் பார்க்க முடியுமா?

தாய், தந்தை அன் பென்பதும் அப்படித்தான் ஒன்றை ஒன்று பிரித்துப் பார்த்துவிட முடியாதது.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**



## யார் காரணம்

பெண்ணே நீ
பெண்ணாகப் பிறந்தது
பாவம் அல்ல
யுத்தம் நிறைந்த பூமியிலே
பிறந்ததும் பாவம் இல்லை
வசதிகளும் வாய்ப்புகளும்
குறைந்த குடும்பத்தில்
பிறந்ததும் பாவம் அல்ல
சீதனம்தான் மூலதனம் என்று
நினைத்து வாழும்
எம் தாயக பூமியில்
பிறந்ததுதான் பாவம்

இடைக்காடு க.செல்வமலர்

## நேசம் கொண்ட நெஞ்சமது



உன் வரவை தினம் பார்த்து
என் கண்கள் பூத்திருக்கு
உன் நினைவை சுமந்து
என் இதயம் வலிக்கிறது
ஆண்டுகள் பத்து ஆனதையா
அன்று முதல் இன்று வரை
உன் வரவில் உண்மையில்லை
பாசம் வைத்த நெஞ்சமது
பரிதவித்து துடிக்குதையா!
துப்பாக்கி தூக்கியவனோ
துணிந்து நடமாடுகின்றான்
துணை போன உங்களுக்கோ
சந்தேகத்தின் பேரில் தடுப்புக்காவல்
நேசம் கொண்ட என் நெஞ்சம்
நெருஞ்சி முள்ளாய் குத்துதையா
மழை ஓய்ந்த பின்னும் தூவானமா?
போர் ஓய்ந்த பின்பும் ஏனிந்த அவலம்
கண்ணீரோடு தூங்கும் வேளை
கனவினிலே உன் வரவு கனமான என்னிதயத்தை
காற்றாக மாற்றுதையா
என் கனவு பலித்திட வேண்டும்
உன் வரவு மெய்ப்பட வேண்டும்

திருமதி மு.சிவசிறி
கட்டுடை, மானிப்பாய்

## என்னவனே

என் மனம் ஏனோ
உன்னை எண்ணித் துடிக்கின்றது
கண்கள் இரண்டும் இப்போ
உன்னைக் காணத்துடிக்கின்றது
முடியாது என்று சொல்லி
முட்டுகின்ற மனசுக்குள்ளே
கிடையாது என்று சொல்லி
கற்பனைகள் அலைகின்றது
கரம்பிடிக்க நினைக்கையில்
கையிரண்டும் வலிக்கின்றது
மாலையிட நினைக்கையில்
மார்புக்குள் உதைக்கின்றது
பாதி உயிர் போய்விட்டது
மீதி உயிர் வாழவேண்டும்
மாலைநேரப் பொழுதிலாவது
கண்களுக்கு காட்சி கொடு
காலமெல்லாம் காதலோடு காத்திருக்க...

ஜீவராஜா, மல்லாகம்

கவிதைக்கலசம்



## அன்புச் சுமை

அவன் தோளில் சாய்கிறாய்
புன்னகையுடன்- முதுமையில்
அவனைக் காப்பாய் மகிழ்ச்சியாக
உன்னை மட்டுமல்ல- உன்
உடமையையும் சுமக்கிறான்
சுமக்க வேண்டாம் அவனை நீ
இன்சொல்பேசி ஆதரிப்பாயா
அன்னை வயிற்றினில்
சுமந்தாள்- பத்து மாதங்கள்
தந்தை மனதினில் சுமக்கிறான்
வாழும் காலம் வரை
நீ இதை உன்வாழ்வு வரமாகும்
மறந்தாலோ சாபம்தான்
சாபமோ வரமோ உன்கையில்
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

நந்தன் கேதனா

## கறிவேப்பிலை நாமல்ல.

அந்தரத்தில் தமிழினம்
ஆண்டியாய் நின்றிடக்
காரணம் யார் கண்டதுண்டா?

தந்திரத்தின் நாயகனாம்
நரித்தந்திரத்தால்
தமிழினத்தின் தலைகளில்
உள்ளி மிளகரைத்துப்
பூசிவிட்டவர் யார்?

கொள்ளிவாற் பேய்களாய்
கொளுத்திவிட்டவர்கள்
நல்லி எலும்பு கடிக்க
கொழும்பு சென்று வருவர்

சலிகளை அள்ளித்
தமிழர்க்குத் தெளித்துவிட்டு
முல்லைகளாம் தமிழர்
தேர்விட்டவர் தாமென்று
தம்பட்டம் அடிக்கிறார்

தும்புத் தடியெனினும்
துடப்பங்கட்டையெனினும்
கேட்டவர் வென்றிடுவார்
என்ற கேவலம்
இங்குவிட வேறெங்குண்டு

சுண்டு விரல் நீட்டி- நீங்கள்
அத்தனை பேருமே
உத்தமர் தானா என்று
உரத்துக் கேட்டிட
ஒரு தலைமை வேண்டி
பட்டியாய் அடைந்தான் தமிழன்
பகடைக்காய்களாய்
பாவித்தார் எம் தலைமைகள்

கஞ்சியில் பயராய்
போகுது தமிழினம்
கறிவேப்பிலையாகவே
வீழுது உயிர் இனம்
மண்டியிடுவதை நிறுத்து
மார்தட்டி எழு
கறிவேப்பிலைகள் நாமில்லையென

மாவை. நா. கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 419



### நல்வழி தேடி

அம்மாவும் பிள்ளையும்
அகமகிழ்ந்து
துவிச்சக்கரவண்டியை
தூக்கியிங்கே
எங்கே புறப்பட்டீர்
நாளை உலகில் நல்வழிதேடி
நலமாய் வாழ வீர
நடையோடு புறப்பட்டீரோ
பிள்ளையின் ஆசையை
பிரியமுடனிங்கே
புன்முறுவல் கொண்டு
பூர்த்திசெய்வார் யார் தந்தையேயிங்கு
சர்வமுமென்றால்- அது
மிகையாகாது மீளா அன்புடையது

சி.திவ்வியா
யா/ ப.மெ.ம.வி

### பாசப்பிணைப்பு

அன்னையவள்
சுமந்தாள் பத்துமாதம்
தந்தையோ
வாழ்நாளெல்லாம் சுமக்கலானான்
கால் ஊனமுற்ற அன்புப் புத்திரனை
அரவணைத்து ஏந்தியது ஓர்கரம்
மறுகரத்தில் வண்டியைச் சுமந்தபோதும்
அவன் வதனத்தில் பாசம் தெறிக்கும்
புன்னகை தெறிக்கின்றதே!
அப்பனும் மகனுமாக உணர்த்தி நிற்பது
பாசப்பிணைப்பு மட்டுமல்ல
எதிர்காலத்தில் ஒளிமயமான வெளிச்சமே

அபி குலமாலிகா
சங்கானை

### காற்று வெளியிடை

காற்று உள்ளதை இடுப்பிலும்
காற்றுப் போனதை தோளிலும்
களங்கமில்லா இரு நெஞ்சங்கள்
காற்று வெளியிடை கவலையின்றி
இன்முகத்துடன் செல்வதைப் பாரீர்!

துரை ஜெகநாதன்
கெருடாவில்
தொண்டைமானாறு

### செல்லப் பிள்ளைக்கு

தம்பிக்கு நல்ல சைக்கிள்
கால் நடையும் மறந்தான்
கெந்தி கெந்தி ஓடுகிறான்
அப்பா வாங்கித் தந்த சைக்கிள்
யுத்த காலத்தில் என்னையும் தூக்கி
சைக்கிளையும் கொண்டு ஓடியவர்

பா. கலாதேவி
சண்டிலிப்பாய் மேற்கு

### பாலபாடம்

பிறந்த நாள் முதல்
சிறப்பாய் வாழ்ந்தவர்களை
கண்டு கொள்வதென்பது
என்றும் கடினமாயினும்
சிறுவர்களின் சிறு சிறு
ஆசைகளை நிறைவேற்ற
சிக்கனமும் சேமிப்பும்
தக்க தருணத்தில் முன்வந்து
கைகொடுக்குமென்பதற்கு
துவிச்சக்கரமே சாட்சி
இதன்மூலம் சுமைகளும்
இடம்மாறுவது பாலபாடம்

க.நாகராசா, நுணாவில்

### அப்பாவுக்காக

வருடங்கள் பன்னிரெண்டும்
மறவாத உம் சிரிப்பும்
தொலைதூரம் சென்றதால்
தொலைந்து போகுமோ உம்நினைவு
உதவும் கரங்களும்- அன்பான
உம் பேச்சும் மறைந்து போகுமோ!
வாகனத்தில் எம்மை ஏற்றி
ஆரவாரமாய் சுற்றி வருவாய்
தோள் மேல் ஏற்றி என்னை
உயரமாக்கி நீ நடப்பாய்
ஆறாத நினைவு அப்பா
உம்முடன் இருந்த ஐந்து வருடமும்
நீர் இல்லாத குறையை
அம்மா காட்டியதில்லை
ஒவ்வொரு பயணத்திலும்
கூடவே வழிகாட்டுகிறார்
அன்பான அண்ணாவும் அக்காவும்
அரவணைப்பான அம்மாவும் நானும்
என்றும் உம் நினைவுகளோடு!

நிருஷினி ஆனந்தராஜன்

# இவ்வார மௌனத்தின் தேடல் -420



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை

ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி-சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

### கனம் சுகம் காணும்

மக்கட் செல்வம்
மாண்புறு சொத்து
எக்காலமும் மனசு
இன்பத்தில் மிதக்கும்
பிள்ளையின் தேவையை
பெற்றோர் தீர்த்தல்
வள்ளலின் வாண்மை
வாழ்வியல் வழித்தடம்
சைக்கிளும் வாங்கி
பிள்ளையும் சேரவே
கைகளில் தாங்கும்
கனம் சுகம் காணும்

வை.க.தவமணிதாசன்,
கொக்குவில்

### அப்பா

வாழ்க்கையின் முன்னால்
தந்தையின் வழிகாட்டலும்
வழியின் பின்னால்
தாயின் அக்கறையும்
இருக்குமெனில்- நீ
வாழ்வை வெற்றி கொள்வாய்

ராகுலன், நாவற்குழி

### வழிகாட்டி

தடைகளை உடைத்து
வாழ்வில் மீண்டு வரணும்
ஏழைகள் வாழ்வை
இல்லாதொழிக்கணும்
கருணையில் உயிர்களை
காத்து நிற்கணும்
தந்தையின் மகனாய்
வாழ்வில் உயரணும்

சி.தர்சிகன், கொக்குவில்

### ஆண்மையில் தாய்மை கொண்டவன்

சிறுவயது நடைபழகலில்
தடுமாறிய என் கால்கள்- அன்று
பயம் கொள்ளவில்லை
பற்றிப் பிடித்திருந்தது
என் தகப்பன் கரமல்லவா
தடக்கி வீழ்ந்தயான்
வீறிட்டு அழுகையில்
தரையினை கடிந்து தண்டித்தவன்
அல்லவோ தந்தையவன்...
நடக்கப் பழகையில் பற்றிப்பிடித்த
அவன் கரங்கள்
இன்று நடக்கையில் பாரமானது போல்
வருடங்கள் தோள் சுமந்த அவன்
இறுதி ஊர்வலத்தில்
அவன் உடலும் கனமாக இருக்கிறது
இயந்திர மனிதனுக்கு...

சி.வேணுஜா, கோப்பாய் வடக்கு

(சிறுகதை)

# மாறாத வடுக்கள்



உரும்பிராய். அது ஒரு அழகிய கிராமம். செம்பாட்டு மண். விவசாயம் செய்யும் மக்களே அங்கு அதிகம். விவசாயம் மட்டுமல்ல வீரம் விளைந்த மண்ணும்கூட. பராய் மரங்கள் சில நின்றதன் காரணத்தினால் உரும்பிராய் என்ற பெயர் வந்தது ஓர் ஐதீகம்.

1987 ஐப்பசி 20 ஆம் திகதி உரும்பிராய் மண்ணில் பொழுது இன்னும் புலரவில்லை. சூரிய கிரகணங்கள் தயக்கத்துடன் மண்ணை முத்தமிட்டன. கோழிகள் விடியலை வரவேற்கக் கூவவில்லை. குயில்கள் இன்னிசை இராகம் பாடவில்லை. ஆனால் அண்டங்காகம் ஒன்று ஒற்றைப் பனையில் இருந்து அவலக்குரல் எழுப்பியது.

"தம்பி... அந்தச் சனிக்காகத்தைக் கலை. விடியல்காலமையே கத்தத் தொடங்கிற்று. எங்க இழவு விழப்போதோ தெரியலை" என்றாள் தாய்.

மகன் கல்லெடுத்து எறிவதற்கு குனிந்தான். அச்சமயம் ஷெல் ஒன்று விழுந்தது. ஊரே அதிர்ந்தது. ஒரே ஓட்டமாக உள்ளே வந்து தரையில் படுத்தான் மூத்த மகன். அவனது இளைய தம்பி, தங்கைகளும் அவனைப்பார்த்து தரையில் படுத்தனர். சிறிது நேரம் மயான அமைதி நிலவியது. கத்திய காகத்தையும் காணவில்லை. பின்னர் தொடர்ச்சியாக ஷெல்கள் வீழ்ந்து வெடித் தன. வீட்டில் இருந்த பிள்ளைகள் எல்லோரும் கத்தத் தொடங்கினார் கள்.

"அழாதையுங்கோ பிள்ளையள், இந்தியன் ஆமி இறப்பர் ஷெல்தான் அடிப்பான். பயப்பிடாதையுங்கோ" என்று காய்ச்சலுடன் படுத்திருந்த அப்பா குரல் கொடுத்தார்.

தந்தையின் குரலில் தெரிந்த நம்பிக்கையில் தாய் எழுந்து சென்று தேநீர் சூடாகப் போட்டுக்கொண்டு வந்து அமர்ந்தாள்.

ஒரு குவளையில் கணவனுக்கு ஊற்றி "இஞ்சி போட்டிருக்கன் சூடாகக் குடியுங்கோ" என்றாள் அக்க றையுடன்.

மெல்ல எழுந்து சுவரோடு அமர்ந்தார் கந்த சாமி.

" மலர் பிள்ளைகளுக்கு ஏதாச்சும் சாப்பாடு செய்து கொடு" என்றார்.

" இங்க என்ன இருக்கு? இருந்த மாவும் தீர்ந்து போச்சு. கொஞ்சக் குத்தரிசி மட்டும்தான் இருக்கு" என்றாள் மலர் பெருமூச்சுடன்.

விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் இடையில் இருந்த முறுகல் நிலை யுத்தமாக வெடித்த நேரம். இந்திய இராணுவத்தின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி முகாம்களுக்குள் முடங்கச் செய்ய புலிகள் யுத்தத்தில் குதித்த நேரம்.

சொற்ப நேரத்தில் புலிகளை ஒழித்துக் கட்டுவோம் எனக் கங்கணம் கட்டிக் கொண்டு யுத்தத்தில் இறங்கிய இந்திய அமைதிப்படை பல அழிவுகளை எதிர்கொண்டன. இதனால் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற முடியாது தவித்தனர். உணவுப் பொருட்களுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவியது.

இரண்டு நாட்களுக்கு முன்பு உரும்பிராய் பகுதியில் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் பெரும் யுத்தம் வெடித்தது. யாழ். கோட்டைக்கும் பலாலிக்குமான தொடர்பைத் துண்டிக்க புலிகள் பெரும்பாடு பட்டனர். இச் சண்டையினால் மக்கள் பலர் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பக்கம் சென்றனர்.

கந்தசாமி குடும்பமும் இடம்பெயர்ந்து நீர்வேலி வரை சென்றுவிட்டு, முடியாமல் இரவு மீண்டும் வந்து சேர்ந்தார்கள். கந்தசாமியும் மனைவியும் அவர்களின் ஆறு பிள்ளைகளும் எங்கே தங்குவது? போதாதற்கு பிள்ளைகளுக்கும் அப்பாவுக்கும் காய்ச்சல் வேற.

அமைதிப்படையாக வந்த இந்திய இராணுவம் தீங்கு ஒன்றும் செய்யாது என பொதுவாக மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கை கந்தசாமியிடமும் இருந்தது.

அதனால் சொந்தவீட்டில் இருந்து கஞ்சியாவது குடிப்பம் என்று குடும்பத்துடன் வீட்டிற்கு வந்துவிட்டார்.

கடவுள் கந்தசாமிக்கு காசைக்கொடுக்கா விட்டாலும் பிள்ளைச் செல்வங்களை அள்ளிக் கொடுத்திருந்தார். மூன்று ஆண் பிள்ளைகளும் மூன்று பெண் பிள்ளைகளுமாக மொத்தம் ஆறு பிள்ளைச் செல்வங்கள். மூத்த மகனுக்கு பதின்மூன்று வயது. இளையவன் பத்து மாதக் குழந்தை. இந்த நிலையில் எவ்வாறு இடம் பெயர்ந்து செல்வது?

"அக்கான்ர வீட்டில மா வாங்கி புட்டு அவிச்சுக்கொடு" என்றார் கந்தசாமி. கூப்பிடு தூரத்தில் உள்ள மச்சாள் வீட்டிற்கு மூத்த மகனை அனுப்பினாள் தாய்.

இதனிடையே ஷெல் சத்தங்கள் குறைந்து துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. சில துப்பாக்கி ரவைகள் சீறிக் கொண்டு வருவது போல இருந்தது. கிழுவை வேலி ளில் அவை பட்டுத் தெறித்தன. கிளைகள் முறிந்தன. யுத்த தாங்கிகளில் இருந்து சுடுவது போல் இருந்தது.

" என்னங்க பயமா இருக்கு. மாவிற்குப் போனவனையும் இன்னும் காணல"

" நீ சும்மா பயப்பிடாத. அவன் வந்திடுவான். இந்தியன் ஆமி ஒன்றும் செய்யாது.

" அம்மா... அப்பா... என்று ஓடி வந்தான் மகன்.

ஆமி ஆட்களைச் சுட்டுக்கொண்டு வாறானாம். இங்கு இருக்கவேண்டாமாம். எங்காவது போகட்டாம்" மாமி சொன்னதை ஒப்புவிச்சான். செய்வதறியாது திகைத்து நின்றாள் மலர்.

" நீ ஒன்றுக்கும் பயப்பிடாதே. அவன் உள்ளுக்க இறங்கமாட்டான். றோட்டால தான் போவான்" என்று சொன்ன கந்தசாமியின் குரல் தளர்ந்திருந்தது.

" அம்மா பசிக்குதம்மா... வெள் ளைப் புட்டு அவியம்மா. கனநாள் சாப்பிட்டு..." என்றான் மூத்தமகன். இளையவர்களும் ஓமம்மா வெள்ளைப்புட்டு... வெள் ளைப் புட்டு..." என்று கோஷமிட்டனர். பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பது போல் இவர்கள் பயமும் காணாமல் போயிரு ந்தது.

ஆனால் வெடிச்சத்தம் அண்மித்துக் கொண்டிருந்தது. யுத்த தாங்கிகள் உறுமும் சத்தமும் கேட்டது. குசினிக்குள் புட்டுக் குத்திக் கொண்டிருந்த தாய் " நீங்கள் எல்லோரும் அப்பாவோடை அறைக்குள் இருங்கள்" என்றாள்.

பிள்ளைகள் எல்லோரும் தகப்பனைச் சுற்றிப் படுத்திருந்தார்கள். வெடிச்சத்தங்கள் மிகவும் அண்மித்துவிட்டன. காற்றினைக் கிழித்தவாறு துப்பாக்கிச் சன்னங்கள் பறந்து சென்றன. புட்டுக் குத்திய சுளகுடன் தாய் உள்ளே ஓடி வந்தாள்.

" ஐயோ வாறாங்க ளப்பா... வாறாங்கள்..." என்றாள் பதற்றத்துடன். பிள்ளைகள் எல்லோரும் ஐயோ அம்மா என்று கத்தினார்கள்.

" கத் தாதைங் கோ... கத்தாதைங் கோ..." என்றார் அப்பா ஈன சுரத் தில்.

" எங்க வாறாங்கள்?"

" பக்கத்து வாழைத் தோட்டத்துக்க வந்ததைக கண்டனான்"

கதவில்லாத வீடு. இரவில் மாத்திரம் கிடுகால் வேய்ந்த தட்டியால் முன் வாசலை மறைத்து விடு வார்கள். சுவாமியறைக்கு மட்டும் கதவு போடப்பட்டிருந்தது.

எல்லோரும் சுவாமியறைக்குள் போனார்கள். மலர் புட்டுச் சுளகையும் உள்ளே கொண்டு சென்றாள்.

" எல்லோரும் சத்தம் செய்யாது நிலத்தில் படுங்கள். அவர்கள் போனதும் வெளியில் போகலாம் என்று அப்பா பிள்ளைகளுக்கு அறிவுறுத்தினார். எல்லாப் பிள்ளைகளும் நிலத்தில் குப்புறப் படுத்தார்கள். அறைக்குள் நிலவிய அமைதி பயங்கரமாய் இருந்தது. ஒவ்வொரு நொடியும் மரண யுகமாக கழிந்தது. ஏதுமறியாத பத்து மாதக் குழந்தை தாயுடன் முரண்டு பிடித்தது. உடனே தாய் தன் பாலை கொடுத்து அதனை ஆசுவாசப்படுத்த முயன்றாள்.

இந்திய இராணுவம் உரும்பிராய் விளை நிலங்களை உழுத வண்ணம் வந்து கொண்டிருந்தது. புலிகளின் கண்ணி வெடிகளுக்குப் பயந்து ஊரை உழுத வண்ணம் இராணுவ ஊர்திகள் வந்து கொண்டிருந்தன. தமிழ் மக்களின் வீடுகள், பயன்தரு மரங்கள் என்பன துவம்சம் செய்யப்பட்டன. இந்திய இராணுவம் அமைதிப்படை எனும் வேஷம் களைந்து கொடிய பாஷிச இராணுவமாக தமிழரின் உயிர் குடிக்க முன்னேறி வந்தது.இந்திய கூர்க்கா இன சிப்பாய் ஒருவன் முற்றத்தில் வந்து நின்று வீட்டை நோட்டமிட்டான். பின்னர் துப்பாக்கியைநீட்டியவாறு பதுங்கிப் பதுங்கி வீட்டினுள் நுழைய முற்பட்டான். சுவாமியறைக்குள் அனைவரும் இருந்ததனால் வெளி யில் எவரும் தென்படவில்லை. அவன் வாசலில் நின்று சந்தேகத்துடன் வீட்டுக்குள் இரு தரம் சுட்டான்.அவ்வளவு தான் பிள்ளைகள் எல்லோரும் "ஐயோ அம்மா...என்று கத்தினார்கள். உடனே தாய் தன் கைக் குழந்தையைக் கையில் ஏந்தியவாறு

"ஐயா எங்களைச் சுடாதையுங்கோ" என்று கதறியவாறு முன்னுக்கு வந்தாள். திடுக்குற்ற சிப்பாய் மற்றயை சிப்பாய்களைக் கூப்பிட்டான். ஹிந்தி மொழியில் கத்தியவாறு மூன்று அல்லது நான்கு சிப்பாய் ஓடி வந்தார்கள்.

" ஐயா எங்களைச் சுடாதையுங்கோ. நாங்கள் பொதுமக்கள். மீண்டும் கத்தினாள். பிள்ளைகளும் கத்தினர்.

சுவாமி அறை உள்ளே ஒரு வன் எட்டிப்பார்த் தான். உடனே "எல்.ரீ.ரீ.ஈ. எல்.ரீ.ரீ.ஈ..." என்று கத்தினான். காய்ச்சலால் போர்வையால் போர்த் தியவாறு தந்தை சுவரோடு சார்ந்திரு ந்தார். அவரைப் பார்த்துத் தான் அவன் கத்தினான்.

" நான் எல்.ரீ.ரீ.ஈ.இல்லை... நான் எல்.ரீ.ரீ.ஈ. இல்லை..." என்று பீதியுடன் கத்தியவாறு எழுந்தார் தந்தை. உடனே அவன் துப்பாக்கி நெருப்புத் தனல்களை கக்கியது. "அம்மா" என்று கத்தியவாறு சுவரோடு சரிந்து விழுந்தார் கந்தசாமி.

உடனே மனைவி "அவரைச் சுடாதையுங்கோ" என்று கத்தியவாறு முன்னே பாய்ந்தாள். அவன் மீதும் அவள் குழந்தை மீதும் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்தன. ஏனைய சிப்பாய்களும் குழந்தைகளை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர்.

மரண ஓலம் அந்த ஊரையே உலுக்கியது. குழந்தைகள் எல்லாம் தலையறுந்த குருவிக் குஞ்சுகளாய் துடித்துத் துடித்து இறந்தனர். தந்தையின் நெஞ்சில் இருந்து குபீரெனப் பாய்ந்த இரத்தம் பிள்ளைகளை நனைத்திருந்தது.

பதின்மூன்று வயது மூத்த மகனும் மூன்று வயது இளைய மகளும் இரத்தத்தில் தோய்ந்து செத்த பிணங்கள் போல் பாவனை செய்தனர். சூடுபட்ட போதும் தாயின் மார்பில் பால் குடித்தபடி குழந்தையும் தெய்வாதீனமாக தப்பிக் கொண்டது. ஏனையோர் செத்து மடிந்தனர்.

இரத்தம் வழிந்தோடி சுளகை நனைத்தது. வெள்ளைப் புட்டு தன் நிறம் மாறி சிவந்த புட்டாய் மாறிக்கொண்டது.

(யாவும் கற்பனையல்ல)

சி.சிறீரங்கன்
உரும்பிராய்

# சுட்டும் விழிச்சுடர்...

## சமூக விபரீதங்கள் பற்றிய கண்ணோட்டம் 06

## கத்தியின்றி , யுத்தமின்றி ஒரு யுத்தம்

மதியம் உணவை ஒரு பிடிபிடித்த பின் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன். உர்ர்ர்... உர்ர்ர்.... என்ற இரைச்சல் என்னைத் தட்டியெழுப்பியது. பழைய பெல் (Bell) ரக ஹெலி கொப்டர் ஒன்று என் வீட்டு முற்றத்தில் இறங்கியது போல் இரைச்சலும், புகை மண்டலமும் வீட்டை சூழ்ந்து கொண்டன. வெளியே எட்டிப் பார்த்தேன். நுளம்பிற்கு புகையடித்தபடி சுகாதாரத் துறை ஊழியரொருவர் நின்று கொண் டிருந்தார்..

“இந்தப் பக்கமும் யாருக்கும் டெங்கா?” என்று கேட்டேன். “ஏன் உங்களுக்குத் தெரியாதோ. எதிர் வீட்டுப் பெண்ணுக்கு டெங்கு. ICU இல் விட்டிருக்கு. அநேக மாக இண்டைக்கிரவு ஆள் முடிஞ்சிரும்” என்றார் கூட நின்ற PHI. எனக்கு தூக்கி வாரிப் போட்டது. அந்தப் பெண் மு(ம)கராசியில் தான் என் முழுவியளமே தினமும் நிகழ்கிறது. அவள் வீடு சென்று” என்ன நடந்தது?” என்றேன். “மூன்று நாள் காய்ச்சல். ஆஸ்பத்திரிக்குப் போனதும் கிட்டடியில் கொழும்பு போய் வந்ததா என்று கேட்டார்கள். ஓம் என்றோம். உடனே டெங்கு தான் என்று சொல்லி மறித்துவிட்டார்கள்” என்றார் அவள் தாய்.

அன்று ஒவ்வொரு முறையும் வாகன இரைச்சல் கேட்கும் போதும் PHI சொன்னதுதான் ஞாபகம் வந்தது. எட்டி பெட்டி வருகுதா என்று பார்த்தேன். எதுவும் நிகழவில்லை. மறுநாள் காலை கேற்றைத் திறந்ததும் முழுவியள முக ராசி முழுகித் தலைவிரித்து துடைத்தபடி தரிசனம் தந்தாள். திகைத்துப் போனேன். பேயோ, ஆவியோ என்று ஒரு கணம் என் னுள் மெல்லிய உதறல். “அது சாதாரண காய்ச்சல் தான். இவங்கள் தான் தேவையில்லாமல் பயமுறுத்திப் போட்டாங்கள் . நேற்றிரவே ரிக்கெட் வெட்டி விட்டாச்சு” என்றார் அவள் அம்மா வாயெல்லாம் பல்லாக.

சுகாதாரத்துறையின் எதிர்வு கூறலை மனதுக்குள் வாழ்த்தினேன். அவர்களையும் குறை கூறமுடியாது. டெங்கு பரவுமிடங்களை அழிக்க இப்படி சில பயமுறுத்தல் உத்திகளும் தேவைப் படுகிறது. இப்படிப் பயமுறுத்தினால் தான் எங்கட சனமும் கொஞ்சம் அவதானமாக விருக்கும்.

### டெங்கு... சொல்ல மறந்த கதை

டெங்கு பற்றி சிறு குழந்தைக்கும் இப்போது விபரமாகத் தெரியும்.


கி.பி.100ஆம் ஆண்டளவில் சீன மருத்துவக் குறிப்புக்களில் இந்நோய் பற்றிய விபரிப்புக்கள் காணப்படு கின்றன. ஆபிரிக்கா மற்றும் தென் கிழக்காசியா போன்ற வெப்ப வலய நாடுகளிலிலேயே இதன் தாக்கம் அதிகம். இது பிளாவி (Flavi) வகை வைரஸ் நோய். இதில் ஐந்து வகைகள் உண்டு.

ஏடிஸ் எஜிப்ரி (Aedes Aegypti) என்னும் நோய்க்காவி நுளம்பினாலேயே இது பரப்பப்படுகிறது. இது நன்னீரிலேயே முட்டையிட்டு குடம்பியை உருவாக்கும் பழக்கமுடையது. முட்டை குடம்பியாக 4 முதல் 7 நாட்கள் வரையாகும். குடம்பி முதிர் நுளம்பாக மேலும் 7 நாட்கள் தேவை. இந் நுளம்பு பகல் நேரத்திலேயே கடிக்கும் தன்மையுடையது. நுளம்பு கடித்த நாளிலிருந்து 5 முதல் 7 நாட்களுக்குள் நோய் அறிகுறி தென்படும்.

ஆரம்பத்தில் குரங்குகளிலேயே டெங்கு நோய் தாக்கம் காணப்பட்டது என்கிறார்கள் ஆய்வாளர்கள். டெங்கு என்ற சொல் “டிங்கா (Dinga)” என்ற சுவாகிலி மொழிச் சொல்லிருந்து டெங்கு (Dengue) என ஸ்பானிய மொழிக்கு மருவியதென்கிறார்கள்.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட பிராந்தியங்களில் மட்டுமே காணப்பட்ட இந்நோய் 20ஆம் நூற்றாண்டிற்கு பின்னரே உலகலாவிய ரீதியில் பரவத் தொடங்கியது. ஆண்டு தோறும் சராசரியாக சுமார் 60 மில்லியன் மக்கள் இதனால் பாதிப்புறுகிறார்கள். இவர்களில் சுமார் 15000 முதல் 20000 வரை இறக்கிறார்கள்.

சாதாரண காய்ச்சல் அறிகுறிகளே டெங்கு நோயாளரிலும் காணப்படுவதால் இதனை இலகுவில் இனங்காண்பது கடினம். காய்ச்சல் 2 முதல் 14 நாட்கள் வரை தொடரலாம். தலைவலி, எலும்பு முட்டுக்களில் நோ, கண் உட்புறத்தில்




நோ, வாந்தி, தோலில் சிவப்பு நிறத் தேமல் புள்ளிகள் காணப்படுதல், தோல் மயிர்த்துளைகளால் குருதி வெளியேறல், களைப்பு என்பன இதன் அறிகுறிகளாகும். குருதியில் சிறுதட்டுக்களின் எண்ணிக்கை 100000 இற்கும் குறைவாக காணப்பட்டால் நோயாளியை வைத்தியசாலையில் அனுமதிப்பது அவசியம்.

சில நாடுகளில் இந்நோய்கான தடுப்பூசிகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஆயினும் இது இன்னும் உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. சித்த மருத்துவத்தில் பப்பா இலைச்சாறு நோய் நிவாரணியாக எடுத்துரைக்கப் படுகின்றது. இதற்கு மேலதிகமாக ஆடாதோடைச்சாறு, நிலவேம்புக் கஷாயம் ஆகியவையும் நோயை குணப்படுத்தவல்லன என குறிப்பிடப்படுகின்றன. எவ்வாறாயினும் நோய்த் தாக்கம் அதிகமாகவுள்ளவருக்கு மருத்துவ சிகிச்சையே அவ்சியம்.

### யாழ்ப்பாணம் முன்வரிசையில்

இலங்கையில் இவ்வருடம் 1.1.2018 முதல் 23.10.2018 வரையிலான காலப் பகுதியில் 40671 பேர் டெங்கு நோயால் பாதிப்புற்றுள்ளனர். இதில் கொழும்பு, கம்பஹா, மட்டக்களப்பு, கண்டி ஆகிய மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக யாழ். மாவட்டம் நோய்த்தாக்கம் அதிகமுள்ள மாவட்டமாகக் கணிக்கப்பட்டுள்ளது. இங்கு இவ்வருடப் பாதிப்பு இதுவரையில் 2542 ஆகும். டெங்குப் பாதிப்பு அதிகமுள்ள மாவட்டங்களில் ஒன்றாக யாழ். மாவட்டம் விளங்குவதால் போதனா வைத்தியசாலையில் எதிர்காலத்தில் டெங்குவுக்கென தனியான மருத்துவ விடுதி அமைப்பது அவசியமாகும்.

யாழ்.மாவட்டத்தில் உடுவில், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் , நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நோய்ப் பாதிப்பு அதிகமாகவுள்ளது. தீவக பிரதேசத்தில் தாக்கம் மிகக் குறைவு. உப்பு நீரில் ஏடிஸ் நுளம்புக் குடம்பி வளரும் வாய்ப்புக்குறைவு என்பதே இதற்குக் காரணம். யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் தை மாதத்தில் 637 பேர் நோய்ப் பாதிப்பிற்குள்ளாகியிருந்தனர். ஆனால் இம்மாதம் எண்ணிக்கை 143 ஆக குறைந்துள்ளது. பருவ மழையை தொடர்ந்து வரும் காலங்களிலேயே நோய் பரவும் ஆபத்து அதிகம் என்ற போதிலும் சுகாதாரத் துறையினரின் நடவடிக்கைகளும் நோய் பரவலை கணிசமாகக் குறைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### நடவடிக்கைகள் ஆழப்பார்வையும், அலட்சியப் பார்வையும்

டெங்கு நோய் தேசிய அச்சுறுத்தலாக மாறியுள்ளதால் நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு மற்றும் ஒழிப்பு நடவடிக்கைகள் சுகாதாரத்துறையினரால் மட்டுமன்றி ஜனாதிபதி செயலணி, பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி அமைப்புக்கள், கல்வி அமைச்சு, பாதுகாப்புத்துறை போன்ற நிறுவனங்களாலும் முன்னெடுக்கப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களம் ஏனைய நிறுவனங்களையும் ஒன்றிணைத்து பிரதேச சுகாதார அதிகாரி அலுவலகங்களூடாக மேற்படி செயற்பாட்டை சிறப்பாக முன்னெடுப்பது பாராட்டுக்குரியது. காலத்திற்கு காலம் சுகாதாரத் துறையினர் குறுநில மன்னர்கள் போல் மக்கள் குடியிருப்புக்களுக்கு படையெடுத்து நீர்தேங்கும் குரும்பை முதல் சிரட்டை வரை சல்லடை போட்டுத் தேடி அதற்குள் நுளம்பு இருப்பதாக வழக்கும் தாக்கல் செய்கின்றனர். ஆனால் இருந்தது நுளம்பா அல்லது எறும்பா என்பது அவர்களுக்கே வெளிச்சம். இப்போது வீட்டிற்கு வெளியே நீர்தேங்கும் எதையும் மல்லக்க கிடக்காமல் மக்கள் அவதானமாகப் பார்த்துக் கொள்வதால், தேடல் வீட்டினுள்ளும் சமையலறை, மலசலகூடம் என்றும் தொடர்ந்து இப்போது கிணறு, நீர்த்தாங்கி என்று தாவியுள்ளது. இனி குடம்பியிருக்காவென்று ஆட்களைத் தடவிப் பார்க்காததுதான் மிச்சம்.

குடியிருப்புகளுக்குள் ஆழ ஊடுருவிப்பார்ப்போர் வீதிகளிலுள்ள வாய்க்கால்களையோ, நீர் நிலைகளையோ சற்றேனும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை யென்று மக்கள் குறைகூறுகின்றனர். அவை தொடர்பில் சுகாதாரத்துறையினர் அலட்சியமாக இருப்பதாக விமர்சனங்கள் எழுகின்றன. இது குறித்து அண்மைய வலம்





## அக்னி

புரி நாளிதழ் ஆசிரியர் பற்றியும் மற்றவன் வீட்டு சிரட்டையைப்பார்க்குமுன் தன் வீட்டு வாய்க்காலை பார்ப்பது நலமென குறிப்பெழுதியதை நினைவூட்ட விரும்புகின்றேன்.

சாக்கடைகளும், வடிகால்களும், பராமரிப்பற்ற குளங்களுமே நுளம்புப் பெருக்கத்தின் முதன்மை யிடங்களென்பது பொதுசன அபிப்பிராயம். அசுத்த நீரில் ஏடிஸ் நுளம்புக் குடம்பிகள் வளராது என்று கூறி சுகாதாரப்பிரிவினர் தம் பொறுப்பைத் தட்டிக் கழித்தாலும், மற்ற எல்லா வகையான நுளம்புகளதும், நோய்க்கிருமிகளதும் தாயகம் இவை தானென மக்கள் உறுதிபட நம்புகின்றனர். மக்களின் சந்தேகத்தைத் தீர்க்கும் வகையில் மேற்படியிடங்களையும் சோதனைக்குட்படுத்தி, உரிய நடவடிக்கையெடுக்க வேண்டியது சுகாதாரப் பிரிவினரின் கடமையாகும்.

### பொதுநலனும், சமூகப்பொறுப்பும்

மழை காலம் அண்மிப்பதால் யாழ். மாநகர சபையும் , ஏனைய சில பிரதேச சபைகளும் வடிகால்களில் தூரெடுத்து துப்புரவு செய்யும் பணியை முன்னெடுத்திருப்பது பாராட்டுக்குரியது: ஆயினும் அவை துப்புரவு செய்யப்பட்ட மறுநாளே அந்த வாய்க்கால்கள், நீர் நிலைகளில் பியர் பேணிகளும்.பிளாஸ்ரிக் போத்தல்களும், சொப்பிங் பைகளும் மிதப்பதை பார்க்கும் போது கண்ணீர் வருகிறது. இது தொடர்பில் பொறுப்பற்று செயற்படும் பொது மக்களும் தம்மைத் திருத்திக் கொள்வது அவசியம்.

பொதுவிடங்களை பக்குவமாகப் பயன்படுத்தும் மனோபாவம் இன்னும் எம்மில் பலருக்கு ஏற்படாமலிருப்பது கவலைக் குரியது. முன்னொரு காலம் பேராதனை தாவரவியல் பூங்காவில் "இந்த இடத்தை எப்படி பார்க்கிறீர்களோ அவ்வாறே இங்கிருந்து அகலும் போதும் இதை விட்டுச் செல்லுங்கள்" **(Leave this place as you see it.)** என்ற வாசகம் பொருத்தப்பட் டிருந்தது. பொதுச் சொத்துக்களையும், பொதுவிடங்களையும் பயன்படுத்தும் நமக்கும் இது பொருந்தும். எனவே குடியிருப்புக்களை மட்டுமின்றி பொது விடங்களையும் நோய்ப் பெருக்கத்திலிருந்தும், அச்சுறுத்தலிருந்தும் பாதுகாக்கும் சுகாதாரப்பிரிவினரின்கடமைக்கு வலுவூட்ட வேண்டியது எம் பொறுப்பாகும். டெங்குவிற்கெதிராக கத்தியின்றி, இரத்தமின்றி தொடரட்டும் யுத்தம்.







ஏடிஸ் கொசு பகல் நேரத்தில் மட்டுமே கடிக்கும் என்பதால், நம் பிள்ளைகள் பகலில் நேரத்தைச் செலவிடும் பள்ளிகள், பணிபுரியும் இடங்கள், அலுவலகங்கள் அனைத்தையுமே ஏடிஸ் கொசு இல்லாத இடங்களாகப் பராமரிக்க வேண்டும்.




# இது நம்ம கதைகள்... 22

## ஆளவந்தான்

அவுஸ்திரேலியாவிலிருந்து வட கிழக்காக சுமார் 3000 கிலோ மீற்றர் தொலைவில் மத்திய பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள 21 சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணமுள்ள சிறிய தீவு நவ்ரூ. சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் இத்தீவில் வாழத் தொடங்கியிருந்தாலும், 1968 இல் தான் அது தன்னாட்சி அதிகாரமிக்க நாடாக உருவெடுத்தது. இதன் வளர்ச்சி தொடர்பில் தத்துவ உடன்படிக்கையொன்றை இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகளும் கூட்டாக மேற்கொண்டு உதவி நல்குகின்றன.

13000 மக்கள் தொகை கொண்ட இந்த நாட்டில் கோரல் கற்களும் ,நீண்ட வெள்ளை மணல் கடற்கரைகளும் சுற்றுலாத்துறைக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன. இதனால் இத்தீவு இனியதீவு என்றும் அழைக்கப்படுகின்றது. பொஸ்பேற் சுரங்கங்களும் இந்நாட்டிற்கான வருமான வளமாகும். எவ்வாறாயினும் நாட்டின் வருமானம் போதியதாக இல்லாமையால் 2001 இல் அவுஸ்திரேலியாவால் முன் வைக்கப்பட்ட சட்டவிரோத குடியேறிகளுக்கான தடுப்பு மையத்தை அமைக்க இந்நாடு இணங்கியது. அவுஸ்திரேலியாவிற்கு படையெடுக்கும் சட்டவிரோத் குடியேறிகளை இந்நாட்டில் தடுத்து வைத்திருப்பதன் மூலம் சுதேசிகளுக்கு பெருமளவு வேலைவாய்ப்பு கிட்டும் என்பதே இதன் நோக்கமாகும்.



தற்போது இந்நாட்டில்சிரியா, சூடான், சோமாலியா, லிபியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த 800 வரையிலான அவுஸ்திரேலியவிற்குள் நுழைய முயன்ற சட்டவிரோத குடியேறிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 2014 இல் சுமார் 1500 பேர் வரையில் தடுப்பு முகாமிலிருந்தனர். நவ்ரூ தீவு தவிர அருகிலுள்ள மனுஸ்தீவு, கிறிஸ்மஸ் தீவு போன்றவற்றிலும் குடியேறிகளுக்கான தடுப்பு முகாம்கள் உள்ளன.

2014, 2015 இல் குடியேறிகள் அடிப்படை மற்றும் மருத்துவ வசதிகளை மேம்படுத்தக் கோரி போராட்டங்களில் ஈடுபட்டனர் . விரக்தி காரணமாக பலர் தற்கொலைக்கு முயன்றனர். முகாமில் வாழ்க்கை கடினமாகியதால் பல சட்டவிரோத குடியேறிகள் முகாமிலிருந்து தப்பித்தும் சென்றனர். தப்பிக்கும் வேளையில் பிடிபட்டவர்கள் வசதிகளற்ற சிறைகளிலடைக்கப்பட்டனர். இச் சிறைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கு முறையீடுகள் கிடைக்கப் பெற்றதால் அவற்றைக் கண்காணித்து அறிக்கையிட அதிகாரிகள் குழுவொன்று அங்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதுவரை சொன்னவையாவும் உண்மையில் நிகழ்ந்தவை. இனித் தொடர்வது கற்பனை.



சிறைக் கூடங்கள் நிலக்கீழ் அறைகளாக அமைக்கப்பட்டிருந்தன. முகாமிலிருந்து தப்பிச் சென்று பிடிபட்டவர்கள் நாடுகளாக வகைப்படுத்தப்பட்டு அடைக்கப்பட்டிருந்தனர்.

முதல் நிலக்கீழ் அறையில் சிரியர்கள் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களின் கைகளுக்கும், கால்களுக்கும் சங்கிலி மாட்டப்பட்டிருந்தது. இரும்புக் கதவிற்கு இரட்டைப்பூட்டுக்கள் இடப்பட்டிருந்தன. "ஏன் இவர்களை இப்படியடைத்துள்ளீர்கள்?"என்று ஐ.நா. அதிகாரிகள் அவுஸ்திரேலியர்களிடம் கேட்டனர். "இவர்கள் அதி பயங்கரமானவர்கள். சிறிய சந்தர்ப்பம் கிடைத்தாலும் மீளவும் தப்பித்துவிடுவார்கள். இதனால் இவர்களை உச்ச பாதுகாப்பில் வைத்துள்ளோம்" என்றனர் அவுஸ்திரேலியர்கள்.

அடுத்த அறையில் சூடானியர்கள். அவர்களுக்கு கைகளுக்கு மட்டுமே விலங்கிடப்பட்டிருந்தது. கதவிற்கு ஒரு பூட்டுப் போடப்பட்டிருந்து. "இவர்கள் சிரியர்களை விட பரவாயில்லை. ஆபத்துக்குறைந்தவர்கள்" என்றனர் சிறைக்காவலர்கள்.

மூன்றாம் அறையில் அடைக்கப் பட்டோருக்கு விலங்கிடப்படவுமில்லை, அவர்கள் அறைக்கதவு பூட்டிடப்பட்டிருக்கவுமில்லை. கதவு திறந்து விடப்பட்டிருந்து. "இவர்கள் ஆபத்தற்ற, அப்பாவிகளா? " என்று ஐ.நா. அதிகாரிகள் வினவினர். "இல்லையில்லை. இவர்கள் இலங்கைத் தமிழர். மற்றவர்களை விட தந்திரமிக்கவர்கள், ஆபத்தானவர்கள்" என்றனர் சிறையதிகாரிகள். "அப்படியாயின் ஏன் இவர்களுக்கு குறைந்தளவு பாதுகாப்பு" என்று கேட்டனர் ஐ.நா. அதிகாரிகள். "இவர்கள் மற்றவர்கள் எல்லோரையும் விட மிக ஆபததானவர்கள் தான். ஆனால் தம்மிடையே போட்டி , பொறாமைமிக்கவர்கள். ஒருவர் தப்பிக்க நினைத்தாலும் மற்றவர்கள் அவரை இழுத்து உள்ளே பொறித்து விழுத்திவிடுவார்கள் அல்லது காட்டிக்கொடுத்து விடுவார்கள். ஆகவே இவர் ஒன்றுபடும்வரை தப்பிக்க வாய்ப்பேயில்லை . எனவே தான் இவர்களுக்கு பாதுகாப்பு குறைவு " என்றனர் சிறையதிகாரிகள்.

வீரமும், விவேகமும் நிறைந்திருந்தும் தமிழனால் இன்னும் ஏன் ஆளமுடியவில்லை என்ற மர்மம் இப்போதுதான் ஐ.நா அதிகாரிகளுக்குப் புரிந்தது.

அந்த வேளையில் முகாமிலடைக்கப்பட்டிருந்த நம்மவரொருவரின் கைபேசி ring tone "ஆளப்போறான் தமிழன்.... தமிழன் ......" என்ற பாடலை எதிரொலித்தது. ஐ.நா அதிகாரிகள் பாடலை ரசித்தவாறே அங்கிருந்து புறப்பட்டனர்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கின்
அனைவருக்கும் (சாபக்)கேடு.

**எப்.எக்ஸ்.அன்ரன்**



1000 வேண்டும்



# தேயிலைச் சாயத்தில் தோய்ந்திருக்கும் குருதிக்கறை

**இலங்கை சுதந்திரம் அடைந்த பின் உருவாக்கப்பட்ட "இலங்கை குடியுரிமை சட்டம்" என்ற சட்டம் பல தமிழ் மற்றும் சிறுபான்மை பிரதிநிதிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டதனால் ஏற்பட்ட நிலைகளில் பல மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கப்படாது நாடற்றவர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.**

நாட்டில் இன்று பற்றியெரியும் பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்துள்ள மக்கள் போராட்டமாக இந்த தோட்ட தொழிலாளிகளின் சம்பள அதிகரிப்பு பிரச்சினை காணப்படுகிறது.

இன்று அவர்கள் 1000ரூபா நாளாந்த ஊதியமாக வழங்க வேண்டும் என நாடெங்கிலும் பல போராட்டங்களினை முன்னெடுத்துள்ளனர். அவர்களுக்கு சமாந்தரமாக நாட்டின் பல்வேறு இடங்களில் மக்கள் போராட்டங்கள் அவர்களுக்கு ஆதரவுக்குரல் வழங்கி ஓங்கி ஒலித்துக்கொண்டி ருக்கிறது.

மலையகம்,வடக்கு, கிழக்கு, கொழும்பு என இன்று மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டமாக பரிணமித்து நிற்கிறது அவர்களுக்கான 1000ரூபா சம்பள கோரிக்கை.

இலங்கையின் பொருளாதாரத்தில் அதிக பங்களிப்பினை வழங்கி வரும் பெரும்தோட்ட துறையான தேயிலை தோட்டம் சார்ந்த மலையக உறவுகளுக்கான ஊதியமும், சலுகைகளும் நாட்டில் மற்றைய உழைப்பாளிகளுக்கு கிடைப் பதை பார்க்கிலும் சொற்பமே!

இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் **(Gross Domestic Product)** அதிக பங்கை வகிப்பது தேயிலை உற்பத்தியும் அதன் ஏற்றுமதி யுமாகும். சர்வதேச அளவில் இலங்கை தேயி லைக்கு அதிக கிராக்கியும், வருமானமும் கிடைக் கின்றது என்றால் அதில் இந்த தொழிலாளிகளின் உழைப்பும், வியர்வையும் அதில் நிரம்பியுள்ளது என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமேதுமில்லை.

இவ்வாறாக தம் வாழ்நாட்களை அவர்கள் தமது வாழ்வியல் முன்னேற்றத்தினை கருத்தில் கொள் ளாது இலங்கையின் பொருளாதாரத்துக்காக அவர்களது அயராத உழைப்பு ஊறிப்போயுள்ளது.

தேயிலை வருமானத்தின் மூலம் கிடைக்கும் செலாவணிகளிலேயே ஜனாதிபதி, பிரதமர், அரசியல்வாதிகள் எனப் பலரும் சம்பளம் பெற, சலுகைகள் பெற இவர்களது உழைப்பினால் கிடைத்த நாட்டின் பொருளாதார வருமானம் மறைமுகமாக உள்ளது என்பதும் உண்மை.

இன்று இலங்கையில் தோட்டத்தொழிலாளிகள் சனத்தொகை (மலையக குடித்தொகை) எட்டு இலட்சத்துக்கு(800,000) அதிகமாக வாழ்வதோடு இலங்கையின் மொத்த சனத்தொகையில் 4.5 வீதமாக காணப்படுகிறார்கள்.

இவ்வாறு நாட்டின் அங்கமாக இருப்பவர்களின் கடந்த கால வரலாறுகள் கசப்பானவையாகவும் அவை இன்று வரை தொடர் கதையாக இருப்பது வேதனை.

19,20ஆம் நூற்றாண்டில் வெள்ளையர்களால் பெரும் தோட்ட துறைக்கென ஊழியம் புரிய தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்களாக இவர்கள் காணப்பட்டாலும் இன்று இலங்கையர் என்ற அடையாளத்தோடு இலங் கைக்காக அர்ப்பணிபுடன் ஊழியம் புரிகிறார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின் உருவாக்கப் பட்ட "இலங்கை குடியுரிமை சட்டம்" என்ற சட்டம் பல தமிழ் மற்றும் சிறுபான்மை பிரதிநிதிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டதனால் ஏற்பட்ட நிலைகளில் பல மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கப்படாது நாடற்றவர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர். அத்தோடு அவர்களுக்கான உரிமைகளும் மறுக்கப்பட்டே வந்தன.

இதன் பின்னர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற சிறீமா- சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் பாதித் தொகை மலையக மக்களுக்கு இலங்கை குடித்தொகை வழங்குவதென்றும் மீதி தொகையினரை இந்திய திரும்ப அழைக்க வேண்டும் என்ற தாயையும் சேய்களையும் பிரிக்கின்ற விதத்தினாலான ஒரு விசித்திர ஒப்பந்தம் கைச்சாத்தாக்கியும் அது நிறைவேறாதே போனது.

இருப்பினும் அரசியல் நிகழ்வுகள் மூலம் 1960 ஆம் ஆண்டில் 40 வீதமான மக்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1990 ஆண்டிலேயே பல மக்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்பட்டது என்பது வரலாறு. இவ்வாறு பல இன்னல்களினை இலங்கை தீவில் சுமக்கும் இனமாக வடக்கு- கிழக்கு தமிழர்களினை போல நம் சொந்தங்கள் கண்ணீர் கதைகள் பெரியவை.

கடும் குளிர், மழை, நோய்கள், அட்டைக்கடிகள், வறுமை என்ற காரணங்களுக்குள் உழன்று கொண்டு தேயிலை கொழுந்து பறிக்கிறார்கள். எத்தனையோ பேர் கொழுந்து பறிக்கும் போது சறுக்கி மலையிலிருந்து விழுந்து இறந்து போயிருக் கிறார்கள். அட்டைகள் கடித்து குருதியினை உறிஞ்சக்குடித்தாலும் அவர்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்காக அவர்களது குருதி இன்னும் கம்பனிகளால் உறிஞ்சிக் குடிக்கப்படுகின்றன.

இன்று உலகின் பல பாகங்களில் நாளாந்தம் பருகுகின்ற தேநீர் பானத்தின் சாயத்தில் இவர்களின் குருதி தோய்ந்துள்ளது என்ற உண்மை புரியப்பட வேண்டும், புரியவைக்கப்பட வேண்டும்.

இன்று இலங்கையில் ஒரு நாளாந்த தொழிலாளி குறைந்த சம்பளம் பெறுகிறார்கள் என்றால் அது மலையக தோட்ட தொழிலாளர்கள் மட்டுமே. அதிகரித்த வாழ்க்கை செலவுகளுக்கு மத்தியில் அவர்களுக்கு வழங்கும் நாளாந்த சம்பளம் 500ரூபா ஒரு குடும்பத்தினை நடத்த போதுமான தாக இருக்காது.

எனக்கு தெரிந்து வடக்கில் 2000 ஆம் ஆண்டில் மேசன் கூலி தொழிலாளி களுக்கு 500ரூபா வழங்கப்பட்டது, இன்று அவர்களுக்கான கூலியே 1500-2000 ரூபாவாக இருக்கும் போது இலங்கை பொருளாதாரத்துக்காக உழைக்கும் மக்களுக்கு நாளாந்த கூலியாக 1000 என்பதே மிக குறைந்த தொகையேயாகும்.!

இந்த தோட்ட தொழிலாளிகளுக்கு 1927 இல் 41சதம் நாளாந்த கூலியாகவும், 1983இல் 17ரூபா 83 சதமாகவும் , 1993இல் 72ரூபா 24சதம் ஆகவும், 1998ஆம் ஆண்டு 101 ரூபவாகவும் கூலிகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. இப்போது 2018இல் 500ரூபாவாக வழங்கப்பட்டுக் கொண்டிருக் கிறது. இது உண்மையிலேயே மிகக்குறைந்த தொகையாகும்.

இன்று இலங்கையின் பொருளாதாரத்தில் பங்களிப்பு செய்வது மட்டுமல்லாது, இன்று கல்வியிலும், அரசியலிலும், மற்றைய துறைகளி லும் வீறுகொண்டு வளர்ந்து கொண்டு வருகிற காலகட்டத்தில் அவர்களுக்கான கல்வி, சுகாதாரம், வாழ்க்கைச்செலவு, வீட்டு பராமரிப்பு செலவு என பல செலவுகளினை கருத்தில் கொண்டும் அவர்களின் உழைப்பினை மதித்து, அவர்களது பங்களிப்பு என்பவற்றினை மதித்தும் அதிகரித்த வாழ்க்கை செலவுகளினை கருத்தில் கொண்டும் அரசும் , தோட்டக் கம்பனிகளும் முன்வந்து அவர்கள் கோரும் நாளாந்த ஊதியமாக 1000 ரூபாவினை வழங்க முன்வர வேண்டும் என்பது தமிழ் மக்கள் சார்ந்தும், நாட்டு மக்கள் சார்ந்தும் ஏகோபித்த குரலாக ஒலிக்கிறது. அவர்களுக்கான நீதியாவது வருகின்ற தீபாவளிக்குள் கிடைக்க அனைத்து தரப்பினரும் ஒன்று சேர்ந்து போராடுவோமாக.

கு.மதுசுதன்

# 19 ஆண்டுகள் பயணம் அறிமுகமான மைதானத்திலே ஓய்வுபெறும் ரங்கன ஹேரத்



டெஸ்ட் போட்டிகளில் 19 ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகமான மைதானத்திலேயே ஓய்வு பெறுகிறார் இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்துவீச்சாளரான ரங்கன ஹேரத்.


டெஸ்ட் கிரிக்கெட்டில் வெற்றிகரமான இடது கை சுழற்பந்து வீச்சாளராகக் கருதப்படும் ரங்கன ஹேரத் இங்கிலாந்து அணிக்கெதிரான முதல் டெஸ்டுடன் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து விடைபெற இருப்பதாக இலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதுதொடர்பாக இலங்கை கிரிக்கெட் வாரியத்துக்குக் கடிதம் மூலம் அவர் தகவல் தெரிவித்துள்ளார்.

ஓய்வு முடிவு குறித்து ஹேரத் பேசியதை உறுதி செய்துள்ள இலங்கைக் கிரிக்கெட் வாரிய அதிகாரி ஒருவர், இது முழுக்க முழுக்க அவரது தனிப்பட்ட முடிவு என்று தெரிவித்திருக்கிறார்.

19 ஆண்டுகளுக்கு முன்பு டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமான அதே மைதானத்தில் (காலே), தனது கடைசி டெஸ்ட் போட்டியில் ஹேரத் விளையாட இருக்கிறார். 40 வயதான ரங்கன ஹேரத், இலங்கை அணிக்காக இதுவரை 92 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 430 விக்கெட்டுகள் வீழ்த்தியிருக்கிறார். டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர்கள் வரிசையில் 10வது இடத்தில் இருக்கும் ஹேரத், கடந்த 2016ஆம் ஆண்டில் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டி களில் இருந்து ஓய்வு பெற்றார். கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற தென்னாபிரிக்கத் தொடருக்கு முன்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஹேரத், வரும் நவம்பர் மாதத்துடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற இருப்பதாகக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. சமீபகாலமாக காயங்களால் அவதிப்பட்டு வந்த ஹேரத், ஓய்வுபெற முடிவெடுத்திருக்கிறார்.

# டோனியை அணியில் சேர்ப்பேன்- கோலி

**- டி வில்லியர்ஸ்**



இருபது-20 உலக கோப்பை, 50 ஓவர் உலக கோப்பை மற்றும் சம்பியன்ஸ் ட்ராபி என மூன்று விதமான உலக கோப்பை போட்டிகளையும் வென்ற ஒரே தல டோனி. அணித்தலைவர் பொறுப்பில் தனக்கென்று தனி பாணியை கொண்டவர்.

பல்வேறு சாதனைகளை அணித்தலைவராகவும் வீரராகவும் படைத்தவர். உல கின் சிறந்த பினிஷர் என்றும் அறியப்பட்டவர். அப்படிப்பட்ட டோனியின் துடுப்பாட்டத்தின் அணுகுமுறை குறித்து, அண்மைக் காலங்களாக விமர்சனங்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன.

1994 முதல் 2000ஆம் ஆண்டு வரை இந்திய அணியின் விக்கெட் கீப்பராக நயன் மோங்கியா இருந்தார். 140 ஒரு நாள் போட்டிகளிலும் 44 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடியுள்ளார். அதற்கு பிறகு 2004-ஆம் ஆண்டு வரை மன்னவா பிரசாத், சபா கரீம், விஜய் தாஹிரியா, சமீர் திஹே, தீப் தாஸ்குப்தா, அஜய் ரத்ரா, பார்த்தீவ் படேல், தினேஷ் கார்த்திக் என 8 விக்கெட் கீப்பர்கள் இந்திய அணியில் விளையாடியுள்ளனர். ஆனால் யாரும் பெரிய அளவில் விக்கெட் கீப்பிங்கிலும், துடுப்பாட்டத்திலும் ஜொலிக்கவில்லை.

அந்த காலகட்டத்தில் பேட்டிங், விக்கெட் கீப்பிங் என இரண்டிலும் சிறப்பாக செயற்பட்டு இந்திய அணியில் இடம் பிடித்தவர் எம்.எஸ்.தோனி. பிறகு உலகின் சிறந்த விக்கெட் கீப்பர், மிக சிறந்த பினிஷர் மற்றும் பெஸ்ட் அணித் தலைவராக விளங்கினார். ஆனால் தற்போது பட்டிங் பர் போம் குறித்து பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகிறார் டோனி. ரிஷப் பண்ட், சஞ்சு சாம்சன் உள்ளிட்ட இளம் வீரர்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர். மேலும் ரிஷப் பண்ட் கிடைத்த வாய்ப்புகளை அற்புதமாக பயன்படுத்தி சிறப்பாக விளையாடி வருகிறார். இதனால் டோனியின் இடம் குறித்து இரு தரப்பட்ட கருத்துகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

இந்த நிலையில் ஒரு நாள் போட்டிகளில் டோனியின் இடத்தை பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு டி வில்லியர்ஸ் கருத்து தெரிவித்துள்ளார். அவர் அளித்த பேட்டியில் "வருடத்தின் ஒவ்வொரு நாளும் டோனி என்னுடைய அணியில் விளையாடுவார்.

80 வயதானாலும், வீல் சேரில் வந்தாலும் என்னுடைய கனவு அணியில் டோனிக்கு இடமுண்டு. டோனி ஒரு சிறந்த வீரர். அவருடைய சாதனைகளை பார்த்தாலே தெரியும். அவரை போன்ற ஒரு வீரரை அணியில் இருந்து விலக சொல்கிறீர்களா? நீங்கள் வேண்டுமானால் அந்த மாதிரி சொல்லலாம். ஆனால் நான் ஒரு போதும் சொல்ல மாட்டேன் என்றார்.



மேலும் விராட் கோலியை பற்றி கூறிய டி வில்லியர்ஸ் கோலி அணித்தலைவராக சில வருடங்களாக தன்னுடைய தவறுகளில் இருந்து கற்றுகொள்கிறார். நாங்கள் இருவரும் ஒன்றாக பட்டிங் செய்யும் போது எங்களுக்குள் ஒரு கெமிஸ்ட்ரி இருக்கிறது. விளையாட்டை பற்றி எங்களுக்குள் ஒரே விதமான எண்ணங்கள் உள்ளன. அதை நாங்கள் மகிழ்ச்சியாக கருதுகிறோம். அவருடன் இணைந்து துடுப்பாட்டம் செய்வது மிகவும் மகிழ்ச்சி. கோலிக்கு ரொனால்டோ ரொம்ப பிடிக்கும். அதனரல் அவர் ரொனால்டோ நான் மெஸ்ஸி என்றார்.

பல புது வகையான ஷாட்களை கிரிக்கெட் உலகிற்கு அறிமுகப்படுத்தி ரசிகர்களை தன் வசப்படுத்தியவர், தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸ். ஸ்பைடர் மான், மிஸ்டர்.360, சுப்பர் மான் என பல புனை பெயர்களுக்கு சொந்தக்காரர்.

அனைத்து நாட்டு கிரிக்கெட் ரசிகர்களாலும் விரும்பப்படும் ஒரு கிரிக்கெட் ஜாம்பவான் தான் டி வில்லியர்ஸ். இந்த வருடம் மே மாதம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து அதிர்ச்சி அளித்தார்.

# ஹோலியின் மற்றுமொரு சாதனை என்ன தெரியுமா?

கிரிக்கெட்டின் கடவுள் என அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் உலக அளவில் பல்வேறு சாதனைகளைப் படைத்திருக்கிறார். அந்த சாதனைகளை யார் முறியடிப்பார் என உலகம் முழுவதும் அவ்வப்போது விவாதங்கள் நடப்பதுண்டு.

நீடித்து வந்தது. ஆனால், வெறும் 205 போட்டிகளிலேயே விராட் கோலி அந்த சாதனையை முறியடித்து, பெருமையை சேர்த்துள்ளார். இந்த சாதனையை இந்திய அளவில் ஐந்தாவது வீரராகவும், உலகளவில் 13ஆவது வீரராகவும் அவர் கடக்கிறார்.



இந்திய அணியில் விராட் கோலி சேர்ந்தபின்பு அவர் மீதுதான் அந்த நம்பிக்கை திரும்பியது. அவரும் அதிரடியாக விளையாடி பல சாதனைகளைப் படைத்து வருகிறார். அந்த வகையில், சச்சின் டெண்டுல்கரின் நீண்டகால சாதனையை விராட் கோலி முறியடித்துள்ளார்.


2001-ஆம் ஆண்டு சச்சின் டெண்டுல்கர் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தார். அது அவரது 259 ஆவது இன்னிங்ஸ் ஆகும். இதுவே, உலகளவில் அதிவேக பத்தாயிரம் ஓட்டங்களாக இன்றுவரை

இதற் கிடையே, இன்னொரு சாதனையையும் விராட் கோலி படைத்திருக்கிறார். ஒரே ஆண்டில் குறைந்த இன்னிங்ஸில் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சாதனைதான் அது. 2018 ஆம்ஆண்டில்வெறும்11போட்டிகளிலேயே விராட் கோலி ஆயிரம் ஓட்டங்ளைக்கடந்துவிட்டார்.

இதற்குமுன்னர், 2010ஆம் ஆண்டு 15 போட்டிகளில் தென்னாபிரிக்காவின் ஹசீம் அம்லாவும், 2012ஆம் ஆண்டு 15 போட்டிகளில் விராட் கோலியும் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்ததே சாதனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# கல்வியில் வெற்றி பெற...

கல்வி என்பது எமது வாழ்வை மேன்மை அடையச் செய்கின்றது. "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பது முதுமொழியாகும். இத்தகைய சிறப்புமிக்க கல்விச் செல்வத்தை நாம் உரிய உகந்த வழிகளில் குறைந்த நேர விரயத்துடன் பெற வேண்டும் எனின் நல்ல கற்றல் முறைகளைக் கடைப் பிடிக்க வேண்டும். பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் மற்றும் கல்விச்சாலைகளிலும் கற்பதற்கு நல்ல வழிமுறைகள் உண்டு. அதை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என எடுத்துக் கூறுவது இன்று அரிதாக உள்ளது. அதனால் மாணவர் பலர் கற்பதை நல்ல முறையில் எதிர்கொள்ள முடியாமல் பின்தங்கி விடுகின்றனர். பரீட்சையை பயத்துடன் எதிர்கொள்கின்றனர். கற்றவற்றை நீண்டகாலத்திற்கு மனதில் ஞாபகப்படுத்தி வைத்திருக்கக் கூடிய வழிமுறைகள் தெரியாமல் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். பின்வரும் வழிமுறைகள் கற்றல் செயற்பாடுகளை இலகுபடுத்துகின்றன.



**தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும்**

கற்றலுக்கு முதலில் தேவைப்படுவது தன்னம்பிக்கையும், முயற்சியும் ஆகும். இவை இரண்டும் பலமான அத்திபாரங்கள் ஆகும். என்னால் முடியும் என்ற உணர்வு மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது. தன்னம்பிக்கையுடன் தேர்வுகளை எதிர் கொள்ளும் போது அதிக மதிப்பெண்கள் பெறுவது நிச்சயமாகும்.

**நேரத்தைத் திட்டமிட்டு பயன்படுத்தல்**

கற்றல் என்பது கடினமான ஒன்றாகத் தோன்றுவதற்கு முக்கிய காரணம் கிரமமாக நேரத்தை பயன்படுத்தாமையாகும். இதனை வெற்றிகரமாக கையாள்வதற்கு முதலில் படிப்பதுக்கென ஒரு நேர சூசியைத் தயார்ப்படுத்த வேண்டும். நீண்ட காலத்திட்டமாக ஆண்டு முழுவதற்கும் என அமைத்து அத்துடன் வாரத்துக்கான நேர சூசியையும் அமைத்துக் கொள்ளல் நன்று. நேரசூசியை அமைப்பதுடன் நின்றுவிடாது. அதன்படி செயற்படவும் வேண்டும். இதனால் நேரத்தையும், சக்தியையும் சிறந்த முறையில் பயன்படுத்த முடியும். களைப்பும் சலிப்பும் தோன்றாது கடினமான பாடம் எனத் தோன்றுவதைப் புறக்கணிக்காது முதலில் கடினமான பாடத்தை கற்றுப் பின் இலகுவான பாடம் என மாறி மாறிக் கற்பது நன்று. ஒரு மணி நேரம் படித்தபின் ஐந்து நிமிடம் ஓய்வு எடுத்து பின் கற்பதைத் தொடரலாம். அதிகாலையும், பொழுது சாயும் நேரமும் கற்பதற்கு உகந்த நேரங்களாகும்.

**அமைதியான சூழல்**

கற்பதற்கு அமைதியான சூழல் மிகமிக அவசியம். கவனக் கலைப்பான்கள் கற்றல் செயற்பாட்டிற்குத் தடையாக அமைகின்றன. தொலைக்காட்சி, வானொலி மற்றும் சத்தம் சந்தடி தரக்கூடிய சூழலைத் தவிர்த்து அமைதியான சூழலில் கற்பது உகந்தது.

**கற்கும் முறைகள்**

கூர்ந்து கவனித்தல் (Observation) நாம் ஒரு பாடத்தை படிக்கும் போது அலட்சியமாகப் படிக்காது கூர்ந்து கவனித்துப் படிக்கவேண்டும். பாடத்தின் மையக் கருத்து மனதில் பதியுமாறு வாசிக்க வேண்டும்.

**தொடர்புபடுத்தல்**

படித்தவற்றை அப்படியே விட்டுவிடாமல் வேறு பொருத்தமான சிலவற்றுடன் தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும். இதனால் ஞாபகசக்தி கூடும்.

**செயற்படுத்தல்**

நாம் புதிதாகக் கற்றவற்றைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்த வேண்டும். இது கற்றதை மறந்து விடாமல் இருக்க உதவுகின்றது.

**குறிப்பு எடுத்துக் கற்றல்**

ஆசிரியர் பாடத்தைக் கற்றுத் தரும் போதும் தாமாக கற்கும் வேளைகளிலும் குறிப்பு எடுத்துக் கற்பது அதிக பயன் தரக் கூடியது. பரீட்சை நெருங்கும் போது இக்குறிப்புகள் மிகவும் உதவியாக அமைகின்றன. முழுப் பாடத்தையும் கற்பதைவிட இக் குறிப்புகள் நேரத்தை வீணாக்காது உதவக் கூடியதாகும்.

**நாளாந்த மீட்டல்**

கற்றதில் பெரும் பகுதியை மறப்பது என்பது மாணவர்கள் எதிர்நோக்கும் மற்றுமொரு பாரிய பிரச்சினையாகும். ஒரு நாளில் படித்தவற்றை அன்றைய தினமே மீட்டல் செய்யும் மாணவர்கள் பலர் தாம் படிப்பவற்றை நீண்டகாலம் நினைவில் வைத்து இருக்கின்றார்கள் என்பது எளிமையான உண்மையாகும். மாணவர் பலரின் வெற்றிக்கு இதுவே அத்திபாரமாக அமைந்துள்ளது. அன்றாடம் படித்தவற்றை மீட்டல் செய்வோரும் வாரம் முடிவில் படித்தவற்றை தொகுத்து மீட்டல் செய்வோரும் கல்விப் பாதையின் வெற்றி ஏணியில் மேலேறிச் செல்வார்கள் என்பது தெளிவான உண்மையாகும்.

இவ்விதம் வெற்றிகண்ட மாணவர்கள் பலரின் கற்றல் முறைகளை ஆராய்ந்த அமெரிக்க உளவியல் அறிஞர்கள் அவற்றைத் தொகுத்து "SQ3R கற்றல் முறை" என வெளியிட்டுள்ளனர். இங்கு

S-Survey படிக்க வேண்டியதை விரைவாகவும் மேலோட்டமாகவும் பார்வையிடல்.

Q-Question கற்பிக்கும் போது ஆசிரியர் என்ன பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்றார். என்ன வினாக்களுக்கு விடை தருகின்றார் என குறித்துக் கற்றல்.

R-Read வினக்களுக்கான விடையைத் தேடி வாசித்து அறிதல்.

R-Recite ஒரு பாடத்தின் ஒரு பகுதியை வாசித்து அதை விளங்கிக் கொண்டபின் திரும்ப அதைச் சொல்ல முடிகின்றதா எனச் சொல்லிப் பார்த்தல்.

R-Revise வாசித்த பகுதிகளில் சிலவற்றை மீண்டும் மீட்டல் செய்தல் அதாவது நினைவுக்கு வராத பகுதிகளை வாசித்து நினைவிற்குக் கொண்டு வருதல்.

இம்முறைகள் மாணவர்களின் இலகுவான கற்றலுக்கும் கற்றலில் வெற்றி காண்பதற்கும் உதவியுள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

**பரீட்சைகளை எதிர்கொள்ளல்**

தேர்வில் வெற்றி பெறுவதற்கும் அதிக மதிப்பெண்களை வாங்கவும் குறுக்கு வழிகள் எதுவும் இல்லை. தைரியமாகத் தேர்வை எதிர் கொள்வது அவசியம். வினா க்களை நன்கு வாசித்து விளங்கி நன்றாகத் தெரிந்த வினாக்களுக்கு முதலில் விடை எழுதிப் பின் மற்றவற்றை எதிர்கொள்ளலாம்.

விடைகள் தெளிவாகவும் சுருக்கமாகவும் கருத்துகளை முன்வைத்து எழுதுதல் சிறந்தது. கையெழுத்துகள் நன்றாக இருப்பது அவசியம். ஒரு தேர்வு முடிந்தவுடன் அதைப் பற்றி விவாதித்துக் கலங்காமல் தேர்வுகள் அனைத்தும் முடிந்த பின் கலந்துரையாடல் நன்று. மேலும் இரவு நேரங்களில் அதிகம் கண் விழித்துப் படித்தல், பரீட்சை நேரங்களில் அதிக நேரம் ஓய்வின்றிக் கற்றல் என்பன மாணவர்கள் மனதை பாதிக்கும் என்பதை உணர்தல் அவசியம்.

எனவே கற்றல் என்பது கடினமான ஒன்றல்ல. தகுந்த கற்றல் செயற்பாடுகளைக் கைக்கொண்டால் இலகுவாகக் கற்பதுடன் அதிக மதிப்பெண்களையும் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு ஆசிரியர், பெற்றோரும் உதவும் கரங்களாக அமைந்தால் மாணவர் தம் கற்றல் செயற்பாடுகளில் வெற்றி காண்பர் என்பது உறுதியாகும்.

க. மணிவண்ணன்
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : வளர் பிறை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர் : டி.எம்.சௌந்தரராஜன்



பூஜ்யத்துக்குள்ளே ஒரு
ராஜ்யத்தை ஆண்டு கொண்டு
புரியாமலே இருப்பான் ஒருவன்
அவனை புரிந்து கொண்டால்
அவன்தான் இறைவன் (பூஜ்யத்துக்குள்ளே)

தென்னை இளநீருக்குள்ளே
தேங்கியுள்ள ஓட்டுக்குள்ளே
தேங்காயை போல் இருப்பான் ஒருவன்
அவனை தெரிந்து கொண்டால்
அவன் தான் இறைவன் (பூஜ்யத்துக்குள்ளே)

முற்றும் கசந்ததென்று பற்றறுத்து வந்தவருக்கு
சுற்றமென நின்றிருப்பான் ஒருவன்
அவனை தொடர்ந்து சென்றால்
அவன் தான் இறைவன் (பூஜ்யத்துக்குள்ளே)

கோழிக்குள் முட்டை வைத்து
முட்டைக்குள் கோழி வைத்து
வாழைக்கும் கன்று வைத்தான் ஒருவன்
அந்த ஏழையின் பேர்
உலகில் இறைவன் (பூஜ்யத்துக்குள்ளே)

## கலைமுகம் சஞ்சிகை ஒரு பார்வை

ஒரு சமூகத்தின் பிரதிபலிப்பாகத் திகழ்வது ஊடகங்கள் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. ஊடகங்கள் எப்போதும் தனித்துவமாகவும் நடுநிலையாகவும் செயற்பட வேண்டும். அப்போதுதான் சமூகப் பிரதிபலிப்பை சமதளத்தில் நின்று கொண்டு உலகிற்கு எடுத்தியம்ப முடியும்.

யாழ்.மாவட்டத்தை மையப்படுத்தி பல தினசரி பத்திரிகைகள், வாராந்த இதழ்கள், சஞ்சிகைகள் என வந்து சென்றாலும் அது சமூக ஓட்டத்தை எதிர்த்து நின்று நிலைப்பதில்லை. அதற்கு மக்களின் வாசிப்புத்திறன் குறைவடைதல் ஒரு காரணமாக இருந்தாலும் மக்கள் விரும்பியது கிடைக்காததும் ஒரு காரணமாய் கொள்ளலாம்.





"ஈழத் தமிழர் பற்றிய உரையாடலில் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர் பற்றிக் குறிப்பிடாதிருக்க முடியாது. போருக்குப் பின்னரான சூழலில் எழும்பும் பல சவால்களுக்கு இங்கு வாழும் நாம் முகம் கொடுப்பதற்கும் சந்திக்கும் பன்முகப்பட்ட சிக்கல்களில் இருந்து மீள்வதற்கும் மழை விட்டும் ஓயாத தூவானம் போன்று தொடரும் துன்பியல் வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைவதற்கும் புலம்பெயர்ந்த நம்மவரின் ஆதரவு இன்றியமையாததாகின்றது..." எனும் ஆசிரியர் குறிப்புடன் வெளிவந்திருக்கிறது கலைமுகம் கலை இலக்கிய சமூக இதழ் 66. இலங்கைத் தமிழ் இலக்கியத் துறைகளில் நிலை மாற்றத்துக்கான நகர்வுகள், பழந்தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்தும் தமிழ்த் தேசியம், இலங்கைக் கட்டடக் கலை வரலாற்றில் பேசப்படாத காலி கோட்டை மீரான் பாள்ளிவாசல் என இன்னும் பல தரம் மிகு படைப்புக்களுடன் வெளிவந்துள்ளது. மாறிவரும் சமூகப் பிறழ்வுக்களுக்கு மத்தியில் சமூகத்தை சீர்திருத்த முறையில் இவ்வாறான கலை இலக்கி சஞ்சிகைகளை வாழ்த்தி வரவேற்போம். (கு)









# நல்லூர் பிரகடனத்தில் புதிய அரசியல் தலைமை

# அல்லைப்பிட்டியில் 11 ஆம் நூற்றாண்டு சீன மட்பாண்டப் பொருட்கள் மீட்பு







யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டியில், தாம் மேற்கொண்ட தொல்பொருள் அகழ்வாய்வில், 600 ஆண்டு பழங்கால சீன மட்பாண்டத்துண்டுகள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சீனாவின் ஷங்காய் அருங்காட்சியகம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்டெம்பர் 29ஆம் திகதி இந்த கண்டுபிடிப்புகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாக, சீனாவில்இருந்து வெளியாகும் 'சைனா டெய்லி' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது சீனாவிற்கும் மற்ற நாடுகளுக்கும் இடையில் பண்டைய கடல்சார் பட்டுப் பாதை வழியாக இருந்த இணைப்புகளைக் காட்டுவதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

சீனாவின் ஷங்காய் அருங்காட்சியகத்தின் தொல்பொருள் அதிகாரிகள், தமது முதலாவது வெளிநாட்டு அகழ்வாய்வு நடவடிக்கைகளை, கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கையில் மேற்கொண்டிருந்தனர்.

துறைமுக நகரான யாழ்ப்பாணம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 40 நாட்கள் விரிவான அகழ்வாய்வில், ஈடுபட்டனர்.

இதன்போது, அல்லைப்பிட்டி மற்றும் ஊர்காவற்றுறை கோட்டை சிதைவுப் பகுதிகளில், அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக, ஷங்காய் அருங்காட்சியக அதிகாரிகள் குழுவுக்குத் தலைமை தாங்கிய சென் ஜீ தெரிவித்தார்.

சென்னும் அவரது நண்பர்களும், அல்லைப்பிட்டிப் பகுதியில் 92.4 சதுர மீற்றர் பரப்பளவிலான இடத்தில் அகழ்வாய்வை மேற்கொண்ட போது, 650 வரையான மட்பாண்டத்துண்டுகளைக்கண்டெடுத்தனர். அவற்றில் 600 இற்கு மேற்பட்டவை சீனாவில் தயாரிக்கப்பட்டவை என்று சென் கூறினார். பெரும்பாலான சீன மட்பாண்ட துண்டுகள், 11 ஆம் நூற்றாண்டின் பின் அரைக்காலப் பகுதி அல்லது, 12 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலப்பகுதியைச் சேர்ந்தவையாகும் என்று ஷங்காய் அருங்காட்சியகத்தின், சீன மட்பாண்ட ஆய்வாளர் லூ மிங்ஹுவா தெரிவித்தார்.

கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டத் துண்டுகளில் கிண்ணங்கள், தட்டுகள், வட்டுகள் (saucers), பானைகள் அடங்குகின்றன. இதுபோன்ற மட்பாண்டங்கள், தற்போதைய சீன மாகாணங்களான குவாங்டொங் மற்றும் பியூஜியானில் வெளிநாட்டு விற்பனைக்காக தயாரிக்கப்படுகின்றன.

பண்டைய பட்டுப்பாதை தொடர்பான ஆய்வுகளை ஷங்காய் அருங்காட்சியகம் அதிகரித்துள்ளதாக அதன் பணிப்பாளர் யாங் ஷிகாங் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் சீனா தொடர்பான வரலாற்று ஆவணங்களில், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பயணங்கள், 2000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதாக கூறுகின்றன.

சீனாவைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளரான ஷெங், இலங்கைத் தீவுக்கு பலமுறை வணிக மற்றும் நட்புறவுப் பயணங்களை மேற்கொண்டார் என்பதை வெளிப்படுத்தும், கல்வெட்டு ஒன்று 1911 ஆம் ஆண்டு இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டது.

பண்டைய கடல்சார் பட்டுப் பாதை வணிக வழி, பயண வலைப்பின்னல்கள் மற்றும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கலாச்சார தொடர்புகள் குறித்த ஆய்வுகளில், இந்த தொல்பொருள் கண்டுபிடிப்பு முக்கியமான பங்கை வகிக்கும் என்று யாங் கூறினார்.

பண்டைய கடல்சார் பட்டுப் பாதையின் வரலாற்று ஆய்வுகளை மேற்கொள்வது, இலங்கையில் முக்கியமான சிதைவுகள் உள்ள பகுதிகளில் அகழ்வாய்வில் ஈடுபடுதல், கூட்டு கண்காட்சிகளை நடத்துதல், பணியாளர்களை பரிமாற்றம் செய்தல் தொடர்பாக, இலங்கையின் மத்திய கலாசார நிறுவகத்துடன், சீனாவின் ஷங்காய் அருங்காட்சியகம், ஐந்து ஆண்டு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சட்டம் தன் பணியைச் செய்ய இடமளிக்க வேண்டும்




பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இருவரையும் படுகொலை செய்யும் முயற்சியுடன் தொடர்புபட்டதற் கான போதுமான தகவல்கள் கிடைத்ததையடுத்து கடந்த வியாழக்கிழமை இரவு குற்றப் புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டதன் பின்னரே அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். இந்த ஐந்து நாட்களிலும் நாலக சில்வா 44 மணித்தியாலங்கள் விசாரிக்கப்பட்டிருப்பதாகவும் அவரது வாக்குமூலம் அவரை கைது செய்வதற்குப் போதுமானதாக அமையப் பெற்றுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி ஊழலுக்கு எதிரான படை எனும் அமைப்பின் நடவடிக்கைப் பணிப்பாளர் நாமல் குமார என்பவர் கண்டியில் ஊடக மாநாடொன்றின் போது தெரிவித்த கருத்துக்களின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, சி.சி. டியின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் ஆகியோரை கொலை செய்ய சதித் திட்டம் வகுத்த தொலைபேசி உரையாடல் குறித்து வெளிப்படுத்தியதையடுத்தே இது குறித்து விசாரணைகளை முன்னெடுக்க ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர நடவடிக்கை எடுத்திருந்தார்.

நாலக சில்வாவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது மேற்படி படுகொலை முயற்சிக்கான பல ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. திட்டமிட்டு இப்படுகொலைகளைச் செய்துவிட்டு அதற்கான பழியை புலம்பெயர் புலி உறுப்பினரான புஷ்பராஜாவும், பாதாள உலகத்தைச் சேர்ந்த ஒருவர் மீதும் சுமத்த திட்டம் வகுக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

மேற்படி சதித் திட்ட தொலைபேசி உரையாடல் பதிவான ஒலிப் பதிவு நாடாவை விசாரணையின் போது சமர்ப்பிக்க ஊழலுக்கு எதிரான படையின் பணிப்பாளர் நாமல் குமார தெரிவித்திருப்பதால் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுக்காமல் விட்டுவிட முடியாதெனவும், இதனோடு தொடர்புபட்டவர்களை பாதுகாப்பதற்கு எவருக்கும் வாய்ப்பளிக்கப்படக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் தலைவரையும், முன்னாள் பாதுகாப்புச் செயலாரையும் படுகொலை செய்வதன் மூலம் நாட்டில் மீண்டுமொரு அராஜக நிலையைத் தோற்றுவிக்க முனைப்புக் காட்டப்படுவதாகவே நோக்க வேண்டியுள்ளது.

அண்மைக்காலமாக சில சக்திகள் அரசை பலவீனப்படுத்த பல்வேறு முயற்சிகளையும் முன்னெடுத்து வருவதை அவதானிக்க முடிகிறது. அதுவும் நாட்டின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் பாரிய பொறுப்பைச் சுமத்தியிருக்கும் பொலிஸ் உயரதிகாரியே இந்தச் சதி முயற்சியில் தொடர்புபட்டிருப்பது பேரதிர்ச்சியை தரக்கூடியதொன்றாகும். பொலிஸ் தரப்பு மீது மக்கள் சந்தேகமும், அதிர்ச்சியும் கொள்ளக்கூடியதொரு சூழ்நிலை இதன் மூலம் உருவாகியுள்ளது. அமைதியை சீர்குலைக்கும் தேசத்துரோகக் குற்றச்செயலை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது.

ஜனநாயக அரசியல் நீரோட்டத்துக்குள் நாடு வந்த நாள் தொட்டு சில தீயசக்திகள் இடையிடையே பல சதி முயற்சிகளை மேற்கொண்டதை வரலாற்று ரீதியில் காண முடிகிறது.

1956இல் பிரதமர் பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்டார். பின்னர் ஒரு கால கட்டத்தில் இராணுவப் புரட்சியொன்றுக்கு திட்டமிடப்பட்டு இறுதி நேரத்தில் அதனை முறியடிக்க முடிந்தது. இப்படி சில மோசமான சம்பவங்களை இந்த ஜனநாயக நாடு எதிர்கொண்டதை மறந்துவிட முடியாது.

இதற்குப் புறம்பாக சில அரசியல் தலைவர்கள் கூட படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ, லலித் அத்துலத் முதலி, காமினி திஸாநாயக்க, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உட்பட பல தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் 2015 ஜனவரியில் மலர்ந்த நல்லாட்சி எனும் தேசிய அரசு ஆட்சிக்காலத்தில் இது விரைவில் அப்படியான சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. அரசு பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. என்றாலும் கூட அதனையும் மீறி சில கோடரிக்காம்புகளின் செயற்பாடுகள் விடயத்தில் அரசு மிக அவதானமாக நடந்துகொள்ள வேண்டியுள்ளது.

சிலர் இதனைக்கூட தமது சுயநல அரசியலுக்காகப் பயன்படுத்த முனைகின்றனர். நல்லாட்சியை கவிழ்க்க வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருக்கும் சிலர் இச்சிறு முயற்சிக்கு அரசியல் சாயம் பூசும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அரசிலிருந்து வெளியேறியுள்ள சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த டிலான் பெரேராவின் கூற்று அரசியல் நோக்கம் கொண்டதாகவே பார்க்க முடிகிறது.

நீண்டதொரு ஜனநாயக அரசியல் பாதையில் பயணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி மீது வீண்பழி சுமத்துவது நேர்மையான செயற்பாடாகப் பார்க்கவே முடியாது. ஜனநாயக சுதந்திரம் என்ற பெயரில் எதை வேண்டுமானாலும் கூறலாம் என நினைத்தால் அதன் பின்விளைவு மோசமானதாகவே அமைந்துவிடலாம்.

எது எவ்வாறாக இருந்த போதும் நாட்டின் ஸ்திரநிலைக்கு குந்தகம் ஏற்படக் கூடிய எந்தவொரு விடயத்துக்கும் இடமளிக்கப்படக் கூடாது. பயங்கரவாதம், வன்முறை, சதி முயற்சிகள் எந்தக் கோணத்தில் வந்தாலும் அவற்றை முறியடிக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் உள்ளதாகும். அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவோர் எத்தகைய நிலையில் இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கப்பட வேண்டியவர்களே யாவர்.

நியாயமான சந்தேகத்தின் அடிப்படையிலேயே நாலக சில்வாவை குற்றப்புலனாய்வுப் பிரிவு கைது செய்துள்ளது. இந்த விசாரணைகளில் தலையீடு செய்யவோ, குதர்க்கம் பேசவோ எவரும், எந்தத் தரப்பும் முனையக்கூடாது.

தேசத்தின் நலனைக் கருத்தில் கொண்டு நீதி விசாரணைக்கு வழிவிட வேண்டும் என்பதே முக்கியமான கைங்கரியமாகும். நீதித்துறை சுயாதீனமாக செயற்பட இடமளித்து பொறுமையுடன் இருக்க வேண்டியதே அரசியல் தலைமைகளின் பொறுப்பாகும். சட்டம் அதன் பணியைச் செய்ய இடமளித்து பொறுமை காப்பதே மிக முக்கியமானதாகும்.

# facebook

# வளையல்

வணிகன் அதை வேறொருவர் கேட்டிருக்கிறார், அதனால் உனக்கு அடுத்த முறை வாங்கி வந்து தருகிறேன் என்றான்.

இவளுக்கு மனசே கேட வில்லை. அதன் அழகு அப்படி அவள் மனசை ஈர்த்து விட்டது. இரவு இருவரும் அயர்ந்து தூங்கி கொண்டிருக்கும்பொழுது, இவள் மெதுவாக எழுந்து அந்த ஜோடி வளையல்களையும் மறைத்து வைத்து விட்டாள்.

மறுநாள் காலை வழக்கம் போல் வணிகன் எழுந்து தயாரானான். அவன் மனைவி எல்லா பொருட்களையும் ஒரு பெரிய துணி பையில் போட்டு அவனிடம் கொடுத்தாள். அவன் அதை சுமந்து கொண்டு வியாபாரம் செய்ய கிளம்பினான்.

பண்ட மாற்று முறை என்பதால் தனியாக ஒரு பையையும் எடுத்து செல்வான்.

ஒரு வளையல் ஜோடி கொடுத்தால், இரண்டு ஆழாக்கு தானியமோ, இல்லை இரண்டு பெரிய கருப்பட்டி துண்டுகளோ கிடைக்கும். இன்னும் கொஞ்சம் அதிக மதிப்புள்ள பொருள் என்றால் அதற்கு நகைகள் கூட கிடைக்கும். இப்படி நிறைய பொருட்களை சேகரித்து அதை சந்தைக்கு சென்று கொடுத்து இந்த கைவினைப் பொருட்களை வாங்கி வருவான்.

வணிகனின் மனைவி அவன் போன பின் அவசர அவசரமாக அவள் ஒளித்து வைத்திருந்த வளையலை எடுக்கச் சென்றாள். ஆனால் அந்த வளையல்கள் வைத்த இடத்தில் காணவில்லை. சுற்று முற்றும் தேடிப் பார்த்தாள் எங்கும் கிடைக்கவில்லை. எங்கு போயிருக்கும்? என்னவாயிருக்கும் என்று அதிர்ச்சியாய் நின்றாள்.

இங்கு இப்படி இருக்க அந்த ஜோடி வளையல்களின் கதை என்னெவென்றால்,

குச்சியூர் என்னும் ஊரில் இரு திருடர்கள், வசித்து வந்தனர். அவர்கள் இரவானதும் பலரது வீட்டில் கன்னம் வைத்து எது கிடைத்தாலும் சுருட்டி கொள்வர். அவர்கள் ஒருமுறை ஒரு வீட்டில் கன்னம் வைத்து உள்ளே போய் அங்கிருந்த ஒரு பித்தளை சொம்பை தூக்கி வந்து விட்டனர். அந்தோ பரிதாபம், அவர்கள் திருடிய இடம் ஒரு மந்திரவாதியின் வீடு. அவன் பித்தளை சொம்பை யார் எடுத்தார்கள் என்று கண்டு பிடித்து விட்டான். அவர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து அவர்கள் வளையலாய் ஆகிவிடுவார்கள் என்று மந்திரம் போட்டு விட்டான்.

இதை அறிந்த திருடர்கள், ஐயோ வென்று அந்த மந்திரவாதியிடம் ஓடி பித்தளை சொம்பை கொடுத்து விட்டு மன்னிப்பு கேட்டார்கள். இவர்களின் கெஞ்சலை பார்த்த மந்திரவாதி சரி. நீங்கள் இரவு மட்டும் மனிதர்களாகவும், பகலில் வளையல்களாகவும் இருப்பீர்கள், வளையல்களாக உங்களை பார்த்த உடனே அதன் அழகில் மயங்கி எடுத்து கொள்ள வேண்டும் என்று யாராவது ஒளித்து வைத்தால் அன்று உங்களுக்கு முழு உருவம் கிடைத்து விடும் என்று விமோசனம் சொன்னார்.

அது போலவே வணிகனின் மனைவி ஆசைப்பட்டு அந்த வளையலை கணவனுக்கு தெரியாமல் ஒளித்து வைக்க, வளையல்கள் சாப விமோசனம் பெற்று மனிதர்களாக உருமாறி தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடினர்.

அப்படி ஓடிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு திருடன் தன் நண்பனிடம் நாம் இனிமேல் திருட்டு தொழிலை விட்டு விட்டு உழைக்க ஆரம்பிக்க வேண்டும் என்றான். அதை கேட்ட மற்றவன் ஆமாம், ஆமாம், இனி மேல் நாம் இந்த திருட்டு தொழிலை விட்டு விடலாம், முடிவு செய்தவர்கள், சரி, பாவம் அந்த பெண், வளையல்களை ஒளித்து வைத்து விட்டு காலையில் அதை தேடிக் கொண்டிருப்பாளே? ஒருவன் கேட்க மற்றவன் கொஞ்சம் பொறு. நாம் அவன் கணவனுக்கு இதன் மூலம் ஏதாவது உதவி செய்து விடலாம் என்றான்.

வணிகனுக்கு அன்று அதிகமாக வியாபாரம் ஆகவில்லை. மனச்சோர்வுடன், வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தான். அப்பொழுது இரு திருடர்களும், அவனிடம் சென்று பேசினர். ஐயா எங்களிடம் கொஞ்சம் ஆபர ணங்கள் இருக்கின்றன. அதை உங்களுக்கு கொடுக்கிறோம். இதை கொண்டு போய் இந்த ஊர் கிராம தலைவரிடம் ஒப்படைத்தால் அவர் உங்களுக்கு பொன்னும் பொருளும் அளிப்பார் என்றான். வணிகனுக்கு ஒன்றும் புரியவில்லை. அதை நீங்கள் செய்யலாமே? என்னிடம் ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்டான்.



அவர்கள் நடந்த கதையை சொன்னார்கள். வணிகனின் மனைவி மூலம்தான் தாங்கள் சாப விமோசனம் பெற்றதும், இனிமேல் திருட்டுத் தொழிலை செய்வதில்லை என்று முடிவு செய்துள்ளோம். இது எல்லாம் கிராம தலைவர் வீட்டில் கொள்ளை அடித்தது. இதை கொண்டு போய் ஒப்படைத்து பரிசுகளை பெற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் இதை கண்டுபிடித்து கொண்டு வந்து தருபவர்களுக்கு பரிசு வழங்குவார்கள் என்று அறிவித்து உள்ளார்கள். அதனால் தைரியமாக எனக்கு புதரில் கிடந்தது என்று சொல்லுங்கள்.

வணிகன் மகிழ்ச்சியாக அதை பெற்றுக்கொண்டு கிராம தலைவரை பார்க்க சென்றான்.

வீட்டுக்கு வந்த பொழுது வணிகனின் மனைவி இவனை பயத்துடன் வரவேற்றாள். அவளுக்கு அந்த வளையல்கள், காணாமல் போனது ஒரு புறம், தன் கணவன் அதை எங்கே என்று தேடி, அதை நம்மிடம் கேட்டால் என்ன சொல்வது? இந்த கவலைகள்தான்.

ஆனால் வணிகனோ மிக மகிழ்ச்சியாக இருந்தான். அது மட்டுமல்ல தன் மனைவியை கூப்பிட்டு அவள் கையில் ஒரு பொருளை துணியால் சுற்றி கொடுத்தான். அதை பிரித்து பார்த்தாள்.


ஒரு ஜோடி வளையல்கள் அச்சு அசலாக காணாமல் போன வளையல் போல் இருந்தது. கேள்விக்குறியுடன் கணவனை பார்க்க, அவன் நடந்த அனைத்தையும் சொல்லி கிடைத்த பரிசுப் பொருளில் உனக்கு பிடித்த வளை யல்களையும் வாங்கி வந்தேன் என்றான்.

வணிகனின் மனைவிக்கோ மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. இருந்தாலும், தான் வளையலை மறைத்து வைத்தது தவறு என்றும், இனிமேல் அப்படி செய்ய மாட்டேன் என்றும் அவனிடம் உறுதி கூறினாள். **(முற்றும்)**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1541

### டினோயா

**நினைவுகள் எப்போதும் வித்தியாசமானவையாகவே இருக்கின்றன**



**சில நேரங்களில் சிரித்த நாட்களை நினைத்து அழவைக்கும்! அழுத நாட்களை நினைத்து சிரிக்க வைக்கும்**

### மேரி

**கடவுள் நல்லவங்களைத்தான் சோதிப்பாராம்**



**ஆனா நம்மள ஏன் சோதிக்கிறார் ஒரே கன்பியூசனாக இருக்கே**

### பிரீத்தி

**பெண் குழந்தைகளை திருமணம் செய்து கொடுக்கும்வரை சந்தோசமாக வைத்திருங்கள்**



**அவள் வாழப்போகும் இடத்தில் பிறர் மகிழ்ச்சிக்காக மட்டுமே வாழப் போகிறாள்**

### சாம்பவி

**பயத்தை விட்டு தைரியத்தை அணைக்கும் தருணத்தில்தான்**



**உன் வாழ்க்கை தொடங்குகிறது**

### பௌசி

**ஞாயிறு அசைவம் எடுத்து அதிகப்படியாய் செலவழித்ததை**



**மறுநாள் ரசம் வைத்துச் சரி செய்வதில் இருக்கிறது நடுத்தர வர்க்கத்தின் பொருளாதார கொள்கை**

### சந்தியா

**கிராமத்தில சீசீரிவி கமரா இரண்டு இருக்கும்**



**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 154

# மாணவர்களும் குருதி குளுக்கோசின் அளவை சோதித்துப் பார்க்கவேண்டும்



12வயது கடந்த அனைவரும் 3வருடங்களுக்கு ஒரு தடவை யாவது குருதி குளுக்கோசின் அளவைச் சோதித்துப் பார்த்துக் கொள்வது நல்லது.

இளம் வயதினருக்கும் தற் பொழுது அதிகளவில் நீரிழிவு நோய் ஏற்பட்டு வருவதால் இதனை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கு அனைத்து இளம்வயதினரும் குருதி குளுக் கோசின் அளவை சோதித்து பார்த்துக்கொள்ள வேண்டிய தேவை எழுந்திருக்கிறது.

சிறுவர்களுக்கும்இளம் வய தினருக்கும் ஏற்படும் நீரிழிவு நிலையை உடனடியாகப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய அவசரத்தேவை இருக்கிறது. காரணம் 40வயது கடந்து ஏற்படும் நீரிழிவு நோயு டன் ஒப்பிடும்பொழுது இளவய தில் ஏற்படும் நீரிழிவு நோயின் போது இரத்தக்குழாய்கள் பாதிக் கப்படும் வீதமும் உடல்பாதிப்பு வீதமும் அதிகம் என ஆராய்ச்சி கள் சொல்கின்றன.

இதன்காரணமாகவே இள வயது நீரிழிவு நோயாளர்களை ஆரம்பத்திலேயே கண்டறியும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டி ருக்கின்றன.

நீரிழிவு நோயின் ஆரம்ப நிலைக்கட்டுப்பாடு எவ்வாறு அமையவேண்டும் என்பது சம் பந்தமாக பல ஆய்வுகள் நடத்தப் பட்டிருக்கின்றன. இந்த ஆய்வு களின் முடிவுகளின்படி நீரிழிவு நோயின் ஆரம்பகால கட்டுப் பாடே அதிகமுக்கியமானது என் பது தெரிய வந்திருக்கின்றது. நீரிழிவுநோய் தோன்றிய ஆரம்ப காலத்தில் இது சிறந்த முறை யிலே முற்றாகக் கட்டுப்படுத்தப் படுமாயின் இதன் அனுகூலங்கள் பல்லாண்டு காலம் நீடிப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ந்துவரும் காலங்களில் நீரிழிவு நோயின் கட்டுப்பாடு குறைவாக இருந்தாலும் ஆரம்ப நிலைக் கட்டுப்பாட்டின் அனு கூலங்கள் தொடர்வது ஒரு புது மையான நிகழ்வாகும். இதனை மெற்றாபோலிக்மெமறி என்று சொல்லுவார்கள்.

எமது பிரதேசத்திலே நீரிழிவு நோயின் ஆரம்ப கட்டத்திலே கவனக்குறைவாக இருந்துவிட்டு நோய் கடுமையடைந்த பின்னர் மருந்தெடுக்க நினைக்கும் ஒரு மனோநிலையையே காணமுடி கின்றது. இதன் காரணமாகவே பல எதிர்மறையான விளைவு கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே 12வயது கடந்த அனை வரும் ஒரு தடவையேனும் தமது குருதி குளுக்கோசின் அளவை சோதித்துப்பார்க்க வேண் டும். அது அதிகரித்துக் காணப்படின் உடனடியாக வைத்தியசாலைக் குச் சென்று உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆரம்பம் முதலே இதற்கு பொருத்தமான நடவடிக்கை களை எடுப்போமாயின் நோயின் தாக்கமின்றி சாதாரண வாழ்க்கை வாழ முடியும்.

Dr.எஸ்.சிவன்சுதன்
பொதுவைத்திய நிபுணர்






பொலிவான மென்மையான சருமத்திற்கு
வெல்வட் சந்தனம் மற்றும் மரமஞ்சள்

பாரம்பரியம் தொட்டு பெண்களின் சரும அழகை மெருகூட்டி வரும்
சந்தனம் மற்றும் மரமஞ்சளின் குணநலன்கள் கொண்ட
புதிய வெல்வட் இப்போது ஹயிட்ரோசொ.ஃப்ட் டெக்னொலஜி உடன்.
உங்கள் சருமத்தின் ஈரப்பதனை தக்க வைத்து
பொலிவான மென்மையான சருமத்தை தரும்.

ரூ. 60/-

HEMAS